புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: மருது சுப்பிரமணியன்

10-8-1977

12



PUTHIYA SAMUDHAYAM

50 காசு

SP TRADING (M) SDN. BHD. அளிக்கும்



இளையராஜா• T.M. சௌந்தரராஜன்

சாய்பாபா• சசிரேகா. பூரணி

இணைந்து வழங்கும்

மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி!

கோலாலம்பூர் – ஸ்டேடியம் நெகாரா வில்

செப்டம்பர் 20, 21 ~ இரவு 7.30க்கு

சிரம்பான்
12-9-77

போர்ட்டிக்சன்
14-9-77

தெலுக்கான்சன்
15-9-77

பினாங்கு
16, 17-9-77

சுங்கைப்பட்டாணி
18-9-77

கூலிம்
19-9-77

கோலாலம்பூர்
20, 21-9-77

ஈப்போ
23-9-77

கிள்ளான்
25-9-77

NA-8

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு —குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஆவணி 25
கம்பம் 1 ∴ (10-9-1977) ∴ குடும்பம் 12



கூட்டுறவு

ரெ. இராமசாமி
அலோர்ஸ்டார்

ஒன்றித்துச் செயலாற்றும் இயக்கம் என்னும்
ஒன்றுபட்ட முயற்சியிலே ஒன்றல் என்னும்
குன்றிவளம் கொண்டோரின் பொருளா தாரம்
கூடிடவே வாய்த்ததொரு நிலைக்கா தாரம்
நன்றான சமஉரிமை நல்கும் நோக்கம்
நயமான தொண்டுகட்குப் பல்கும் ஊக்கம்
குன்றாத நலம்பெருக்கும் கொள்கை கொண்ட
கூட்டுறவே குவலயத்தில் சிறந்த தாகும்!

தனிமனித சுதந்திரத்தைப் போற்றச் செய்யும்
தரமான சிக்கனத்தைத் தரவே செய்யும்
தனிநலமே பொதுநலமாய்க் கொள்ளச் செய்யும்
தகைசார்ந்த சேமிப்பில் பழகச் செய்யும்
கனிவான அன்பினையே காக்கச் செய்யும்
கடும்போட்டி முறைகளையே ஒழிக்கச் செய்யும்
இனிதான சமூகத்தை அமைக்கச் செய்யும்
ஏற்றமிகு கூட்டுறவே என்றும் நன்றாம்!

வணிகநிதி பற்றார்க்கு வலக்கை போல
வந்துதவும் கூட்டுறவின் அமைப்பே சால
கனிசமாய் விவசாயப் பலனை வேண்டும்?
கட்டான கூட்டுறவே அதனைத் தாண்டும்
மணியான பண்டங்கள் வாங்க தற்கு
மக்களெலாம் விரும்பிமிக நாடு தற்கே
அணியான கூட்டுறவுக் கழகம் ஒன்றே
அமைந்தநலம் சமுதாய நலமொன் றேதான்!

நாட்டாட்சி இயங்குவதும் நண்புப் பண்பு
நலியாமல் இலங்குவதும் நம்பி நல்லாள்
விட்டாட்சி மேன்மையுற வெற்றி காண்டல்
வியன்கலைகள் சுவையாக விளங்க வைத்தல்
பாட்டாட்சி நடத்துமொரு பாட கன்தான்
பக்கஇசை யாளர்களின் ஒத்து ழைப்பாம்
கூட்டாட்சி எனும்பண்பால் கூடல் போலக்
கூட்டுறவால் இவையாவும் கூடும் தானே!

அட்டைப்படம்

மலாக்கா மெதடிஸ்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் மூன்றாம் பாரம் படித்துவரும் குமாரி விக்னேஸ்வரி, பரதக் கலையில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். மலாக்கா கஜபெராங் கைலாசநாதர் கோவிலில் அர்ச்சகராகப் பணிபுரியும் திரு. இராமலிங்கம் அவர்களின் புதல்வியான இவர், தனது 5-ஆவது வயது முதல் பரதத்தில் ஈடுபாடு கொண்டுள்ளார்.

படம்-தகவல்: வி. பி. பொன்னுதுரை, மலாக்கா

இலங்கையில் களங்கம்

ஸ்ரீலங்கா எனப்படும் இலங்கைத் தீவில் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அங்கு மூண்டிருக்கும் இனக் கலவரமும், அதன் பலனாக நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் இழந்திருப்பதும் அந்த நாட்டுக்குக் கறுப்பு முத்திரையாக—நீங்காத களங்கமாக-மாறாத வடுவாக அமைந்துவிட்டன. இந்த மிருகத்தனமான கலவரத்தினால் இலங்கையில் சிறுபான்மையாக இருக்கும் தமிழர் சமூகமும், இலங்கையில் குடியேறி அந்நாட்டின் வளத்துக்கு அரும்பாடு நல்கியிருக்கும் இந்தியத் தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளார்கள்.

அவர்களின் உடைமைகளுக்கு ரூபாய் 70கோடிக்குமேல் இழப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது தவிர ஆயிரக்கணக்கில் அகதிகளாக, தாம் வேலை பார்த்த இடங்களையும் வியாபாரம் செய்த பகுதிகளையும் பல ஆண்டுகளாக வசித்து வந்த குடியிருப்புக்களையும் விட்டு இடம் பெயர வேண்டிய இக்கட்டான – திக்கற்ற சூழ்நிலையும் இந்தியத் தொழிலாளர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் நேரிட்டிருக்கிறது.

புதிய பிரதமர் ஜெயவர்த்தனா தலைமையில் இயங்கும் இலங்கை அரசாங்கம் இந்தக் கலவரத்தை அடக்குவதில் உறுதியான போக்கைக் கடைப்பிடித்து வருவது வரவேற்கத்தக்கது. பொதுத் தேர்தலில் படுதோல்வியைத் தழுவிய திருமதி பண்டாரநாயகாவின் கட்சியினரே இக்கலவரத்திற்குக் காரணகர்த்தாக்கள் என்று ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் கூறி வருகிறது. கைது செய்யப்பட்டிருக்கும் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்களில் பழைய அரசாங்கத்தின் மந்திரிகளும் இருப்பது அரசாங்கத்தின் குற்றச்சாட்டை மெய்ப்பிக்கிறது. எது எப்படி இருப்பினும் சிறுபான்மை சமூகமாக வாழுகின்ற இலங்கைத் தமிழர்களையும் அவர்களின் உடைமைகளையும் பத்திரமாகப் பாதுகாக்கும் பொறுப்பினை ஜெயவர்த்தனா அரசாங்கம் மேலும் தீவிர உறுதியோடும் மனப்பூர்வமாகவும் நிறைவேற்றுமென்று நம்புகிறோம்.

இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதிக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, நடந்து முடிந்த தேர்தலில் 17 இடங்களைப் பெற்று நாடாளுமன்றத்தில்

எங்கள் அலுவலகம்

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01-08. தொலைபேசி:80839

முக்கிய எதிர்க்கட்சியாக இடம் பெற்றிருப்பது, இனவெறியர்கள் இக்கலவரத்தை மூட்டிவிட்டதற்குக் காரணமாக இருக்கவும் கூடும். தங்களின் பிரிவினை கோரிக்கையைத் தேர்தல் வாக்குறுதியாக வைத்துத் தமிழர் முன்னணி வெற்றி பெற்றிருப்பதால் அவர்களை அச்சுறுத்தும் நோக்கத்திலும் இக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கலாம். எப்படி இருப்பினும் இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டவர்கள் இலங்கைத் தமிழர்களின் பிரிவினை கோரிக்கைக்கு மறைமுகமாக மேலும் வலுவை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவே கருதுகிறோம். இலங்கைத் தமிழர்களின் நியாயமான உரிமைகளும், கோரிக்கைகளும் நெடுங்காலமாக ஆளுங்கட்சியினரால் புறக்கணிக்கப்பட்டு வந்திருப்பதாலேயே தமிழர் முன்னணிக்கு இத்தேர்தலில் இத்துணை பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. இலங்கையின் மற்றப் பகுதிகளில் ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி நிகரற்ற வெற்றியைப் பெற்றிருந்தும் தமிழ் மக்கள் வாழும் வட-கிழக்கு மாநிலங்களில் அந்த அளவு வெற்றியை அதனால் ஈட்டமுடியவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது.

ஆகவே ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் இனக்கலவரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதியை நிலைநிறுத்துவதோடு, இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கும் திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம்.

எந்த ஜனநாயக ஆட்சியிலும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்குவது அரசியல் அறமாகும். இலங்கை அரசாங்கம் இந்த அறநெறியை முழுமையாக கடைப்பிடிக்குமென்று ஜனநாயக உலகம் எதிர்பார்ப்பது நியாயமே.

அநியாயச் சாவு

துவான் மீ செம்பனை ஆலையின் கொதிகலன் கட்டிளங்காளைகளான நான்கு இளைஞர்களின் உயிரைக் குடித்திருப்பது, விபத்தும் மரணமும் செம்பனை ஆலைகளில் பணி புரியும் ஊழியர்களுக்கு எத்துணை நெருக்கமாக இருக்கிறது என்பதை உணர்த்தும் பயங்கரமான எச்சரிக்கையாகும்.

இத்தகைய கொதிகலன் விபத்துக்கள் செம்பனை ஆலைகளில் மறுபடியும் நிகழாதபடி எல்லாப் பாதுகாப்புக்களையும், தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் செம்பனைத் தோட்ட நிர்வாகங்கள் மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம்.

முன்பு ஈயச்சுரங்கங்கள் திடுதிடுப்பென்று ஈயக்குட்டைகளிலுள்ள தண்ணீரை திறந்து விட்டதால் பக்கத்திலுள்ள பகுதிகள் வெள்ளக்காடாகி அதன் பலனாக உயிரிழப்பும், வீடிழப்பும், கால்நடை இழப்பும் கணிசமாக நேர்ந்தன. அத்தகைய சம்பவங்களுக்கு விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான இழப்பீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே துவான் மீ விபத்தில் குடும்பத்தலைவர்களைப் பறிகொடுத்த குடும்பங்களுக்கும் மற்றும் இவ்விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தக்க இழப்பீடுகளைச் சம்பந்தப்பட்ட செம்பனை ஆலை நிர்வாகம் வழங்குமென்று நிச்சயம் எதிர்பார்க்கிறோம்.

சரிநிகர் சமம்

பினாங்கு, சிலாங்கூர் மாநிலங்களில் இடைநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளிடையே போதைப் பழக்கம் எந்த அளவுக்கு வேரோடி இருக்கிறது என்பதைக் கண்டறிந்த அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்கள் குழு, திடுக்கிடும் ஓர் உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறது. போதைப் பழக்கத்திற்கு மாணவர்கள் மட்டும் அடிமையாகவில்லை. மாணவிகளும் நிறைய பேர் அடிமைப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் அந்த அதிர்ச்சி தரும் உண்மையாகும்.

ஆண்கள் மட்டுமே பெரும்பாலும் போதைப் பழக்கத்திற்குப் பலியாகிறார்கள் என்று நிலவிவந்த பொது நம்பிக்கைக்கு இது பலத்த அடியாகும். "இந்தத் துறையில் நாங்களும் ஆண்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல; இளைத்தவர்கள் அல்ல; எங்களுக்கும் இதில் சமபங்கு உண்டு" என்று இடைநிலைப்பள்ளி மாணவிகள் அம்பலத்திற்கு வந்திருக்கிறார்கள். சிலாங்கூரில் இரு மாணவருக்கு ஒரு மாணவி விதமும், பினாங்கில் சரிக்குச் சரியாகவும் இடைநிலைப்பள்ளி மாணவ மாணவிகளிடையே இந்தப் போதைப் பீடை ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பெற்றோர்களுக்கும் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களுக்கும் இந்தக் கண்டுபிடிப்பு சரியான முன்னெச்சரிக்கையாக அமைந்து, பள்ளிக் கூடங்களில் நமது இளவட்டங்களிடையே இந்தப் பயங்கரத் தீமை மேலும் பரவாமல் தடுப்பதற்கு வழிவகைகள் உறுதியான முறையில் மேற்கொள்ளப்படுமென்று நம்புகிறோம்.

தியேட்டர் அதிபர்களே!

விசனக் கவிதை

'ஆவன்னு'





தியேட்டர் அதிபர்களே,
செவிகொடுத்துக் கேளுங்கள்!
தமிழ்ப்படத்தின் ரசிகர்கள்
சார்பாக நான்வைக்கும்
கோரிக்கை பாருங்கள்!
குறைகளைய வாருங்கள்!

திரையரங்கின் உள்ளே
சேர்ந்தாற்போல் நாங்களொரு
மூன்றுமணி நேரம்
முழுசாக இருப்பதில்லை!
ஆனாலும் அங்கே
அமர்வதற்கு நாற்காலி
வரிசை தவறாமல்
வைத்தே இருக்கின்றீர்!


ஐந்தரைக்குப் படமென்றால்
ஐயன்மீர், தியேட்டருக்கு
ஒன்றரைக்கே நாங்கள்
ஓடி வருகின்றோம்!
ஆகமொத்தம் பார்த்தால்
அரங்குக்கு வெளியே
நாங்கள் இருப்பதொரு
நால்கு மணிநேரம்!

அல்லூர்க் கரையினிலும்
ஆங்காங்கே தரையினிலும்
வாசற் படிகளிலும்
வட்டமிட்டு வட்டமிட்டு
உட்கார்ந்திருக்கின்றோம்!
ஒருவசதி தானுண்டா?

ஆசையினால் எங்கள்
அவதிகளைப் போக்குதற்குச்
சிறிது மனம்வைத்துத்
தியேட்டருக்கு வெளியே
பயன்கருதி ஒருநூறு
பாய்வாங்கிப் போடுங்கள்!

காத்திருக்கும் நேரத்தில
கழுத்தை அறுப்பதுபோல்
கூப்பாடு போடும்எங்கள்
குழந்தைச் சனியன்கள்
தூங்கித் தொலைப்பதற்குத்
தொட்டில்கட்டத் தோதாகக்
கைக்கெட்டும் உயரத்தில்
கனத்த மரச்சட்டம்
ஆறேழு மாட்டுங்கள்!
அல்லல் மிகக்குறையும்!

டிக்கெட்டு வாங்கத்
தியேட்டருக்கு வருமுன்னே
அடகுக் கடைசென்று
அடமானம் வைத்துவர
நேரம் செலவாகும்
நிலைமைதனை மாற்றுதற்கு
டிக்கெட்டு விற்கும்
சிறிய அறையோடு
பாசாக் கடையொன்றும்
பக்கத்தில் திறவுங்கள்!





ஐஸ்குடிக்க 'தே'குடிக்க
ஆரஞ்சு நீர்குடிக்க
செண்டோல் குடிக்கச்
சிறுகடைகள் இருப்பதுபோல்
அங்குமிங்கும் நாங்கள்
அலையாமல் எளிதாகத்
"தண்ணி" குடிப்பதற்கோர்
தள்ளுவண்டி வையுங்கள்!

மூச்சோடு மூச்சாய்
முழுதும் கலந்துவிட்ட
திரைப்படங்கள் பார்க்கஇந்தச்
சிலவசதி செய்துதந்தால்
ஓராயிரம்நன்றி
உரைத்திடுவோம் உங்களுக்கு!
ஆதலினால் ஐயன்மீர்,
அருள்கூர்ந்து உதவுங்கள்!
எங்கள் பிறவி
இனிதே கடைத்தேறும்!

நையாண்டிமேளம்

உறவுப் பயணம்

அது எங்களுக்கு முதல் பயணம்!

ஆசிரியர் முருகு. "புதிய சமுதாயம்" ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நகைச்சுவைப்பித்தன், புகைப்படக் கலைஞர் மாயன், நான் ஆகிய நால்வரும் ஒரு சேர முதன் முறையாக மேற்கொண்டிருந்த பயணம் அது.

"27-8-77 சனிக்கிழமை பகல் ஒரு மணிக்கெல்லாம் என் இல்லத்திற்கு வந்துவிடுங்கள்; பகல் சாப்பாடு என் வீட்டில்தான்; அதற்குப் பிறகு தான் மற்றவையெல்லாம்" என்று அன்புக் கட்டளை இட்டிருந்தார், லிங்கி தமிழ் இளைஞர் மணி மன்றத் தலைவர் திரு. இராமச்சந்திரன்.

அன்போடு அவர் அளிக்கும் விருந்தை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில் (இந்த ஆவல் எனக்குத்தான். மற்றவர்களுக்கு இருந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது) அன்றைய தினம் பதினொரு மணிக்குப் புறப்பட்டோம்.

ஒரு மணிக்கெல்லாம் நண்பர் இராமச்சந்திரனின் வீட்டுச்சாப்பாட்டை ருசிக்கவேண்டும் என்ற எனது ஆவல், கோலாலம்பூரிலுள்ள கார்களுக்குக் கொஞ்சங்கூடப் புரியவில்லை. எங்களது வண்டியைப் போகவிடாமல் சாலைக்குச் சாலை, சந்திக்குச் சந்தி செராஸ் எல்லையைக் கடக்கும் வரையிலும் தடுத்தன. அந்த அளவுக்கு "டிராபிக் ஜேம்"

தலைநகரில் "டிராபிக்" நெருக்கடியிலிருந்து தப்பித்து எங்களின் வண்டி சிரம்பான் நெடுஞ்சாலையில் அடி எடுத்து வைத்தவுடன் ஓட்டுநர் இராமசாமி தமது காரோட்டும் திறமையைக் காண்பிக்க ஆரம்பித்தார். கார் சிட்டாகப் பறக்கவில்லை; ராக்கெட்டாகப் பாய்ந்தது.

சிரம்பானிலிருந்து ரந்தாவ், ரந்தாவிலிருந்து லிங்கி சென்றடைந்தது வண்டி. அப்போது மணி இரண்டரை ஆகிவிட்டிருந்தது.

பசித்த முகத்தோடு இருந்த எங்களைப் பசிக்காத முகத்தோடு வரவேற்றார் இராமச்சந்திரன். எங்களுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருந்துவிட்டுப் பசிதாளாமல் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவர் கையலம்பிய வேளை பார்த்து நாங்கள் சென்றால் அவரது முகத்தில் பசிக்களை தோன்றுமா என்ன!

வீட்டினுள் நுழைந்ததும் என் கண்கள் சாப்பாட்டு மேசையை நோக்கின. அங்கே மற்றுமொரு நண்பர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"எங்கள் மன்றத்தின் செயலாளர் திரு. முனியாண்டி" என்று அவரை அறிமுகப்படுத்தி வைத்தார் இராமச்சந்திரன். நாங்கள் அனைவரும் சாப்பிடத் துவங்கினோம். நண்பர் இராமச்சந்திரனின் துணைவியார் மிகவும் சிறப்பாக-மிகவும் சுவையாகச் சமைத்திருந்தார். அதற்குச் சாட்சி...? சாப்பாட்டு மேசையிலிருந்து கடைசியில்தான் என்னால் எழ முடிந்ததே, அதுதான்.

"புதிய சமுதாயம் இதழை எங்கள் வட்டாரத்தினருக்கு நாங்கள் அறிமுகப்படுத்துவதைவிட நீங்களே நேரில் வந்து அறிமுகப்படுத்தவேண்டும் என்பது என் விருப்பம். ஒரு முறை வந்து செல்லுங்கள்" என்று ஆசிரியர் முருகுவுக்கு இராமச்சந்திரன் கடிதம் எழுதி இருந்தார்.

அவருடைய வேண்டுகோளை ஏற்றுப் "புதிய சமுதாயத்தை" அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடு அன்று எங்கள் முதல் பணயம் துவங்கியது.

ம. இ. கா. வும்...

மணிமன்றத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் மட்டுமல்ல, ம. இ. கா. வைச் சேர்ந்த திரு. கருப்புச்சாமியும் இத்தகைய ஓர் அறிமுகக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருப்பது லிங்கி சென்ற பிறகு எங்களுக்குத் தெரியவந்தது. ம. இ. கா. கிளைத் தலைவரும், ஆர்வமும் செயல் திறனுமிக்க இளைஞருமான கருப்புச்சாமி செங்காங் தோட்டத்தில் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அது முதல் கூட்டம்; மாலை 4 மணிக்கு நடந்தது. இரண்டாவது கூட்டத்தை லிங்கி மணி மன்றத்தின் சார்பில் இராமச்சந்திரன், தம்பின் லிங்கி தோட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தார். அது இரவு ஏழு மணிக்கு நடந்தது.

முதல் கூட்டத்திற்காக லிங்கியிலிருந்து சுமார் ஐந்து மைல் தொலைவிலுள்ள செங்காங் தோட்டத்திற்கு 4 மணிக்குச் சென்றோம். காலையில் மழைபெய்ததால் அங்குள்ள மக்கள் "அந்தி வெட்டு"க்குச் சென்றிருந்தார்கள். வேலை முடிந்து களைத்து நான்கு மணியளவில்தான் வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்கள், தங்கள் களைப்பைப் பொருட்படுத்தாது அங்குள்ள அண்ணா படிப்பகத்திற்கு வந்தது, புதிய சமுதாயம் இதழைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் அவர்களது ஆர்வத்தைப் புலப்படுத்தியது.


அந்தக் கூட்டம் . புதிய சமுதாயத்தின் அறிமுகக் கூட்டமாகவும் அதே சமயத்தில் அண்மையில் மாட்சிமை தங்கிய பேரரசரால் ஏ. எம். என். விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட திரு. என் வேலுசாமி அவர்களைப் பாராட்டும் கூட்டமாகவும் நடந்தது. திரு. வேலுசாமி நெகிரி மாநில ம.இ.கா. துணைத் தலைவராகவும், நேசா இயக்குநராகவும் இருந்து வருகிறார்.

கவிஞர் சி. ம. இளங்கோ அவருக்குப் பாராட்டுக் கவிதை வாசித்தளித்தார். முதல் அங்கம் முடிந்து புதிய சமுதாய அறிமுகமாகிய இரண்டாவது அங்கம் துவங்கியது. ஆசிரியர் முருகு புதிய சமுதாய இதழைப் பற்றி விளக்கினார்.

விலை ஏறுமா?

அவரது விளக்கவுரைக்குப் பிறகு அன்பர் ஒருவர், "தற்போது ஐம்பது காசாக உள்ள இதழின் விலை எதிர்காலத்தில் கூடுமா?" என்று கேட்டார்.

அதற்கு ஆசிரியர் பதிலளிக்கும் போது "கூட்டவேண்டும் என்பது எங்களின் விருப்பமல்ல; கூட்டித்



செங்காங் தோட்டத்தில் ம. இ. கா. கிளைத் தலைவர் திரு கருப்புச்சாமி பேசுகிறார். ஆசிரியருக்கு வலப்பக்கத்தில் அமர்ந்திருப்பவர் திரு. என். வேலுசாமி ஏ. எம். என்.

தான் ஆகவேண்டும் என்ற நிலையில் அதன் உற்பத்திச் செலவு கூடிவிட்டால் பத்திரிகையின் விலையும் கொஞ்சம் கூடும் என்பதை வாசகர்களாகிய நீங்கள் ஏற்பீர்கள் என்று நம்புகிறோம்" என்று குறிப்பிட்டார்.

"சார், இவர்தான் செங்காங் தோட்டத்தில் "புதிய சமுதாயம்" விற்பனைக்குப் பொறுப்பேற்க ஆர்வமுடன் முன்வந்திருப்பவர். பெயர் பி. ஆறுமுகம்" என்று இளைஞர் ஒருவரை ஆசிரியரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார் கருப்புச்சாமி.

"ஆறுமுகம்" என்றதும் எனக்கு அவர் மீது தனிப்பற்று ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் என்னுடைய இயற்பெயரும் ஆறுமுகம். நண்பர் நகைச்சுவைப்பித்தனின் இயற்பெயரும் ஆறுமுகம்.

தம்பின் லிங்கி

அந்தக் கூட்டத்தை முடித்துக்கொண்டு தம்பின் லிங்கித் தோட்டத்திற்கு இரவு ஏழு மணிக்குச் சென்றோம். அங்குள்ள கல்யாண மண்டபத்தில் கூட்டம் நிகழ்ந்தது.

இராமச்சந்திரனின் வரவேற்புரைக்குப் பின் அங்குள்ள ம. இ. கா. கிளையின் முன்னாள் தலைவர் திரு. கோபாலன், மணிமன்றத்தின் காப்பாளர் திரு. சாமிநாதன் இருவரும் பேசும்போது "புதிய சமுதாயம்" இதழைப் பற்றி மிக விளக்கமாகப் பேசினர்.

அவர்கள் புதிய சமுதாயத்தைப் பற்றிக் கூறிய விளக்கமே போதுமானது என்கிற அளவுக்கு அவர்களின் பேச்சு அமைந்திருந்தது. பிறகு ஆசிரியரும் நகைச்சுவைப் பித்தனும், நானும் பேசினோம்.

தம்பின் லிங்கி தோட்டத்தில் புதிய சமுதாயம் விற்பனைக்குரிய பொறுப்பை யார் எடுத்துக்கொண்டிருப்பார் என நினைக்கிறீர்கள். சந்தேகமில்லாமல் திரு. இராமச்சந்திரன் தான்.

"நானும் நண்பர் முனியாண்டியும் இங்கு புதிய சமுதாயத்தை விநியோகிக்கும் பொறுப்பை எடுத்துக்கொள்கிறோம்" என்று நண்பர் இராமச்சந்திரன் கூறியதோடு மட்டுமல்ல; அங்கேயே கணிசமான பிரதிகளையும் பெற்றுக்கொண்டார்.

மருதமுத்து

கூட்டத்தின் முடிவில் சிரம்பானைச் சேர்ந்த மருதமுத்து என்னும் பெரியவர், ஆசிரியரிடம் ஒரு கோரிக்கை விடவேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளியிட்டார்.

தாம் குடியிருந்த நிலத்தைப் பண வசதி படைத்த ஒருவர் பறித்துக்கொண்டதாகவும் அதனைத் திரும்பப்பெற 1952-ஆம் ஆண்டு முதல் சட்ட ரீதியாகத் தாம் முயன்று வருவதாகவும் அவர் சொன்னார்.

"சிரம்பான் நீதிமன்றத்தில் எனக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் வசதி படைத்த அப்பணக்காரர் பெடரல் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தபோது அங்கு அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பாகிவிட்டது. பெடரல் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து நான் இப்போது லண்டன் பிரிவி கவுன்சிலில் வழக்குத் தொடர்ந்திருக்கிறேன். ஆனால் அதற்குப் போதுமான பண வசதி என்னிடம் இல்லை. என்னுடைய நியாயத்தை உணர்ந்து மக்கள் தொண்டன் வி. டேவிட்டும் மலேசியத் திராவிடர் கழகமும் நன்கொடை தரும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். "புதிய சமுதாயமும்" எனக்கு இவ்வகையில் உதவவேண்டும். போதிய நிதியுதவி கிடைத்து நான் அந்த வழக்கில் வெற்றிபெற்றுவிட்டால், அந்த நிலத்தை நமது சமுதாயத்தினருக்குப் பயன்படும் வகையில் மாற்றித் தந்துவிடுகிறேன்.

பிரிவு கவுன்சில் வழக்கு நிதிக்கு நன்கொடை தேவை. புதிய சமுதாயத்தின் வாசகர்கள் நிதியுதவி செய்ய வேண்டும். வி. கே. மருதமுத்து, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், 500, ஜாலான் திமியாங், அஞ்சல் பெட்டி எண்: 4, சிரம்பான் என்னும் முகவரிக்கு தயவுசெய்து நன்கொடைகளை அனுப்பி உதவுங்கள்" என்று பெரியவர் மருதமுத்து கேட்டுக்கொண்டார்.



மனக்குறையை விளக்குகிறார் மருதமுத்து.

இதுவரை சுமார் $2000 நன்கொடை சேர்ந்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

அவரது பிரச்சினையைத்தெரிந்துகொண்ட பிறகு நமது சமுதாயத்திற்கு மூலை முடுக்குகளில் எல்லாம் பிரச்சினைகள் உருவாகின்றனவே என்ற வருத்தம் மேலிட்டது.

நியாயத்திற்காகப் பண வசதி படைத்தவர்களோடு தனி ஒருவராக நின்று - அதிலும் ஏழையாக நின்று போராடும் மருதமுத்துவைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தம்பின் லிங்கி தோட்டத்தில் நெஞ்சில் நிலைத்த சம்பவம் பெரியவர் மருதமுத்துவின் வழக்கு மட்டுமல்ல. இன்னும் ஒன்றும் இருந்தது. அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் கிட்டத்தட்ட எல்லாரும் புதிய சமுதாயத்தின் நிரந்தர வாசகர்கள் ஆனார்கள். செங்காங் தோட்டத்திலும் கணிசமானவர்கள் வாசகர்களானார்கள் என்பதையும் மறக்கமுடியாது.

புதிய சமுதாயம் பத்திரிகை வளர்ந்தோங்க வாசகர் கூட்டம் பெருகவேண்டும். என்று எண்ணி, தாமாகவே இத்தகைய அறிமுகக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த இராமச்சந்திரனையும் அவருக்குத் துணையாக இருக்கும் முனியாண்டியையும் மறக்கமுடியுமா? பெங்களான் லெப்பாஸ் ம. இ. கா. கிளைத் தலைவர் கருப்புச்சாமியை மறக்க முடியுமா? பொதுவாக செங்காங் தோட்டத்து மக்களையும் தம்பின் லிங்கி தோட்டத்து மக்களையும் மறக்கமுடியுமா?

இத்தகைய மறக்க முடியாத நினைவுகளைச் சுமந்த நெஞ்சங்களோடு நாங்கள் அனைவரும் முதற் பயணத்தை முடித்துக்கொண்டு அன்றிரவு தலைநகர் திரும்பினோம்.

-பாதாசன்



தம்பின் லிங்கி தோட்டத்தில் திரு. இராமச்சந்திரன் பேசுகிறார்.

பால்மரக் காட்டினிலே



12. பாலனின் கண்ணீர்

கண்ணம்மாவுக்கான காரியங்கள் முடிந்த பிறகு பழனியின் குடும்பத்தாருக்கு ஆறுதல் அளிப்பதற்காகப் பாலன் அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்திருந்தான். கண்ணம்மாவைப் பறிகொடுத்த துயரத்திலிருந்து மீளாத நிலையில் அந்தக் குடும்பத்துக்கு எஸ்டேட்டை விட்டு வெளியேற வேண்டிய நெருக்கடியும் வந்துவிட்டது. எல்லாருமாக ஒருவேளை சேர்ந்து சாப்பிடுவதற்கும் மனம் விட்டுப் பேசுவதற்குமாக அவர்களைப் பாலன் கூப்பிட்டிருந்தான்.

மத்தியானச் சாப்பாடு முடிந்தவுடன் லயத்து வீட்டின் கீழ்ப் பகுதியில் அவர்கள் கூடினார்கள். பெஞ்சுகளின் மேல் ஆண்கள்; தரையில் பெண்கள்.

ஒன்றி வாழ்ந்த குடும்பங்கள் பிரியும் காலம் நெருங்கிவிட்டது. இடையில் இன்னும் இரண்டு நாட்கள் கூட இல்லை. சாபாவுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைப் பழனி செய்து முடித்திருந்தான்.

பதினேழு பதினெட்டு வயதில் அங்கு வந்து சேர்ந்த பழனிக்கு இப்போது வயது நாற்பத்தாறு. கிராப் புத்தலையில் அங்கங்கே நரை படர்ந்திருந்தது. மேலே பனியனும் இடுப்பில் நாலு முழத் துணியுமாக எங்கோ பார்வையைச் செலுத்தியபடி இருந்தான் பழனி.

"எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து போகிற காலம் உனக்கு வந்திடுச்சு" என்றாள் வேலம்மாள்.

தன் அக்காளின் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளாதவன் போல் "பழைய கதையே திரும்பவும் நடக்கும் போலவே தெரியுது; முப்பது வருசத்துக்கு முன்னாலே எப்படி இந்தக் காட்டுக்குள்ளே நுழைஞ்சேனோ, அப்படியே இனிமேல் சாபாக் காட்டுக்குள்ளேயும் நுழையப் போறேன்" என்றான்.

இதைக் கேட்டவுடன் வீரப்பனின் கண்கள் கலக்கமுற்றன. பழனியை வற்புறுத்தி அங்கே அழைத்து வந்தவன் அவன். மைத்துனன் தன்னோடு வந்தால் தனக்கும் மனைவிக்கும் துணையாக இருப்பான் என்று அழைத்து வந்தான். அந்த நம்பிக்கை இன்று வரை வீண்போகவில்லை. ஆனால் இப்போது பழனிக்கு யார் துணை போவது?

"இந்தக் குடும்பத்துக்காக நீ எவ்வளவோ பாடுபட்டிருக்கே. இப்ப உனக்குக் கஷ்டம் வந்த காலத்திலே எங்காலே உதவ முடியலே. உதவி செய்யக் கடமைப்பட்ட முருகனே நம்மோட நம்பிக்கையிலே மண்ணைப் போட்டுட்டான்" என்றான் வீரப்பன்.

"அதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்? நம்ம கையிலே ஒண்ணும் இல்லே. ஒண்ணுமே இல்லே..." தலையை ஆட்டினான் பழனி.

"சாபாவிலே நிலைமை எப்படி இருக்கோ? எப்படி நீங்க காலங் கழிக்கப் போறிங்களோ? அதையெல்லாம் நினைச்சாத்தான் எனக்கு..." தொண்டையை அடைத்துக்கொண்டது வீரப்பனுக்கு.

"இதுவரைக்கும் நீங்களும் நானும் அக்காளும் படாத கஷ்டத்தை விடவா இனிமே நாங்க பட்டுடப் போறோம்? நாம கப்பலேறி வந்தது, கரை சேர்ந்தது, காட்டுக்குள்ளே புகுந்தது, சவுக்கடி பட்டது, கட்டிக்கத் துணியில்லாமல் சாக்கைக் கட்டிக்கிட்டு அக்கா அவதிப்பட்டது, ஜப்பான்காரன் காலத்திலே நாம பயத்துலேயும் பட்டினியிலேயும் பட்ட அவஸ்தை... இதையெல்லாம் நினைச்சுப்பாருங்க" என்றான் பழனி.

சற்று நேரம் அங்கே மௌனம் குடிகொண்டது. வீரப்பன், வேலம்மாள், பழனி மூவருமே சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னே தொடங்கி தங்கள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை அவரவர் மனப்போக்குப்படி எண்ணிப் பார்க்கலானார்கள். சுப்பன் கங்காணி என்று ஒருவன் அவர்கள் கிராமத்துக்கு வந்து அவர்களை வலை வீசிப் பிடிக்காமல் இருந்திருந்தால் அவர்கள் நிலை இன்று எப்படி இருந்திருக்குமோ தெரியாது.

தோட்டங்களில் அப்போது கங்காணிகளின் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். இப்போது நிலைமை அடியோடு மாறி, கங்காணிகளின் செல்வாக்குக் கரைந்து, கிராணிகளின் செல்வாக்கு உயர்ந்துவிட்டது. அந்தக் காலத்திலோ கங்காணிகள்தாம் வெள்ளைக்காரர்களின் செல்லப் பிள்ளைகள்; அவர்கள் வைத்ததுதான் சட்டம். படிப்பும் பண்பாடுமில்லாத கங்காணிகளின் கையில் அதிகாரமாகிய சவுக்கைக் கொடுத்துக் கூலிபாட்களை நொறுக்கச் சொல்லிவிட்டு, தாங்கள் மிகவும் நல்லவர்கள் போலவும் கருணை காட்டுகிறவர்கள் போலவும் நடந்துகொண்டார்கள் வெள்ளைத் துரைமார்கள். அடிப்பதற்குக் கங்காணிகள்; அரவணைப்பு நாடகம் நடத்துவதற்குத் துரைமார்கள்.

சுப்பன் கங்காணி இவர்களைப் போலவே இன்னும் இருபது ஆட்களை நாகப்பட்டினத்துக்கு வளைத்துக்கொண்டு வந்திருந்தான். அவனைப் போலவே வேறு சில கங்காணிகளும் தங்கள் தங்கள் ஆட்களை அங்கே கொண்டு வந்திருந்தார்கள். வந்தவர்களில் ஆண்களே அதிகம்; பெண்கள் கால்வாசிப் பேர்கூட இல்லை. வீரம்மாளுக்கு அப்போதே நெஞ்சில் பயம் குடிகொண்டுவிட்டது. ஆனாலும் துணைக்கு ஒரு பக்கம் கணவனும் மறுபக்கம் தம்பியும் இருந்ததால் அவள் கப்பலில் புறப்படுவதற்கு ஒப்புக்கொண்டாள்.

கப்பலில் ஐந்தாறு நாள் அவர்கள் பட்ட தொல்லை கடவுளுக்குத்தான் வெளிச்சம். எவ்வளவு பேர்களை ஏற்றிக்கொள்ளலாம் என்று சட்டம் இருந்ததோ அதைவிட இரண்டு மடங்குக் கூட்டம் அதில் திணிக்கப்பட்டது. கப்பல் கரையை விட்டுப் புறப்பட்ட முதல் நாளே பலருக்குத் தலைசுற்றி வாந்தி எடுக்கத் தொடங்கியது. கப்பலின் அடித்தளத்தில் அடைத்திருந்த அவர்களால் அங்குமிங்கும் நகரக்கூட முடியவில்லை. சாப்பாடு என்ற பெயரில் எதையோ பொங்கிப்போட்டார்கள். அதைக்கூடப் பலரால் தொடவும் முடியவில்லை. அங்கேயே சாப்பாடு; அங்கேயே வாந்தி; அங்கேயே படுக்கை; அங்கேயே எல்லாம்! மயங்கிய நிலையில் கிறங்கிக் கிடந்தார்கள் பலர். புறப்பட்ட மூன்றே நாட்களில் கப்பலின் கீழ்த்தளம் பெரியதோர் சாக்கடைக் குழியாக மாற்றப்பட்டுவிட்டது. அதில் புழுக்களாக நெளிந்து வந்தது ஒப்பந்தக் கூலிகளின் கூட்டம். கப்பலில் அப்போது வீசிய நாற்றத்தை இப்போது நினைத்தால்கூட வேலம்மாளுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

பினாங்குக்கு ஒரு வழியாய் வந்து சேர்ந்தது கப்பல். அங்கே தொற்று நோய்த் தடுப்புக் கூடாரங்களில் அவர்களை ஒரு வாரம் அடைத்துப் போட்டார்கள். அப்போது ஏதேதோ அச்சிட்ட தாள்களை எடுத்துக்கொண்டு வந்து, கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களிடம் கையெழுத்துக்களையும், போடத் தெரியாதவர்களிடப் பெருவிரல் கைரேகைகளையும் வாங்கிக் கொண்டான் சுப்பன் கங்காணி.

"எதுக்கு இதை வாங்குறீங்க?" என்று கேட்டான் வீரப்பன்.

"உங்களுக்கெல்லாம் நான் செலவு பண்ணியிருக்கேனல்லே? உங்களுக்குச் சாப்பாடு போட்டது, ரெயில் செலவு, கப்பல் செலவு பண்ணினது, உங்களைக் கூட்டிக்கிட்டு வர்ரதுக்காக உங்க ஊர்க் கணக்கப்பிள்ளை, மணியம் முதல் கொண்டு பல பேருக்கு அங்கங்கே வாய்க்கரிசி போட்டது, இதுக்கெல்லாம் நான் துரைமார்களோட பணத்தைக் குடுத்திருக்கேனல்லே?

அகிலன்

இதையெல்லாம் நீங்க தோட்டக்காரத் துரைமாருங்களுக்குத் திருப்பித் தர வேண்டாமா?"

"நாங்க திருப்பித் தரணுமா?" என்று கலவரத்தோடு கேட்டான் பழனி.

"பணமாத் திருப்பித் தர்ரதுக்கு நீங்க எங்க போவீங்க?" என்றான். ஒவ்வொருவருக்கும் தலைக்கு ஐம்பது ரூபாய் செலவு செய்துவிட்டு, இருநூறு ரூபாய்க்குப் 'பிராமிசரி' நோட்டு எழுதி வாங்கினான் கங்காணி.

"வேறே நாங்க என்ன செய்யணும்?"

"ஒரு வருசத்துக்கு நம்ப தோட்டத்திலே வேலை செய்யறதா ஒப்பந்தம் செஞ்சுக்கணும். உங்க கூலியிலே ஒரு பங்கைக் கடனுக்குக் கட்டிட்டு, பாக்கியை வச்சுக்கிட்டு, வயித்தைக் கட்டி வாயைக் கட்டிப் பொழைப்பு நடத்தணும். கடன் தீர்ந்திட்டாப் பிறகு முழுச் சம்பளமும் வாங்கிக்கலாம். முன்னாலே எல்லாம் மூணு வருசத்துக்கு ஒப்பந்தம் செய்துக்குவோம். இப்போ ஒரு வருசம் போதும்னு சட்டம் வந்திருக்காம்."

சுப்பன் கங்காணி அங்கிருந்து போனபிறகு, அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு பழைய தொழிலாளி வருத்தத்தோடு சிரித்துக் கொண்டே கூறினான்: "ஒரு வருசத்திலே உங்க கடன் தீரப்போகிறதுமில்லே; நீங்க இதிலேயிருந்து இந்தச் சன்மத்திலே மீளப் போகிறதுமில்லே. ஆயுசுக் காலம் வரைக்கும். அதுக்கப்பறம் உங்க பரம்பரை பரம்பரைக்கும் இந்தக் கடன் தீராதபடி பார்த்துக்குவாங்க கங்காணிங்களும் அவுங்க துரைமாருங்களும்" என்றான்.

பிறகு, தோட்டம் என்று சொல்லப்படுகிற ஒரு காட்டுக்கு அவர்களை மோட்டாரிலும் மாட்டு வண்டியிலுமாக அழைத்துச் சென்றனர். குடியிருப்பதற்காக அவர்களுக்கு அப்போது ஒதுக்கியிருந்த லயன் வீடுகளில் இப்போதுள்ள வசதியில் கால்வாசிகூட இல்லை. செம்பனைக் கீற்று வேய்ந்த மாட்டுத் தொழுவங்களை வீடுகள் என்று சொல்லப்பட்டன. பெரிய பள்ளங்கள் வெட்டி அவற்றில் மழை நீரைத் தேக்கி வைத்திருந்தார்கள். குடிப்பதற்கு, குளிப்பதற்கு, துவைப்பதற்கு எல்லாமே அந்தத் தண்ணீர்தான்.

ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் பத்து மணி நேரம் வேலை செய்ய வேண்டும். வாரத்துக்கு ஆறு நாட்கள் வேலை செய்யவேண்டும். வெளிக்காட்டு வேலைகளையும் பார்த்துக்கொண்டு மரம் வெட்டவும் அவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். நோய் நொடிகளைத் தீர்க்க ஒரே ஒரு வைத்தியன்தான் அங்கே அப்போது இருந்தான்; கண்ணம்மாவுக்கு விடுதலை அளித்த அந்த ஒரு வைத்தியனையே பலரும் அங்கே நம்பிக்கொண்டிருந்தார்கள்.

சுப்பன் கங்காணியின் சுயரூபம் தோட்டத்துக்குள் அவர்கள் நுழைந்த பிறகேதான் வெளிப்பட்டது. "கழுதைங்களா!" என்று அவன் அடிக்கடி பயன் படுத்திய சொல், வெறும் வாய்ச்சொல் மட்டும் அல்ல. அவற்றின் கூட்டத்தை விரட்டுவதைப் போலவே அவன் அங்கே தன்னிடம் வேலை பார்த்து வந்த மனிதர்களையும் விரட்டி வந்தான். அவனிடம் மறுத்துப் பேச முடியாது; எதிர்த்து வாதாட முடியாது. அவன்தான் அந்தத் தனிக் காட்டின் ராஜா.

காலம் மாறியது; கங்காணியின் கொட்டம் அடங்கியது. ஆனால் ஆள் மாற்றந்தான் ஏற்பட்டதே தவிர, அதிகாரப் போக்கில் அதிகமான மாறுதல் ஏற்படவில்லை. கங்காணிகளின் அதிகாரங்களைக் கிராணிகளுக்கு மாற்றினார்கள்.

இடையில் இரண்டாவது உலகப் போர் தொடங்கியது. அதை அடுத்து ஜப்பானிய விமானங்கள் மேலே பறந்து குண்டுகள் வீசின. தொடர்ந்தாற்போல் தோளில் துப்பாக்கி மாட்டிய ஜப்பானிய ராணுவத்தார் நாலு பக்கங்களிலிருந்தும் தோட்டக்காட்டுக்குள் புகுந்தார்கள். செய்தியைக் கேட்டவுடனேயே பல துரைமார்கள் தப்பி ஓடிவிட்டார்கள். அகப்பட்டவர்களின் பாடு அதோகதியாகிவிட்டது.

ஜப்பானியர் ஆட்சிக்காலத்து நினைவு வந்தவுடனேயே "ஜப்பான்காரன் காலத்திலே கூட எப்படியோ நாம உசிர் தப்பிச்சுப் பொழைச்சிட்டோம்" என்றான் பழனி. "மனசினாலே எவ்வளவு கஷ்டத்தைத் தாங்க முடியுங்கறதைச் சோதனை செய்து பார்த்திட்டான் அவன். கண்டவங்களோட கழுத்தையெல்லாம் வெட்டி மரக் கம்பத்திலே நட்டு வச்சான். ஒருநாளைக்குக் கூட கட்டி வராத அரிசியை ஒரு வாரத்து "ரேசனா"க் குடுத்து நம்மைப் பட்டினி போட்டான். கட்டிக்கத் துணி இல்லாமல் நம்ப பொம்பளைங்க சாக்குத் துணியாலே மானத்தை மறைச்சுக்க வேண்டிய நிலை வந்திடுச்சு. தமிழ்நாட்டிலேருந்து வந்த தோட்டத் தொழிலாளிங்க லட்சம் பேருக்கு மேலே அவன் போட்ட "சயாம் மரண ரெயில்வே"யிலே செத்துப் போயிருக்காங்க. நாம மட்டும் எப்படி இன்னம் உசிரோட



இருக்கோம்? இது அதிசயந்தான். நம்ம கையிலேஒண்ணுமே இல்லே".

ஜப்பான்காரர்களுக்கு எதிரான கொரில்லாப் படையில் சேர்ந்து சிறிது காலம் காட்டுக்குள் மறைந்திருந்தான் பழனி. இருந்துங்கூட அடிக்கடி இரகசியமாக வந்து தன் அக்காள் குடும்பத்தை அவன் பார்க்கத் தவறவில்லை. விரப்பனே நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து பர்மாவுக்குப் போய் வந்தான். இந்த இடைக் காலத்தில் குழந்தைகளை வைத்துக் கொண்டு வேலம்மாள் பட்ட துன்பங்கள்!

"எப்படியோ காலம் மாறிடுச்சு. நாட்டுக்குச் சுதந்திரமும் வந்தாச்சு. தொழில் சங்கமும் நமக்கு இப்போ இருக்கு" என்றான் பழனி.

"இருந்துங்கூட. இப்படி வந்திடுச்சே மாமா?" என்றான் பாலன்.

"நடந்ததைப் பத்திக் கவலைப் படாதே பாலா!" என்ற பழனி, "நான் உன்கிட்டேதான் சில சங்கதி பேசணும்னு நினைக்கிறேன்" என்று சொல்லிப் பாலனின் முகத்தைப் பரிவோடு உற்றுப் பார்த்தான்.

"சொல்லுங்க மாமா".

"நான் படிக்காதவன்; நீ படிச்ச புள்ளே. நான் சொல்லி உனக்கு ஒண்ணுந் தெரியப் போறதில்லே. இருந்தாலும் என் மனசுலே கிடந்து அடிச்சுக்கறதை உங்கிட்டே சொல்லிடறேன்".

"படிப்பு என்ன மாமா படிப்பு! படிக்க வேண்டியதைப் படிக்காமல் நாங்க எதை எதையோ படிச்சுக்கிட்டிருக்கோம்".

"பாலா. என்னோட அக்கா, அத்தான், அவுங்களோட மத்தக் குழந்தைங்க எல்லாரையும் நான் உன் கையிலேதான் விட்டுட்டுப் போறேன். நீயும் முருகனைப்போலே, பெத்த தாய் தகப்பனை மறந்திட்டுப் பெரிய மனுசனாயிடாதே. நீ நல்லாப் படிச்சு முன்னுக்கு வா. கைநிறைய சம்பாரிச்சுச் சந்தோசமா இரு. ஆனாலும் தோட்டக் காட்டிலே பாடுபடறவங்களுக்கு உன்னாலே எந்த வழியிலே உதவி செய்ய முடியுமோ அந்த வழியிலே உதவி செய். நீ செய்யக்கூடியவன்கிறதைத் தெரிஞ்சுதான் நான் இதைச் சொல்றேன்".

"கட்டாயம் செய்யறேன், மாமா".

"கண்ணம்மா போயிட்டதைப் பத்திக் கவலைப் படாதே. ரொம்ப ரொம்பப் புத்திசாலிப் பொண்ணு அது. நம்ப ரெண்டு பேர் குடும்பத்துக்கும் கஷ்டம் வரக்கூடாதுன்னு தான் அது இப்படிச் செய்திருக்கு. நம்ம தலைவிதி நம்ம கையிலேதான் இருக்குன்னு சிலபேர் சொல்லுவாங்க. ஆனால் தோட்டத்திலே வேலை செய்யிறவங்களோட தலைவிதி நமக்குக் கூலி கொடுக்கிறவங்க கையிலேதான் இருக்கு. நம்ம கையிலே ஒண்ணுமே இல்லே."

"இந்த நிலையை மாத்தணும் மாமா" என்றான் பாலன்.

"மாத்துங்க மாத்துங்க" என்றான் பழனி; "உன்னைப் போலே படிச்ச புள்ளைங்க மனசு வச்சால் எங்களுக்கு வந்திருக்கிற கஷ்டம் அடுத்த தலைமுறைக்காவது வராமல் இருக்கும்".

நோட்டீஸ் கெடு முடிந்த மறுநாள் பழனியின் குடும்பத்தாரை வழியனுப்பி வைப்பதற்காகப் பாலனின் வீட்டார் அங்கே சென்றிருந்தார்கள். கோலாலம்பூர் வரையில் சென்று அவர்களை ரயிலேற்றி விடுவதற்காகப் பாலன் மட்டும் பள்ளியில் இரண்டு நாட்களுக்கு விடுமுறை பெற்றிருந்தான்.

தோட்டத்தின் உள்ளே மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. வெளியேற வேண்டியவர்களுக்கெல்லாம் கணக்குத் தீர்த்துப் பணம் கொடுத்துவிட்டார்களாம்.

சாமான்கள் என்று சொல்லிக் கொள்ளப் பலரிடம் ஏதும் இல்லை. சட்டி பானைகள், குவளைகள், கோரைப் பாய்கள், அரிக்கேன் விளக்குகள்முதலியவையே. செட்டும் சிக்கனமுமாய் வாழ்ந்தவர்களிடம் மட்டிலும் பித்தளைப் பாத்திரங்கள் ஓரளவு சேர்ந்திருந்தன; துணி மணிகள் வைத்து எடுக்கும் 'டிரங்'குப் பெட்டிகள் காணப்பட்டன. தங்க நகைகள் கூடச் சில பெண்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள். கள்ளையோ, "சம்சு" என்ற கள்ளச் சாராயத்தையோ குடித்துப் பழகியவர்கள் வீடுகளிலிருந்து வெளியில் எடுத்து வருவதற்குப் பொருள்கள் மிஞ்சியிருக்கவில்லை.

நண்பன் கணேசனிடம் சொல்லி வாடகைக் கார் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தான் பாலன். சாமான்களைக் காரில் ஏற்றினார் பழனி. தங்கம்மாள், காமாட்சி, காமாட்சியின் இரு தம்பிகள் ஆகியோர் காருக்கு வந்தார்கள். வழியனுப்ப வந்திருந்த பாலனின் குடும்பத்தாரால் கண்ணீரை அடக்க முடியவில்லை. அதே தோட்டத்தில் வேலை செய்த பாலனின் அக்காள் லட்சுமியும் அங்கு வந்து கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றாள். வாய்விட்டே புலம்பலானாள் பாலனின் தாய் வேலம்மா.

கடைசியாகப் பாலன் காரில் ஏறிக்கொண்டவுடன் கார் செம்மண் புழுதியைக் கிளறிவிட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டது. வெளி வாயிலைக் கடந்தவுடன் அங்கே பாலன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. காரைச் சற்றே நிறுத்தச் சொல்லி நன்றாக உற்றுப் பார்த்தான். காணச் சகிக்காத காட்சி அது.

பஸ்ஸுக்காக அங்கே ஒரு சிறு கூட்டம் மூட்டை முடிச்சுகளோடும் குழந்தை குட்டிகளோடும் காத்துக் கொண்டு நின்றது. அதைப் பார்த்துப் பாலன் திடுக்கிடவில்லை. போவதற்கு ஏதோ ஓர் ஊரோ, உற்றார் உறவினர் வீடோ, அல்லது ஓர் உறைவிடமோ அவர்களுக்கு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் நம்பிக்கையோடு பஸ்ஸுக்குக் காத்து நிற்க மாட்டார்கள்.

ஆனால் பாலனைத் திடுக்கிட வைத்த காட்சி அங்கங்கே மரத்தடி நிழலில் சிதறிக் கிடந்தது. பத்துப் பன்னிரண்டு குடும்பத்தார் சாலை ஓரங்களிலேயே தங்கி விட்டார்கள். கற்களை அடுக்கி அடுப்பாக்கி உலை வைத்திருந்தார்கள். மரக்கிளைகளில் தொட்டில்கள் கட்டிக் குழந்தைகளை விட்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் மண்வெளியே மாளிகையா? வானமே கூரையா? புல் தரையே மஞ்சமா?

மழை பெய்தால், இடி இடித்தால், காற்றடித்தால் என்ன செய்வார்கள்? எங்கே போவார்கள்? கையில் உள்ள காசு தீர்ந்துவிட்டால் எப்படி அரிசி வாங்கி உலை வைப்பார்கள்? இரவு வேளையில் நடுக் காட்டில் எப்படி அவர்கள் வாழ்வார்கள்?

பாலனுக்கு அப்போதுதான் கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்தது. அதை அவனால் அடக்க முடியவில்லை. நிறுத்தியிருந்த கார் மீண்டும் அங்கிருந்து கிளம்பியது.

(தொடரும்)

புத்தகத்தைப் பாதுகாக்க...

- புத்தகத்தை அதிகமாகப் பிரிக்காதீர்கள்
- பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்கள்
- மூலைகளை மடிக்காதீர்கள்
- தூக்கம் வரும்போது எடுத்து வைக்க மறவாதீர்கள்
- தலையணையாக வைத்துக் கொள்ளாதீர்கள்
- வைக்கும்போதும் கொடுக்கும்போதும் விசியெறியாதீர்கள்
- ஆணின் மீதோ பூமியிலோ அடிக்காதீர்கள்
- குழந்தைகளிடம் கொடுக்காதீர்கள்
- திருப்புங்களும் கோடுகளும் எழுதாதீர்கள்
- எண்ணெய், தண்ணீர் பட்ட கையோடு தொடாதீர்கள்

-வி. ராஜூ, கோலப்பிலா.





முதுபெரும் புலவருக்கு மணிவிழா

பினாங்கு செந்தமிழ்க் கலா நிலையத்தை நிறுவி, அதன்மூலம் அரை நூற்றாண்டுக்கும் மேலாக மலேசியாவில் தமிழ்ப் பணி புரிந்து வருகிறவர் முதுபெரும் புலவர் சுவாமி இராமதாசர் அவர்கள்.

சுவாமி இராமதாசர் அவர்களுக்கு இம்மாதம் 16.9.77 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.30 மணி துவக்கமாக பினாங்கு தேவான்ஸ்ரீ மண்டபத்தில் மணிவிழா (அறுபதாண்டு நிறைவு விழா) நடைபெறுகிறது. அன்னார்தம் தமிழ்ப் பணி மேலும் தழைத்தோங்கத் தமிழன்னையின் அருள் கிட்டுவதாக!

“சுவாமி இராமதாசரும் நானும், ஈ.வெ.ரா. பெரியார் விழாக்களிலும் மற்றும் சில கூட்டங்களிலும் பலமுறை ஒரே மேடையில் பேசியுள்ளோம்.

சுவாமி இராமதாசர் தன்னலமற்ற சமுதாயத் தொண்டர். தமிழில் மிகவும் சிறப்பு வாய்ந்த புலவர். சொல்லாழமும் பொருளாழமும் மிக்க பேச்சாளர். அவர் பேச்சு மிகத் தெளிவாகவும் ஈர்க்குந்தன்மையும் உடையது. வண்டி, வாகனம் இல்லை என்றாலும் முயற்சியாலும் சமூகமும், தமிழும், சமயமும் வளர வேண்டுமே என்ற ஆர்வத்தாலும் கால்நடையாகவே சென்று பணி செய்பவர். பல திறன்மிக்க கவிஞர்களையும் தொண்டர்களையும் பேச்சாளர்களையும் உருவாக்கியவர். இன்றும் உருவாக்கிக்கொண்டிருக்கும் சிறப்பாளர்.

அத்துடன் வைத்தியம், சோதிடம் முதலியவற்றிலும் தேர்ச்சியுடையவர். இப்படி நிறையக் கலைகளைக் கற்றிருந்தாலும் அடக்கமும் பண்பும் உடையவர்.”

(19.7.1959-இல் சிங்கை ஆதித் திராவிடர் முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில் தமிழவேள் கோ. சாரங்கபாணி ஆற்றிய தலைமையுரையிலிருந்து)

பாவையர் பக்கம்

பூலோர் இண்டி

தேவையானவை:

1 கட்டி வெள்ளைப் பூலோர், அரை மூடி தேங்காய், 3() காசு கருப்பட்டி, 4 பாண்டான் இலை, வாழை இலை, தேவையான அளவு உப்பு.


செய்யும் முறை:-

பூலோரைக் கழுவி ஊறவைக்கவும். தேங்காய்ப் பூவை இரு பாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தைப் பால் பிழிந்து அதில் உப்புச் சேர்த்து, பாண்டான் இலையையும் சேர்த்து, ஊறவைத்த பூலோரில் ஊற்றி அவிக்கவும்.

ஒரு பாத்திரத்தில் கருப்பட்-டியைப் பாகாக்கி, தேங்காய்ப் பூவை அதில் கொட்டிக் கிளறி, நீர் இல்லாமல் அதைக் கிளறி விடவும்.

வாழை இலையில் பூலோரை வைத்து, தேங்காய்ப்பூவை அதன் மேல் தூவிச் சாப்பிடலாம். மாலைத் தேநீருடன் சாப்பிட இது சுவையாக இருக்கும்.

-குமாரி அமுதா,
பெல்டா கூலாய் பெசார், ஜொகூர்.



மேசை விரிப்பு, மெத்தை விரிப்பு, தலையணை உறை போன்றவற்றுக்கு இப்படி 'எம்பிராய்டரி' செய்யுங்கள் - அழகாக இருக்கும்.

-எம். கே. தேவி,
பத்தாங் பெர்சுந்தை.

மாங்காய்

மாங்காய் ஊறுகாயில் உள்ள மாங்காய்த் துண்டுகள் தீர்ந்த பின்னர் மீதமுள்ள காரத்தில் காரட் அல்லது முட்டைக் கோசைப் பொடியாக நறுக்கிப் போடுங்கள். நன்குக ஊறிய பின்னர் ஊறுகாயைப் போல் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

பட்டுப் புடவைகளைத் துவைத்த பிறகு சிறிது மண்ணெண்ணெய் விட்டு அலசி எடுத்தால் சாயம் போகாமலும், பூச்சி அரிக்காமலும் இருக்கும்.

வாழைத் தண்டை நறுக்கியவுடன் சிறிது மோர் கலந்த தண்ணீரில் போட்டு வைத்தால் கறுக்காமலிருக்கும்.

முட்டைக்கோசைச் சமையலுக்கு நறுக்கும்போது சுலபவேலை என்று எண்ணி அப்படியே துண்டாக நறுக்காதீர்கள். ஒவ்வோர் இலையாக எடுத்துப் பிறகு பொடியாக நறுக்குங்கள். ஒவ்வோர் இலைக்கு அடியிலும் நீண்ட புழுக்கள் குடியிருக்கும்.

-குமாரி பி. ஆர்.
கிருஷ்ணவேணி.
பாலாவ் தோட்டம், சிமினி.

கண்டேன்

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே

சாதி, குலம், குடிப்பிறப்பு என்னும் சுழியிலே அகப்பட்டு, அவற்றால் ஏற்படும் பற்றுக்களாலே அறிவு தடுமாறி, ஆதரவற்றவனாகி இருந்த நாயினேனைத் துன்பமறுத்து அடிமை கொண்டு, என் பேதைமைக் குணத்தையும், பிறர் வடிவின் நினைவையும், "யான்" "எனது" என்னும் செருக்குச் சொற்களையும் மாய்த்துக் குற்றமற்ற அமுதமாக ஆகிய அவனை, அருள் விளங்குகின்ற தில்லையம்பலத்திலே யானும் கண்டேன்!

—திருவாசகம் 31:5

தூய பெருநாளின் படிப்பினைகள்



மௌலவி ஹாஜி ஏ. சேக் அலாவுதீன்
தலைமை இமாம்,
தென்னிந்திய முஸ்லிம் பள்ளிவாசல், கோலாலம்பூர்.

எப்பொருட்கும் இறைவனே! எப்பொருட்கும் உரியவனே! எப்பொருட்கும் காவலனே! எப்பொருட்கும் வாழ்வளிப்பவனே! எங்களை வாழவைக்கிறாய்! எங்களுக்கு அருகில் இருப்பவர்க்கும், தூரதேசத்தில் இருப்பவர்க்கும் உன் இனிய, இன்ப அருள் காற்றைப் படர விட்டிருக்கிறாய். அக்காற்றின் அன்புடைமையை ஒவ்வோர் இல்லத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் காணச் செய்கிறாய்.

நிமிடத்திற்கு நிமிடம் தனது கருணைகளையும், காருண்யங்களையும் மறைமுகமாக எங்கள் மீது வாரி வழங்கிடும் இருலோகக் காருண்யன் அல்லாஹ்வை, நாம் புகழ்வோமாக. அவன் இருக்கிறான்; அவன் வாழ்கிறான்; அவன் வாழ வைக்கிறான் என்பதற்கான அறிகுறிகளையும், காரண காரியங்களையும், விடைக்கு விடை எடுத்தியம்பிக் கொண்டு அறிவுறுத்திக்கொண்டிருக்கும் அன்பான அல்லாஹ்வை நாம் புகழ்வோமாக.

விண்ணகமும், மண்ணகமும், பனிபடர்ந்த காடுகளும், சந்திரனும், சூரியனும், கருமேகக் குவிமலைகளும் "அவனைத் தவிர எவருமிலர், அவனே தனித்தவன், அவனே கூட்டுறவு இல்லாதவன்" என்று சான்று கூறிக்கொண்டிருக்க, உயிருக்கு உயிரான கலிமாவை ஓதிட ஓதிட உயிர் அணுக்கள் பசுமையடைகிற, அனைத்து மாந்தரின் காவலன் என்று நாம் சான்றுவோமாக.

நமது தலைவர் பெருமான், நமது பரோபகாரச் செம்மல், முஹம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் அடியாரல்லவா? அவனின் தூதரல்லவா? அவர்களின் தலைமைத்துவமானது, சமானிய மொக்குகளை, பசுமையாக்கவில்லையா? அவர்கள் வழிகாட்டித் தந்த செந்நெறிகள், தூங்கிக் கிடந்த இதயங்களை மலரவைக்கவில்லையா? ஆம், அத்தகைய நாதர், நமது நாதர் என்பதற்கு நாமே சான்றுவோமாக.

அன்பான அல்லாஹ், அவர்களுக்கும், அவர்களது வமிசத்தாருக்கும், அவர்களது சகாக்களுக்கும் அருள் கூர்வானாக! நாடு நாடாக, தேசம் தேசமாகச் சென்று இஸ்லாமிய ஏகத்துவக் கொடியை நிலைநாட்டினரல்லவா? அவர்களது தியாகத்தாலும், விவேகத்தாலும் சன்மார்க்கம் மேம்பட்டிருக்கவில்லையா? இன்றைக்கோ, நாளைக்கோ அத்தியாகச் சுவடுகளை விலை கொடுத்து வாங்க முடியுமா? அன்பான அல்லாஹ்! இந்தப் பசுமையான நாளில் அவர்களுக்கும், எங்களுக்கும், எல்லா முஸ்லிம் மாந்தர்க்கும் பசுமையை வழங்கவேண்டும்.

இவை அனைத்தும் அறிந்து வைத்த பின்னர், பெருமக்களே! மகிழ்ச்சியும், மனநிறைவும், மனப் பொருத்தத்தோடு கூடிய உறவும் இத்திருநாளில் நிழலாடுகிறது.

அன்புச் சகோதரரிடையே, ஆதரவுமிக்க நண்பர்களிடையே, அன்புப் பரிமாற்றமும் ஆதரவுத் தியாகமும் நிகழ்த்திட இத்திருநாள் வகைசெய்கிறது.

அடியார்க்கு நல்லாரின் நன்முனங்கள் பூரித்து, புளகாங்கிதம் அடைந்தது போல, இத்திருநாள் வருமுன் நோன்பிருந்தோரின் தவநிலைக்காக உலகம் காக்கும் ரஹ்மான் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளும் இத்திருநாளில், கொட்டு கொட்டு என்று கொட்டித் தீர்க்கும் மழையானது, தம்முழுமையும் செலுத்தி மக்களை மகிழ்விப்பது போல, அன்பான அல்லாஹ், மழையைப்போல, அந்நல்லடியார்க்குத் தனது மன்னிப்புக்களை வாரி வழங்குகிறான். அவர்கள் செய்து காட்டிய பாபங்களை நேர்த்தியான நன்மைகளாக மாற்றி அமைக்கிறான். இத்திருநாள், புனிதம் தோய்ந்த இறுதி நாள். இந்த நாள்வரை; ரமலான் மாதத்திய தொடர் முடிகிறது. ரமலான் மாதத்தில் கிட்டிய ஆன்மீகப் புஷ்டியும், அருள் படைத்த ஆக்கமும் இனி வரும் நாட்களில் சூன்யமாகும் என்பதனை நோன்பிருந்தோரின் மனம் உணர்கிறது. இனி அடுத்து காணக் கிடைக்குமோ என்று அது ஏங்குகிறது.

இது திருநாள் யாருக்கு? அல்லாஹ் எச்சரித்துள்ளவற்றை உணர்ந்து நடந்தார்க்கு. நரகமும் அதன் சார்புகளும் இருக்க, அது தன்னையும் தீண்டக்கூடும் என்று பயந்தார்க்கு. இது திருநாள் அல்லவே அல்ல! யாருக்கு? கமகம எனும் மணத்தோடு, சரக் சரக் எனும் புத்தாடையோடு, அகமும் முகமும் மகிழ்வார்க்கு! ரமலான் மாதமாயிற்றே, அதற்குரிய சங்கையைக் காக்கவேண்டுமே, மண்ணகமும் விண்ணகமும் நிந்திக்குமே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்காமல் பாபக்கடலில் மூழ்கியவர்க்கு. அவர்கள் அல்லாஹ்வின் நினைவுச் சின்னங்களைப் பெருமைப்படுத்தவில்லை; அல்லாஹ்வின் ஆதிபத்திய அதிகாரத்தைப் பொருட்படுத்தவில்லை.

இத்திருநாள் சராசரியான நாள் அல்ல. தயவு காட்டும் நாள்; அன்பு காட்டும் நாள்; பாசம் தெரிவிக்கும் நாள்; தனது, தனக்குரியது என்கிற பொருளை மனமாரச் செலவிடும் நாள். ஓரோர் வரி செலுத்தும் சுதந்திர முஸ்லிம் மீது இந்நாளின் தர்மம், "சதகதுல்பித்ரு" விதியாக்கப்பட்டிருக்கிறது. தனக்காக, தன் குடும்பத்தாருக்காக, தன் சிப்பந்திக்காக, அவர் தர்மம் இட

வேண்டும். (மலேசிய அரசாங்கம் வகுத்த திட்டப்படி தலா $1.70 செலுத்தவேண்டும்) தர்மம் செலுத்தச் சரியான காலம் பெருநாள் தொழுகைக்கு முன்னராக, காலையிலேயே செலுத்துவதாகும். ரமலான் மாதத்தின் முற்பகுதியிலோ பிற்பகுதியிலோ செலுத்தலாம். இத்தர்மத்தை அரசாங்கமே வசூலித்து தானே வினியோகிக்க முடிவு செய்திருப்பதால் நியாயப்படி அரசாங்கத்திடம் செலுத்துவது தான் சரியான நடைமுறையாகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! வெளிநடப்பில் மின்னும் ஆடைகளையும், கவர்ச்சியான உடைகளையும் உடுத்தி, கவர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவது போல, தங்கள் தங்கள் மனங்களை ஈமான் மூலமாகவும், தஸ்பீஹ் மூலமாகவும், சன்மார்க்க நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் மூலமாகவும் கவர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொள்ளப் பாடுபடுங்கள். அன்பான அல்லாஹ், இந்த மதிப்பிற்குரிய நல்லாடைகளைக் கவனிப்பதில்லை. அகத்தின் நிலை என்ன, அதன் மதிப்பென்ன என்பனவற்றைத் தான் கவனிக்கிறான்.

இன்று, இங்கு, குழுவாக, கூட்டம் கூட்டமாக, மாபெரும் கூட்டம் ஒன்று கூடி அல்லாஹ்வின் சன்னிதானத்தை எதிர் நோக்கி இருப்பது போல ஒருநாள் வரும். அந்நாளில் எழுப்பப்பட்டு, மாபெரும் கூட்டத்திற்கிடையே "செய்த காரியங்கள் பதிவேடு"களை ஆராயப்படும்.

அங்கு என்ன நிலையைத் தாம் வகிக்கமுடியும் என்று இன்றே யூகித்தறியுங்கள். ஆருயிர் நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்: "நீங்கள் நோன்பிற்கான தர்மத்தைக் கொடுத்து முடிக்காதவரை உங்கள் நோன்புகளாகிறது, வானத்திற்கும் பூமிக்குமிடையே தொங்கிக் கொண்டிருக்கின்றன". ஆதலால் தர்மத்தின் பக்கம் அதிகக் கவனம் செலுத்தி வாருங்கள்.

மகத்தான வலிமையும் வல்லமையும் உடைய அன்பான அல்லாஹ் என்னையும், உங்களையும், நம் அனைவரையும், தனியாகவோ கூட்டாகவோ, தனது திருநாமத்தைத் துதிபாடிய கூட்டத்தில் நடமாட வைப்பானாக! நம் அனைவரையும் அல்லாஹ்வுக்கு மாறுபாடு கொள்ளும் கூட்டத்தாரை விட்டும் ஒதுக்கி வைப்பானாக!

யா அல்லாஹ்! ஒரே நாளில் தர்மத்தையும் குறித்தாய். தவத்தையும் குறிப்பிட்டாய். நரகத்தையும் நினைவூட்டினாய். சுவர்க்கத்தையும் எண்ணிடச் செய்தாய். எல்லாம் அறிந்த நீ இத்திருநாளின் கண், முன்னரும் பின்னரும் தோன்றும் சபல முறைகளை அகற்றி வலுவான மன வலிமையைக் கொடுத்து ஈமானியக் கூட்டத்தாரில் எங்களையும் கணக்கிட்டு அவர்க்குரிய மகோன்னதங்களையும் எங்களுக்கு வழங்கவேண்டும். ஆமீன் - ஈத் முபாரக். ●

ஷவ்வால் இளம்பிறையே

ப.மு.அன்வர்



ஷவ்வால் இளம்பிறையே — அருட்
சாரம் நிறைந்தொளிர் ஞானக் குழந்தையே
ஒவ்வும் நெறிரமலான் — தன்னை
ஓம்பிய தீனவர் உள்ளக் கிளர்ச்சியைச்
செவ்வியின் காட்டுகிறாய் — உயிர்த்
தேட்டம் இதுவெனத் தீட்டிய புன்னகை
இவ்வுல கின்படலம் — தன்னை
ஏற்றிய மேன்மையை எவ்வணம் போற்றுவேன்
ஷவ்வால் இளம்பிறையே

ஈதின் மகிழ்ச்சியினை — நல்ல
ஈகைப் புகழ்ச்சியை இன்ப மலர்ச்சியை
ஓதி முழக்குகிறாய் — எங்கள்
உள்ளக் குழலின் இசையில் கலந்தருள்
போதையை ஊட்டுகிறாய் — அந்தப்
பூரிப்பில் சொக்கித் திளைக்கும் இதயத்தின்
சேதியைக் கேள்நிலவே — அந்தச்
செய்தியனலை அவித்திட ஒல்லுமோ
ஷவ்வால் இளம்பிறையே

அன்றைய நாட்களிலே — வையத்
தாளுகை எங்கள் கரத்தில் இருக்கையில்
நன்றி யுணர்ச்சியினால் — மறை
ஞானத்தை நாங்கள் பரப்பி வருகையில்
சென்ற விடத்திலெல்லாம் — நபிச்
செம்மல் முஹம்மதின் வாழ்க்கைச் சுடரினில்
ஒன்றிக் கலந்திருந்தோம் — இந்த
உலகின் தலைவிதி தன்னையும் மாற்றினோம்
ஷவ்வால் இளம்பிறையே

இன்றைய நாட்களிலே — எங்கள்
இதயம் புதுப்புதுச் சாத்திரக் குப்பைகள்
நன்றெனத் தாவியதால் — பண்டை
ஞானப் பெருமையும் வீரத் தலைமையும்
குன்றிட வாயினவே — இதைக்
குறித்து நினைக்கவும் மறந்து திரிகிறோம்
தென்றல் அருமையினை — சென்று
தீண்டவும் அஞ்சிக் கவிழ்ந்து கிடக்கிறோம்
ஷவ்வால் இளம்பிறையே

தொழுகையும் இன்றுளதால் — எனில்
தொழுகையில் பண்டை உயிர்த்துடிப் பில்லையே
பழகிய நோன்பினிலும் — பழம்
பக்குவ மேன்மைப் பயன்எங்குச் சென்றதோ
தழலினில் மூழ்கியெழும் — கனல்
தம்முகம் எங்கும் அகப்பட வில்லையே
அழுது புலம்பலல்லால் — இதற்
கான மருந்தினை யாவர் புகலுவார்
ஷவ்வால் இளம்பிறையே

புகலுவார் உண்டெனினும் — அதைப்
போற்றும் மனங்கள் புவியினில் இல்லையே
புகையினில் ஓவியத்தை — வைத்துப்
பூக்கொண்டு தாவிடும் மக்குகள் ஆனபின்
வகைவகை நோவினைகள் — பட்டும்
வாழ்வைப் புதுக்கும் வகையற்றுப் போயினோம்
நகைப்பொருள் ஆகிவிட்டோம் — இந்த
நாளின் வறுமையை என்னென்று சொல்லுவேன்
ஷவ்வால் இளம்பிறையே

பேசும் கிளிப்பிள்ளைகள் — எனப்
பிதற்றித் திரிவதில் பேர்பெற்ற மக்களாய்க்
கூசாது உலவுகிறோம் — இந்தக்
கொடுமையை யார்பால் உரைத்திட வல்லனே
ஆசை துடிப்பதனால் — இதை
அப்படி யேயிங்குச் செப்பிட லானேன்
வாசல் திறந்துவிடு — எங்கள்
வாழ்க்கைப் புதையல் வெளிப்படச் செய்குவாய்
ஷவ்வால் இளம்பிறையே

போதும்!

பூ. அருணசலம்

அவசரவேலையாக என் கணவர் வெளியூர் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. தட்டிக் கழித்துத் தனக்கிருக்கும் நல்ல பெயரைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவோ என்னவோ உடனே புறப்பட்டு விட்டிருந்தார். அவருடன் பக்கத்து வீட்டு ராஜனும் போய் விட்டிருந்தார். இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் ராஜனின் மனைவியும் தன்னந்தனியேதான் இருந்தாள் எனக்குத் துணை அவள்; அவளுக்குத் துணை நான்.

மாலைத் தென்றல் இதமாக வீசிக் கொண்டிருந்தது; நானும் சீதாவும் வெளியே சென்று உலாவி விட்டு வரலாமே என்ற கருத்தில் புறப்பட்டோம். அப்போது மாலை ஆறு மணிக்குமேலாகி விட்டிருந்தது.

சாலையின் ஓரத்தில் அமைதியாக நடந்து கொண்டிருந்தோம். கூட்டை விட்டு ஆர்வத்தோடு வெளிக்கிளம்பும் பறவைகளைப்போல, இளம் பிள்ளைகள் கூட்டம் கூட்டாக வந்து கொண்டிருந்தனர். சின்னஞ் சிறு பிள்ளைகளைப் பார்த்தபோது என் உள்ளத்தில் இனம் தெரியாத ஓர் இன்பம் இழையோடியது. சிறிது நேரத்தில், அதுவே துன்பமாகவும் இழையோடத் தொடங்கியதை உணர்ந்தேன்.

என் மகள் அல்லி இருந்தால், இப்போது அவள் பள்ளி செல்லும் பருவத்துடன் விளங்குவாளே' என்றது உள்ளம். எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்ட அவளை நினைத்தபோது என் கண்களில் கண்ணீர் சுரந்து, கன்னத்தில் வழிந்தோடுவதை உணர்ந்தேன். உள்ளத்தில் இன்ப எழுச்சி பாய்ந்தோடும் என்ற எண்ணத்துடன் இயற்கை எழிலைக் காண வந்த இடத்தில், வேதனைச்சுமை துளிர்த்து வளர்வதைக் கண்டேன். பக்கத்தில் வந்து கொண்டிருந்த சீதாவை பார்த்தேன்; சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்த வண்ணம் அவள் வந்து கொண்டிருந்தாள். இருவரும் அமைதியாகவே நடந்து கொண்டிருந்தோம்.

அப்போது ஒரு காட்சி அதுவும் என் உள்ளத்தைக் கீறி விட்டுச் சென்ற காட்சிதான். இன்று ஏனோ தெரியவில்லை, என் கண்களில் படும் எல்லாமே என் உள்ளத்தின் அமைதியைக் கெடுப்பதாகவே இருந்தன. நான் புறப்பட்ட வேளை சரி இல்லையோ என்னவோ தெரியவில்லை.

மீண்டும் அந்த இனிமை பொங்கும் காட்சியைக் காண்பதில் ஒருவித இன்பம் இருக்கத்தான் செய்தது; மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியைக் கண்டு ரசித்தேன்.

கணவனும் மனைவியுமாக இருவர் பசும்புல்லில் அமர்ந்து கொண்டிருந்தனர்; அந்தத் தம்பதிகளைச் சுற்றிலும் நான்கு பிள்ளைகள் சுற்றிச்சுற்றி மகிழ்வுடன் ஓடி வந்தனர். நால்வரில் இருவர் பெண்; இருவர் ஆண். ஓடி விளையாடிய களைப்போ என்னவோ ஒரு பெண் பிள்ளை தாயை அணைத்துக் கொண்டிருந்தாள். மற்றப் பிள்ளைகள் தகப்பன் மடி மீது ஒய்யாரமாகப் படுத்துக்கொண்டிருந்தனர்.

அந்தப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் கன்னத்தையும், தலையையும் வருடி விட்ட வண்ணமும், ஆசையோடுமுத்தமிட்டபடியும் இருந்தனர். இந்தக் காட்சிகள் ஒவ்வொன்றும் என் உள்ளத்தைப் புல்லரிக்கச் செய்து கொண்டிருந்தன.

எனது கரமொன்று அடிவயிற்றைத் தடவிப் பார்த்தது; உள்ளத்திலிருந்து ஏக்கப் பெருமூச்சு ஒன்று அனலாக எழுந்து மறைந்தது. அந்தப் பெருமூச்சில் பட்டுச் சிதறிய எண்ண அலைகள் மனக் கண்களில் திரைப்படம்போல ஓடுவதை உணர்ந்தேன்; என் நினைவலைகள் என்னையும் மீறிக் கொண்டு கடந்த கால நினைவுகளில் மூழ்கிக் கொண்டிருந்தன.

எனக்குத் திருமணமாகி எட்டாண்டுகள் மறைந்து விட்டன. நான் மலடி அல்ல என்பதை நிரூபிக்க இரண்டு செல்வங்களைப் பெற்றெடுத்தேன். ஆசைக்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் என் வீட்டிலும் தவழ்ந்து விளையாடத்தான் செய்தன.

ஆனால்......ஆனால்... ..அந்த இரண்டு செல்வங்களும் எங்களை விட்டுப் பிரிந்து விட்டன. இனி எனக்குக் குழந்தையே பிறக்காது என்ற நிலை உண்டானபோது, எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது... இந்த வீட்டில் எப்போது குழந்தையின் அழு குரலும் சிரிப்பொலியும் கேட்கப்போகிறது என்ற நினைப்பு எனது உள்ளத்தை நச்சரித்துக்கொண்டே இருந்தது.

வழக்கம்போல் என் கணவர் வேலை முடிந்து இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார். வந்தவர் இப்படி ஒரு பேரிடியைத் தூக்கித் தலை மீது போடுவார் என நான் விளையாட்டாகக் கூட நினைத்துப் பார்க்கவில்லைதான்.

"சுகந்தி" என்றார் அன்புடன்.

"என்னங்க"—நான்தான் கேட்டேன்.

அவர் எதையோ ஒரு புதுமையைச் சொல்லப் போகிறார் என்பதை அவருடைய புருவங்கள் எனக்கு எடுத்துக் காட்டின. சொல்லவேண்டியதைச் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தார்.

நானே பேச்சைத் துவக்கினேன்.

"அன்போடு கூப்பிட்டு விட்டு பேசாமல் இருக்கிறீர்களே, என்றைக்குமில்லாத தடுமாற்றம் இன்று மட்டும் எங்கிருந்து வந்ததாக்கும்" என்றேன் நான்.

"சுகந்தி, வாழ்க்கையில் நிம்மதி இருக்கவேண்டுமானால் வீட்டில் பிள்ளைகுட்டிகள் நிரம்ப இருக்கக் கூடாது என்கிறார்களே, இதைப் பற்றி? என்ன நினைக்கிறாய்?" என்றார் அவர்.

இப்படி ஒரு கேள்வியை எழுப்பி என்னைத் திணறடிப்பார் என நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. திகைத்துப்போய் அவரை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"குடும்பக்கட்டுப்பாடு அவசியம் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். தேவைக்கு அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று அவதிப்படுவதை விட ஒன்று இரண்டோடு நிம்மதியாக வாழ்வது நல்லதில்லையா?" என்றார் என் கணவர்.

என் கணவரின் பேச்சு எனக்கு விந்தையாகவே இருந்தது. எதையோ சொல்லவேண்டியவர் சுற்றி வளைத்துப் பேசுவதை உணர்ந்தேன்.

"இந்தக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு அவசியம் எனத் தொண்டை கிழியப் பிரச்சாரம் செய்பவர்கள் வீட்டில்தான் டசன் கணக்கில் குழந்தைகள் இருப்பது... தெரிந்தவர்களுக்குத்தான் அந்த ரகசியம் தெரியும்"—யாரோ சொன்னதைக் கேட்டு, என் கணவர் பேசுவதைப் புதுமையோடு கேட்டுக் கொண்டிருந்தேன். என் கணவரின் பேச்சைக் கேட்பதென்றால் எனக்கு ஒரு வித இன்பம்தான்; மகிழ்ச்சிதான்.

"சுகந்தி, அல்லியும் குமாரும் எங்கே?"- பேச்சை மாற்றி அவர்தான் பேசினார்.


"பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்" என்றேன் நான்.

"சுகந்தி, நான் சொல்லப்போவதைக் கேட்டு என் மீது வருத்தமடைய மாட்டாயே..."-என்கணவர் மீண்டும் புதிர்போட்டுத்தான் பேசினார்; அந்தப் புதிரைத் தெரிந்து கொள்ள என் உள்ளம் துடியாய்த் துடித்தது.

"உங்கள் மீது நான் ஏன் வருத்தமடையப் போகிறேன்..." என்றேன்

"சுகந்தி, இனிமேல் நமக்குக் குழந்தையே பிறக்காது...".- அவர் சொல்லிமுடிக்குமுன் நான் அவரின் வாயைப் பொத்தினேன்.

என் நிலைமையைப் புரிந்து கொண்ட அவர் சற்றுத் தடுமாறினார்;



அவரின் கண்ணிமைகள் படபடத்தன. மேற்கொண்டு சொல்ல முடியாமல் தடுமாறினர்.

"ஆமாம் சுகந்தி, நான் சொல்வதைப் பொறுமையோடு கேள்; செயற்கை விஞ்ஞானத்திற்கு அடிமைப்பட்டு விட்டேன்... அதனுல்தான் சொல்றேன்..." -அவர் பேசிக் கொண்டிருந்தார்.

இந்த வார்த்தைகள் என் உள்ளத்தை இருகூருகப் பிளப்பது போன்றிருந்தது; இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டேன். அவரின் மடி மீது தலை வைத்து அழ வேண்டும்போல் உள்ளத்து உணர்வுகள் ஆர்ப்பரித்தன. கண்ணிமைகள் படபடத்து நனைந்தன. கன்னத்தில் நெளிந்தோடிய கண்ணீரை அவர் இலேசாகத் துடைத்து விட்டு, என் கேசத்தை இதமாகக் கோதி விட்டுக் கொண்டிருந்தார்.

நாட்கள் பல மறைந்தன. திங்களும் பல மறைந்து விட்டிருந்தன.

எங்கள் குடும்பத்தின் நிலை அமைதியாக நடந்து கொண்டிருந்தது.

அல்லியும் குமாரும் பள்ளி செல்லும் பருவத்தை எட்டிப்பிடிக்க காத்துக் கொண்டிருந்த வேளையில் தான், பேரிடி எங்களை வாரியணைக்க வந்துகொண்டிருந்தது. ஆம், இளம் பிள்ளைவாத நோயால் குமாரின் இனிய உடலும், சித்திர முகமும் மண்ணுக்கு இரையாகிப் போய்விட்டன. இந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தபோது அல்லி படுத்த படுக்கையானுள்... டிங்கிக் காய்ச்சல் என்று சொல்வார்களே, அந்தத் திடீர் டிங்கிக் காய்ச்சலுக்கு அவள் பலியாகிப்போனுள்!

நம் வாழ்க்கையில் துன்பம் சொல்லிக்கொள்ளாமலேயே வந்து போகிறது; துன்பம் வரப்போகிறது என்பது முன்னமேயே தெரிந்தால் விழிப்போடு இருப்பார்கள்; துன்பத்தை விரட்டக்கூடிய ஆற்றலுடன் விளங்குவார்கள். ஆனுல் எங்கள் வாழ்வில் ஏற்பட்ட துன்பம்... பெரும் துன்பம்தான்...பத்துத் திங்கள் சுமந்து பெற்று பக்குவத்தோடு வளர்த்த பிள்ளைகள் இரண்டையும் சவக்குழிக்கு அனுப்புவதென்றல் பெற்ற வயிறு எரியாதா என்ன...?

நெடுஞ்சாலையில் ஓடிக்கொண்டிருந்த காரின் 'ஹாரன்' சப்தம் என் நினைவைக் கலைத்தது; நினைவலைகளின் துய்ப்பில் என் விழி விளிம்புகளில் படர்ந்திருந்த கண்ணீரைத் துடைத்தபோதுதான் சீதா என்னைப் பார்த்துவிட்டாள். "என்ன சுகந்தி" என்று அவள் கேட்டபோது வாய்விட்டு அலற வேண்டும் போல் உள்ளம் அனலாகிக்கொண்டிருந்தது; அடக்கிக்கொண்டேன்.

"சீதா, மனசு சரியாக இல்லை... வீட்டுக்குப் போவோமா..." -நான் கேட்டேன்.

என் வார்த்தைக்கு மறுப்புச் சொல்லாமல் அவள் திரும்பி நடந்தாள்; நான் உணர்வற்ற பட்ட மரம்போல் நடந்துகொண்டிருந்தேன்.

இல்லம் வந்தபோது எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

நன்ருகத் தாழ்போட்டிருந்த கதவு திறக்கப்பட்டிருந்தது. என் உள்ளத்திலும் உடலிலும் ஓடிக்கொண்டிருந்த ரத்த ஓட்டம் உறைந்து போய்விட்டது போன்ற

தொரு உணர்வு; மயக்கம் வரும் போலிருந்தது.

விட்டினுள் நுழைந்தேன்.


அங்கே என் கணவர்தான் உட்கார்ந்திருந்தார். அவருடைய கரங்களில் ஆம், என்னால் நம்பவே முடியவில்லை; ஓடிச்சென்று அந்தக் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டேன்; ஆசை தீர முத்தமிட்டேன். இந்தக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த என் கணவர் பேசத் தொடங்கினார்.

"சுகந்தி, உன் நிலையை அறிந்து தான் இந்தக் குழந்தையை வாங்கி வந்தேன். தேவைக்கு அதிகமாக இருந்த குடும்பத்திலிருந்து இந்தக் குழந்தையை நான் வாங்கிவர பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. பதின்மூன்று குழந்தைகள் இருந்தும் இந்தக் குழந்தையைக்கூடக் கொடுப்பதற்கு அவர்களின் மனம் இடம் தரவில்லை. கெஞ்சிக் கேட்டதாலும் நமது நிலைமையைச் சொன்னதாலும் அவர்களின் மனம் கசிந்து..."-அவரால் அதற்கு மேல் பேச முடியவில்லை; கண்களை லேசாகத் துடைத்துவிட்டுக்கொண்டு என்னைப் பார்த்தார்.

என் கணவரின் நிலை என் உள்ளத்தை நனைத்துக்கொண்டிருந்தது. அவரை ஏறிட்டுப் பார்த்தேன்.

"சுகந்தி, நீதான் என்னை மன்னிக்கவேண்டும். அவசரப்பட்டு அறுவை சிகிச்சை செய்துகொண்டது என் தப்புதான்..." என்று அவர் கூறியபோது கண்களின் விளிம்பில் கசிந்துநின்ற கண்ணீர் பொலபொலவென கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தது.

குழந்தையை அணைத்தவண்ணம் அவரின் கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துவிட்டு அவரின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். என்னையுமறியாமல் என் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவரின் பாதங்களை நனைத்துக்கொண்டிருந்தது. அது ஆனந்தக் கண்ணீராகத்தான் இருக்கவேண்டும் என உள்ளத்தில் ஒரு மகிழ்வு பிறந்தது. ●



"சொந்தத்தில் கார் இருக்கும்போது ஏன் மினி பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டிருக்கே?"

"இன்னிக்கு மினி சாரி கட்டி இருக்கேன், அதனால்தான்!"

தொலைக்காட்சி

15-9-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப்படம் "டாக்டர் எக்ஸ்"

22-9-77 வியாழன் மாலை 5.30க்கு ஜெமினி கணேசன், "கலர்நாயகி" காஞ்சனா, மஞ்சுளா, பாலாஜி, நாகேஷ் முதலானோர் நடித்துள்ள "சாந்தி நிலையம்" தமிழ்ப் படம் ஒளிபெறுகிறது.



காஞ்சனா, ஜெமினியும் சாந்தி நிலையம் திரையில்

"பூமியிலிருப்பதும் வானத்தில் பறப்பதும் "அவரவர் எண்ணங்களே" என்ற பாடல் வரும்போது இடம்பெறும் விசேஷ பறக்கும் பலூன் காட்சி தமிழ்ப்படங்களிலேயே இதில்தான் முதன் முறையாக இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கவியரசுவின் கருத்துள்ள பல பாடல்களுக்கு எம்.எஸ். விஸ்வநாதன் இனிமையாக இசையமைத்திருக்கிறார்.

25-9-77 ஞாயிறு மாலை 4.00க்கு இந்திப்படம் "மா அவுர் மம்தா"

இதர நிகழ்ச்சிகள்

வியாழக்கிழமை தோறும் இரவு மணி 7.25க்கு ஜெமினி மேன் (மாய மனிதன்)

சனிக்கிழமைதோறும் மாலை 6.45-க்கு தும்புவான் மிங்கு (தமிழ் நிகழ்ச்சி)

சனிக்கிழமை தோறும் இரவு 7.20க்கு சிக்ஸ் மில்லியன் டாலர் மேன். (லீ மேஜர்ஸ் நாயகனாகத் தோன்றி நடிக்கும் ஆங்கிலப் படம்)

ஞாயிறுதோறும் இரவு மணி 10க்கு கோம்பெட்.

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

11-9-77 தலைநகர் கிருஷ்ணம்மா எழுதிய "பேய்க்கரம்"

18-9-77 தலைநகர் ஆர். கிருஷ்ணன் எழுதிய "அம்புலி காணு அல்லி மகள்"

இஸ்லாமிய நாடகம்

(இரவு 8.30க்கு ஒலியேறும்)

15-9-77 தலைநகர் ஆர். ஷாஜஹான் எழுதிய "ஆண்டவன் மன்னிப்பான்"

முன்னோட்டம்

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

10-9-77 "மனம் விழித்துக்கொண்ட போது" பாகான் ஆஜம் எம். ஜெயலட்சுமி எழுதியது.

17-8-77 "முத்தரசி என் கண்ணே" எழுத்து: எஸ். வைரக்கண்ணு. (மலாக்கா நிலையத் தயாரிப்பு: ஆர். முத்தையா)

24-9-77 "அவளுக்கென்று ஒரு ஜீவன்" எழுத்து: கே. பார்வதி.

சிறுகதை

[ஞாயிறுதோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது]

18-9-77 "கனவுகள்" எழுத்து: இராஜகுமாரன் இளங்கோ.

கலப்படம்

(பிற்பகல் 2-00 மணிக்கு ஒலியேறும்)

11-9-77 கோலாலம்பூர் நிலையத் தயாரிப்பாக ஒலியேறும்.

18-9-77 ஒலியேறும் கோலாலம்பூர் நிலையக் "கலப்பட" நிகழ்ச்சியில் சிவரஞ்சினி ஆர் டி எம் இசைக் குழுவோடு இணைந்து பி. சுப்பையா, எம். தமிழ்ச்செல்வி, நளினி ஜெகநாதன், செந்திலாதிபன், லெட்சுமி ஆகியோர் பாடுவார்கள். நகைச்சுவையும் உண்டு.

கண்ணோட்டம்

மலேசியத் தொலைக்காட்சியில் வியாழக்கிழமைதோறும் இரவு 7.27க்குத் தொடங்கும் விறுவிறுப்பான கதையம்சம் கொண்ட "ஜெமினி மேன்" (மாயமனிதன்) எனும் புதிய ஆங்கிலப் படத்தொடர், வாரந்தோறும் நம் இந்திய ரசிகர்களுக்கு ஏமாற்றத்தையே கொடுக்கிறது. காரணம் அதே நேரம் தொலைக்காட்சியின் மற்றோர் அலை வரிசையில் தமிழ் அல்லது இந்திப் படம் ஓடிக்கொண்டிருப்பதுதான். இதைப்பார்த்தால் அதைப்பார்க்க முடியாது. அதைப்பார்த்தால் இதைப் பார்க்க முடியாது! எதைப் பார்ப்பது, எதை விடுவது என்ற தலைவலியைப் போக்க, மேற்படி ஆங்கிலப்படத்தொடரை வேறொரு கிழமைக்கு மாற்றி, இந்திய ரசிகர்களின் மனக்குறையைத் தொலைக் காட்சி நிலையக் கவனிப்பாளர்கள் நிவர்த்திப்பார்களா!

–ஆனந்தி,
லங்காப்

நாம் உயர யார் காரணம்?

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் குறள் பொருட்பாலில் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தின்கீழ் வருவதாகும்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்' (505)

இந்தக் குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு: (மக்களுடைய குணங்களால் ஆகிய) பெருமைக்கும் (குற்றங்களால்) சிறுமைக்கும் சோர்ந்தறியும் உரைகல்லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.

உலக மாந்தர்களில் ஒருசிலர், மற்றவர் போற்றும் படியாகச் சீரும் சிறப்புமாக ஒளி பிறங்க வாழ்வதையும் மற்றும் சிலர் பிறர் எள்ளி நகையாடத்தக்க முறையில் சிறுமைப்பட்டுச் சீரழிவதையும் காண முடிகிறது. ஒரு சாரார் பெருமையுடன் பீடுநடைபோடுஎல்லாம் நிறைந்தவர்களாக வாழ்கிறவர்கள். மற்றொரு சாரார் வாழ்க்கையில் நிறைவின்றிக் குற்றங் குறைகளுக்குத் தங்களை இலக்காக்கிக்கொண்டுசிறுமைப்பட்டு அல்லற்பட்டு வாழ்கின்றவர்கள். இவ்வாறு மனிதகுலத்தில் ஒரு சாரார் பெருமையாகவும், மற்றொரு சாரார் சிறுமைப்பட்டும் வாழ்வதற்குக் காரணம் யாது?

வள்ளுவர் மேற்குறிப்பிட்ட குறளின்வழி இந்தக் கேள்விக்கு விடை தருகிறார். "உனக்கு வாழ்வு இன்பமயமாக தின்னத் திகட்டாத பலாச்சுளையாக இனிக்கிறதா? உன் இல்லற வாழ்க்கை இன்பப் பூங்காவாக நறுமணம் வீசுகிறதா? உன்னைச் சுற்றமும் நட்பும் சூழ்ந்து தழைக்கிறதா? ஊர் உலகம் உன்னை ஏற்றிப் போற்றிக் கொண்டாடுகிறதா? அப்படியென்றால் இத்தனைக்கும் உன் செயல்களே காரணம். நீயே இதற்குக் கார்ணகர்த்தா" – வள்ளுவர் நம்மை நோக்கி இவ்வாறு கூறுகிறார்.

"உன் வாழ்க்கை துன்பமயமாக, கசக்கும் எட்டிக்காயாக அமைந்திருக்கிறதா? எப்பொழுதும் வேதனையும் விம்மலும்உன்னை ஆட்டிப்படைக்கின்றனவா? சுற்றமோ நட்போ உன்னை அண்டி வர அஞ்சுகிறதா? ஊர் உலகத்தின் ஏச்சும் பேச்சும் உன்னை வாட்டி வதைக்கின்றனவா? இப்படி நேருவதற்கும் உன் செயல்களே - நீ செய்யும் கருமங்களே காரணம்" என்கிறார் வள்ளுவர்.

ஒருவன் உயர்ந்து வாழ்வதற்கு அவன் செயல்களே அச்சாணி. அது போலவே ஒருவன் தாழ்ந்துபோவதற்கு அவன் செய்கின்ற காரியங்களே அடிப்படை.

வள்ளுவர் கூறுகின்ற இந்த உண்மை எக்காலத்துக்கும், எந்த நாட்டவர்க்கும் பொருந்தும். இதனை நன்கு ஆராய்ந்து பார்த்தால், வாழ்க்கையில் நாம் அன்றாடம் சந்திக்கின்ற பல மனிதர்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால்- இந்தக் குறள் எத்துணை பெரிய உண்மையைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பது புலனாகும்.

வருகின்ற வருமானத்தை எல்லாம் குடித்துக் கூத்தடிக்கும் பொறுப்பற்ற குடும்பத் தலைவர்களைப் பார்க்கிறோம். குதிரைப்பந்தயம் போன்ற சூதாட்டங்களில் மனத்தையும் பணத்தையும் பறிகொடுத்து, பிரமை பிடித்து அலைபவர்களையும் காண்கிறோம். இவர்கள் வாழ்க்கையில் எப்படி முன்னேற்றத்தைக் காண முடியும்? நாலு பேர் மத்தியில் இவர்கள் எப்படி நல்ல பெயர் எடுக்க முடியும்? இந்த ஊதாரிகளின் குடும்பங்களில் இன்பத்தென்றல் எப்படி வீசும்? துன்பச் சூறாவளியின் இடையற்ற தொல்லையைத் தவிர இவர்கள் வேறு எதனை எதிர்பார்க்க முடியும்? அண்டை அயலார் எப்படி இவர்களை மதிப்பார்கள்? வீட்டில் மனைவி மக்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இவர்கள் இலக்காவதில் என்ன வியப்பிருக்கிறது? இவர்கள் குடித்தார்கள். சூதாடினார்கள். அதன் மூலம் உழைத்து ஈட்டிய வருமானத்தை எல்லாம் இழந்து ஓட்டாண்டி ஆனார்கள். இது இவர்கள் தங்களுக்குத் தாங்களே தேடிக்கொண்ட வினையாகும். தாங்கள் மேற்கொண்ட குடிப்பழக்கத்தால், சூதாட்ட மோகத்தால் தங்களுக்கு அல்லலையும் அழிவையும் இவர்களே தேடிக்கொண்டார்கள்.

"தன்வினை தன்னைச் சுடும்" என்பார்கள். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பார்கள். ஒருவன் செய்யும் காரியங்களுக்குக் கிடைக்கின்ற பலன்களை அவன் அனுபவிக்க வேண்டும் என்பதுதான இந்த முதுமொழிகளின் கருத்தாகும். வினைப்பயன், ஊழ்வினை என்றெல்லாம் பெரியவர்கள் வலியுறுத்தி வருகின்ற கோட்பாட்டுக்கும் இந்த உண்மையே அடிப்படை ஆகும்.

"நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்" என்பார் பாரதிதாசன். அப்படி ஒரு நல்ல குடும்பத்தில் நாளும் நடைபெறுகிற நிகழ்வுகளை ஒருமுறை கண்ணோட்டமிட்டுப் பாருங்கள். குடும்பத்தலைவர், அரசாங்க உத்தியோகத்தில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வு பெற்றவர். உத்தியோகம் பார்க்கும்போது சம்பளத்தைக் கட்டுச்செட்டாகச் சேர்த்துக் கணக்காகச் செலவிட்டுக் கணிசமான சேமிப்பைத் தன் முதுமைக் காலத்துக்காக வைத்திருந்தார். நிலபுலங்களாகவும் வங்கியில் வைப்புத் தொகையாகவும் அவருடைய சேமிப்பு வருமானத்தைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தது.

அவர் தமது கூட்டாளியோடு சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய வர்த்தகமும் நல்ல ஆதாயத்தைத்தந்து கொண்டிருந்தது. அவருடைய பிள்ளைகள் படிப்பில் முதன்மை பெற்று, அதன் பயனாக வாழ்க்கையிலும் முதன்மை பெற்று ஒருவர் வழக்கறிஞராகவும், மற்றொருவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், இன்னொருவர் கட்டிடச் சிற்பியாகவும் தந்தைக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்பத்தில் மனநிறைவும், மகிழ்ச்சியும் தாண்டவமாடுவதில் வியப்பில்லை. ஊரும் உலகமும் இக்குடும்பத்தாரைப் போற்றிப் புகழ்வதில் ஆச்சரியமில்லை.

இந்த ஏற்றமான நிலை இந்தக் குடும்பத்திற்கு எப்படி வந்தது? தகப்பனார் எந்தத் தீயபழக்கமும் இல்லாமல் வயிற்றைக்கட்டி வாயைக்கட்டிச் செட்டாக வாழ்ந்து தன் பிள்ளைகளுக்கு அரும்பாடுபட்டு கல்வியைப் புகட்டியதால் அன்றோ இந்தக் குடும்பம் இப்போது ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.

மீண்டும் வள்ளுவர் சொல்கிற உண்மையை - பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் - என்னும் அழுத்தமான கருத்தை நினைவில் கொண்டால், அந்தக் குடும்பத்தின் பெருமைமிகு நிலைக்கு அந்தக் குடும்பத் தலைவரின் செயல் முறைகளே - வாழ்க்கையின் நடைமுறைகளே மூலகாரணம் என்பதை நாம் நன்கு உணரமுடியும். ஒரு குடும்பம் உயர்ந்து பல்கலைக்

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

ஸ்ரீ முருகு சுப்பிரமணியன்

கழகமாக அறிவொளி வீசுவதற்கும், மற்றொரு குடும்பம் சின்னபின்னப்பட்டு இருண்ட வீடாக, பேய டைந்த குகையாக ஒளியற்றுக் கிடப்பதற்கும் அந்த அந்தக் குடும்பத் தலைவர்களின் கருமங்களே காரணமாகும்.

குடும்பத் தலைவர் பொறுப்புள்ளவராக, பண்புள்ளவராக தம்மை அமைத்துக் கொண்டால், அந்தக் குடும்பம் எல்லாம் நிறைந்த இன்பத் தேன்கூடாக விளங்கும். பொறுப்பற்றவராக, ஊதாரியாகக் குடும்பத் தலைவர் அமைந்துவிட்டால் அந்தக் குடும்பம் அல்லலுக்கும் அவதிக்கும், வறுமைக்கும் வாட்டத்துக்கும் நிலைக்களனாக மக்கி மங்கியே போகும். "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்னும் குறளும் இந்த உண்மையையே வலியுறுத்துகிறது.

பொதுவாக வாழ்க்கையில் நொந்து நொடித்துப் போகும் யாரும் அதற்கு மற்றவர்கள் மீது பழி சுமத்தவே முயல்வர். "அவனால் கெட்டுவிட்டேன். இவன் என்னை மோசம்பண்ணிவிட்டான்" என்று தன் தாழ்ந்த நிலைக்கு மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதே மனித இயல்பாக இருக்கிறது. ஆனால் வள்ளுவர் கூறும் உண்மை இந்த உலக இயல்பை மறுத்துப் பேசுகிறது. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் புறநானூற்று வரியும் வள்ளுவரின் கருத்தையே அரண் செய்கின்றது. நமக்கு நன்மையைத் தேடிக் கொள்வதும் நாமே. தீமையைத் தேடிக்கொள்வதும் நாமே - மற்றவர்கள் நமக்குத் தீமை செய்கிறார்கள், மற்றவர்கள் நமக்கு நன்மையைச் செய்கிறார்கள் என்று எண்ணுவது வெறும் மனப் பிரமை ஆகும்.

இந்தக் குறளின் மூலம் வள்ளுவர் நமக்கு "கொத் தோங் ரோயோங்" என்று சொல்லப்படும் தன் கையே தனக்குதவி என்னும் அரிய தத்துவத்தை - வாழ்க்கைக் கோட்பாட்டை நமது உள்ளங்களில் பதியவைக்கிறார். இந்தக் குறள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையக்கூடிய சிறந்த குறளாகும்.

"உயர்வடைய விரும்புகிற யாரும் உங்களை நம்பி, உங்கள் கையை நம்பி, உங்கள் சொந்த பலத்தை நம்பி உயர முற்படுங்கள்" என்பதுதான் வள்ளுவர் கூறுகிற அறிவுரையாகும். 'அவரிடம் உதவி கேட்போம், இவரிடம் உதவி கேட்போம்' என்னும் யாசக வாழ்க்கைக்கு இடமில்லை. கோரிக்கை வைத்து, மனுப்போட்டு, மகஜர்களை வழங்கி, குடியை உயர்த்துவோம் என்னும் பேச்சிலும் வள்ளுவருக்கு நம்பிக்கை இல்லை. தன் கையே தனக்கு உதவி என்பதில் முழு நம்பிக்கை கொண்டு எழுகின்ற சொந்த முயற்சிகளையே வள்ளுவரின் உள்ளம் வரவேற்கிறது.

கீழே விழுந்து கிடக்கும் நம்மைக் கைதூக்கி ஆகாயத்தில் கொண்டு சேர்ப்பதற்குத் தேவர்கள் எங்கிருந்தோ வருவார்கள் என்று கொட்டாவி விட்டுக் கொண்டு இருப்பதிலும் வள்ளுவருக்கு நம்பிக்கை இல்லை. செயலில், முழுமூச்சான-முனைப்பான காரிய ஈடுபாட்டில்தான் வள்ளுவர் முழு நம்பிக்கை வைக்கும்படி வற்புறுத்துகிறார். நல்ல இலட்சியங்களை, பயனுள்ள வாழ்க்கைத் திட்டங்களை அமைத்துக்கொண்டு, முன்னேற்றம் கண்டுள்ள மற்றவர்களின் வாழ்க்கை நுட்பங்களை படிப்பினையாகக் கொண்டு, ஓயாமல் ஒழியாமல் கருமமே கண்ணாக மெய் வருத்தம் பாராமல் செயலில் ஈடுபட வேண்டும். காரிய நோக்குள்ள — பயனைத் தருகின்ற அந்தச்செயல் நிச்சயமாக வாழ்க்கையை உயர்த்தும். மற்றவர்கள் ஏற்றிப் போற்றும் நிலையை அது இயல்பாகவே சேர்க்கும்.

புகழ் வேண்டுமா, பணம் வேண்டுமா, பதவி வேண்டுமா, பட்டம் வேண்டுமா, எல்லாம் கிடைக்கும். எல்லாம் முயற்சியில்தான் - காரிய நோக்குள்ள உழைப்பில் தான் அடங்கிக் கிடக்கிறது யாரோ செய்வார்கள். விதியின் பயன், அதிர்ஷ்டம் தானே வரும் என்றெல்லாம் காத்துக்கொண்டிராமல் ஊழ்வினையையும் ஊழ்வினையின் பயனையும் உடைத்துத் தகர்க்கின்ற கருமவீரர்களாக நாம் வாழ வேண்டும் என்பதுதான் வள்ளுவரின் உள்ளக்கிடக்கை ஆகும். "சோம்பலுக்கும் ஏக்கத்திற்கும் அங்கே இடமில்லை. ஒவ்வொரு நொடியும் சிட்டாகப் பறந்து காரியமாற்று. கரை சேருவதற்கு வகைதேடு. வீணாக மயங்கி, தயங்கி வாழ்நாளை வீணாக்கி விடாதே. குறிக்கோளோடு எட்ட வேண்டிய இலக்குகளை மனதில் கொண்டு, பம்பரமாகச் சுழன்று முன்னேற்றத்தை உன் வசப்படுத்து. நன்மையை விரும்பினால் நன்மை கிடைக்கும். உயர்வை விரும்பினால் உயர்வு கிடைக்கும். இன்பத்தை விரும்பினால் இன்பம் கிடைக்கும்" என்கிறார் வள்ளுவர்.

நம்மைக் கருமவீரர்களாக - நமக்கு நாமே பெருமையைத் தேடிக்கொள்ளக்கூடிய செயல்வீரர்களாகப் பிறப்பெடுக்கச் செய்யும் இந்த அற்புதமான குறளை மறுபடியும் படிப்போம். அது கூறுகிற வழியில் நம் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளக் காரியங்களை அடுக்கடுக்காகச் செய்து முடிப்போம்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்' (505)

ரஷ்ய மொழியில் திருக்குறள்

1974-ஆம் ஆண்டு மாஸ்கோவில் உள்ள கலை, இலக்கிய வெளியீட்டகத்தார், திருக்குறளை ரஷ்ய மொழியில் 25,000 பிரதிகள் வெளியிட்டுள்ளனர்.


அண்மையில் ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டுள்ள திருக்குறள், செய்யுள் நடையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனை மொழி பெயர்த்தவர் திரு. இப்ராகிமோவ்.

இப்பணியைச் செய்து முடிக்க இவருக்குப் பரிமேலழகர் உரையும், டாக்டர் மு. வரதராசனாரும் வழிகாட்டியாகவிருந்தனர்.

இப்புத்தகத்தின் முன்னுரையில் இம்மொழிப்பெயர்ப்பாளர் எழுதுகிறார்.

"திருக்குறளானது தொலை தூரத்தில் உள்ள ஒரு நாட்டின் நினைவுச் சின்னம் மட்டும் அல்ல; அது ஓர் உயிருள்ள புத்தகமும் ஆகும்; உண்மை, நன்மை, மனித நேயம் ஆகியவற்றைப் பரப்பும் ஆற்றல் வாய்ந்த நூல் திருக்குறள். தமிழ் மொழியில் திருக்குறள் இவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம், அதன் உள்ளடக்கத்தின் ஆழமும், செழுமையும் மட்டுமன்று, நம்மை வியப்பில் ஆழ்த்துகின்ற, கவித்துவ சக்தி மிக்க அதன் மந்திரச் சொல்லோசையும் ஆகும். பண்டைய இந்திய மனிதாபிமான இலக்கியமான திருக்குறளின் எண்ணற்ற மொழிபெயர்ப்புகள் பல நாடுகளில் வந்துள்ளன; இது ஓர் அமர இலக்கியம் என்பதற்கு அந்த மொழி பெயர்ப்புகள் ஒரு சான்றாக அமையும்."

—நன்றி: தமிழரசு



"நூல் நிலையத்திற்குள் பாம்பை நுழையவிட்டால் கூடப் பரவாயில்லை. நமது பண்பாட்டை, ஒழுக்கத்தை, உணர்வைக் கெடுக்கின்ற நூல்களை நுழையவிடக் கூடாது".

-குன்றக்குடி அடிகளார்

அனுப்பியவர்: பி. எஸ். மணியம், காப்பார்.

அடித்துப் பிடித்து...



அண்மையில் ஒரு நாளிதழில் இப்படத்தைக் கண்டேன். படத்தில் உள்ளது போலவே என் குடும்பத்தினரும் "புதிய சமுதாயத்திற்காகத் துடிக்கின்றனர்.

எப்போது தேதி 10 ஆகும்- 25 ஆகும் என்று எண்ணிக்கொண்டிருப்போம். கிடைத்ததும், "நான் முந்தி நீ முந்தி" என்று அடித்துக்கொண்டு படிப்போம். இதனால் ஆத்திரமடைந்த என் தங்கை, தனக்கென்று தனியாக ஓர் இதழை வாங்கத் தொடங்கிவிட்டாள்.

—வள்ளி மணாளன்,
சுங்கை திங்கி தோட்டம்,
பத்தாங் பெர்ஜுந்தை

மறதியோ?

கவியரசு சோமசுந்தரமாவைப் பற்றி எழுதியதில், "ஜோகூர் மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக அவர் இருக்கிறார்" என்று ஒரு வரி சேர்த்து எழுதி இருக்கலாம். இந்த விவரம் உங்களுக்குத் தெரியாதோ?

—தமிழ்ப்பாணன், தங்கா

பலிக்கட்டும்

"புதிய சமுதாயம்" வாரம் ஒரு முறை வரவேண்டும் என்று "இம்பேராயம்" என்னும் பகுதியில் டாக்டர் பிரமீளா கணேசன் கூறிய வாக்கு பலிக்கவேண்டும் என்றே நானும் விரும்புகிறேன்.

—பொ. குப்புசாமி, கோலாலம்பூர்

நல்வழி

உழைப்பால் உயர்ந்தவர்களின் பேட்டிகளும் சமயக் கட்டுரைகளும் நம் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக அமையும்.

—சி. மணிராஜ், டோவன்பி தோட்டம், சுங்கை சிப்புட்

நெஞ்சில் நிலைப்பது

"தோற்றம் இல்லான்" எனும் திருவாசகப் பாடல் என் நெஞ்சில் நிலையான இடம்பிடித்துவிட்டது. தொடர்ந்து தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலியவற்றிலிருந்து பாடல்களை விளக்கத்தோடு அளித்தால் எல்லார்க்கும் பயனுண்டு.

—வீ. பொன்னம்பலம்,
அரச மலேசிய விமானப்படை,
கோலாலம்பூர்

சூடு

"முத்து அழகிறன்" சூடான கதை. ரெ. கார்த்திகேசுவுக்குப் பாராட்டுகள்.

—செ. தாமோதரன், சுங்கை திங்கி தோட்டம், பத்தாங் பெர்ஜுந்தை

அவரைப்போல...

நாட்டில் ஆங்காங்கே நடப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது "முத்து அழகிறன்" என்னும் கதை. சேகரம் பிள்ளையைப்போல் சிலர் தங்களை அழித்துக்கொள்வதோடு அல்லாமல், தங்கள் குடும்பத்தையும் பலஇன்னல்களுக்கு உள்ளாக்கி விடுகின்றார்கள்.

—ஜி. குணசேகரன், பூச்சோங்

சிறப்பிடம்

மலர்ந்து மணம்வீசிக் கொண்டிருக்கும் "புதிய சமுதாயம்" எனும் புத்தம் புதிய வண்ணமலருக்கு என் போன்றவர்களின் நெஞ்சில் என்றும் அழியாத, நிரந்தரமான, தனியிடம் உண்டு.

—பி. ஆர். கிருஷ்ணவேணி, பாலாவ் தோட்டம், சிமினி

பொல்லாத வேளை

பாவம், 'மலர் பறிக்கும் வேளையிலே' சிறுகதையின் நாயகியான ஜானகியின் கனவு நிறைவேறாமல் போய்விட்டதே! படித்தபோது எனக்குக் கண்களில் நீர் கசிந்தது. கதாசிரியைக்குப் பாராட்டு.

-ஆர். லோகநாதன்,
ஸ்கூடாய், ஜொகூர்

சுவைத்துணுக்கு

வாசகர்கள் எழுதும் துணுக்குகள் படிப்பதற்குச் சுவையாக இருக்கின்றன.

-நிர்மல்,
லாபுவான் பாடாங் தோட்டம்,
பத்து தீகா

மறுப்பு

கடந்த 10-8-77 இதழில், "என்று தணியும் இந்த சினிமா மோகம்?" எனும் தலைப்பில் தனது சீரிய கருத்துக்களைக் கட்டுரை வடிவில் எழுதியிருந்த அன்பர் திரு இரா. கலாராமு சுட்டிக் காட்டிய சம்பவங்களில் எத்தனை உண்மையாக இருந்தன என்பது ஆராய்ச்சிக்குரியது. சான்றாக, குளுவாங்கில் நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்ததும், அதற்காக டிக்கட்டுகள் பரபரப்பாக விற்பனையானதும், திடீரென்று நிகழ்ச்சி ரத்தானதும் உண்மையேயென்றாலும் அவர் கூறியுள்ளதுபோல் "அரங்கில் நாற்காலிகள் சிதறல்" என்பதும் "அடிதடி" நிகழ்ந்தது என்பதும் குளுவாங்கைப் பொறுத்தவரை நடைபெறவில்லை. (ஆனால் ஜோகூர் பாருவில் எப்படியோ நானறியேன்...)

குளுவாங்கில் ரசிகர்களை அரங்கினுள் செல்லத் தனியார் துறை காவலர்கள் அனுமதிக்கவில்லை. ஆனால் ரசிகர்கள் உள்ளே சென்று நிகழ்ச்சிக்காகக் காத்திருக்கவுமில்லை. இவ்வட்டாரத் துப்பறியும் இலாகாவின் தலைமையதிகாரி, ஏற்பாட்டாளர்களின் சார்பில் நிகழ்ச்சி ரத்தானதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு, கூட்டம் அங்கிருந்து கலையும்வரை போலீஸ் துறையினரும் தனியார்காவல் துறையினரும் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் பாதுகாத்தனர்.

இப்படியிருக்கையில், கட்டுரையாளரின் கூற்று எப்படி உண்மையாகும்?

—அ. மணியன், குளுவாங், ஜோகூர்

விருந்து

கவிதைகள் யாவும் என் உள்ளத்திற்கும் அறிவுக்கும் உணவாகவும் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளாகவும் அமைந்தன.

-இரா. வீராசாமி சௌந்தரவள்ளி
டோவன்பி தோட்டம்,
சுங்கை சிப்புட்

பாசம்

எத்தனை பெரும் சக்தியையும் எதிர்க்க வல்லது காதல் என்றபோதிலும் அதைவிடப் பாசம் பொல்லாதது என்பதைப் "பாசம்" சிறுகதை மூலம் கதாசிரியர் கோடி காட்டியுள்ளார்.

—"ஆர்வி சரோ" ஜெயா, சுங்கை

பெருமைக்குரிய...

தேசிய தினச் சிறப்பு இதழில் சுதந்திரச் சிற்பி துங்குவின் படத்தை வண்ணத்தில் வெளியிட்டது பெருமைக்குரியது.

-ஏ. பாலா, தெலுக்கான்சன்

கடந்த இதழில் (25-8-77) எஸ். பானுமதி எழுதியிருந்த "மலர் பறிக்கும் வேளையிலே" என்ற சிறுகதை, கெடா மாநில எழுத்தாளர் - வாசகர் இயக்கம் அண்மையில் இளம் எழுத்தாளர்களுக்காக நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றதாகும்.

மலேசியமொழித் தேர்வில் வெற்றி பெற – 10

பயன்தரும் பயிற்சிகள்

வெ. ஆறுமுகம்

எஸ். பி. எம்./எம். சி. இ. மலேசியமொழி வினாத்தாளில் இரண்டாவது தாளின் மூன்றாவது கேள்வி மிக முக்கியமானது. பல வகையான கேள்விகள் இதில் இடம் பெறலாம். ("புதிய சமுதாயம்" 25-6-77 இதழைப் பாருங்கள்) அவற்றுள் Imbuhan தொடர்பானவற்றை இதுவரை கண்டோம். பழமொழிகள், மரபுத் தொடர்கள், நேர்கூற்று, அயற்கூற்று ஆகியவை அடுத்த கட்டுரையில் விளக்கப்படும். இவையொழிந்த ஏனைய கேள்விகளைச் சுருக்கமாக இக்கட்டுரையில் பார்ப்போம். (எடுத்துக்காட்டுகள் யாவும் பழைய வினாத்தாட்களிலிருந்து எடுக்கப்பட்டவை)

அ. வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துதல்

தனித்தனி வாக்கியங்களாகவோ, பத்திகளாகவோ தரப்படும். நீங்கள் அவற்றில் காணப்படும் இலக்கணம், சொல், எழுத்துக்கூட்டல், வாக்கிய அமைப்பு போன்ற பிழைகளைத் திருத்த வேண்டும். திருத்தத் துவங்குவதற்குமுன், உண்மையில் பிழையானவை எவை என்று நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். சரியா, பிழையா என்று உங்களால் நிச்சயிக்கமுடியாத சொற்களை அப்படியே விட்டுவிடுங்கள். சரியான சொற்களை பிழையென்று எண்ணிக்கொண்டு அவற்றைப் பிழையாகத் "திருத்தி" எழுதுவதைவிட, சரியாக இருக்குமோ என்னும் ஐயத்தில் ஓரிரு பிழையான சொற்களைத் திருத்தாமல் அப்படியே விட்டுவிடுவது மேல். ஆனால் நீங்கள் திருத்தி எழுதும் வாக்கியங்கள் முழுமையானவையாக இருக்கவேண்டும். அரைகுறையாகத் திருத்தி, பொருள்விளங்காதபடி செய்துவிடாதீர்கள்.

Salin balik ayat-ayat yang berikut dengan membetulkan jika ada apa-apa kesalahan di dalamnya mengikut jalan Bahasa Malaysia yang baik. (1971)

i. Tinggal di rumah pangsa sebanyak yang di burokkan.

ii. Pendapat peladang cuma cukupkan dirinya sendiri di makan.

iii. Kalau kita ada susah, kita boleh mendapat menolong dari orang lain yang meninggal di situ.

iv. Di Malaysia ada banyak cantik barang dan banyak orang pakai lain macam baju.

v. Mempakai candu bagi orang kepala pening atau pun macam orang minum todi.

இந்த வாக்கியங்களில் இலக்கணப் பிழைகளும் தவறான சொற்களும் இடம்பெற்றுள்ளன. வாக்கிய அமைப்பும் முறையாக இல்லை. வாக்கியங்களைத் திருத்துவதற்கு முன்னர், அவற்றின் பொருள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்; பொருள் புரியாத அளவிற்குக் குழப்பமாக இருந்தால் ஊகிப்பதன் வழி ஓரளவேனும் புரிந்துகொள்ள முயலவேண்டும்.

பிழையான வாக்கியங்களை அப்படியே எழுதி அவற்றின்கீழ் சரியான வாக்கியங்களை எழுதுவது நேரத்தை வீணாக்கும் செயலாகும். சரியான வாக்கியங்களை மட்டுமே எழுதுங்கள். ஆனால் கேள்வியின் எண்ணையும் துணை எண்ணையும் எழுத மறவாதீர்கள்.

மேலேயுள்ள வாக்கியங்களைப் பொருள்கெடாதபடி பலவகையாகத் திருத்தலாம்; இது ஒவ்வொருவரின் நடையைப் பொறுத்தது. கீழேயுள்ள திருத்தத்தைப் பாருங்கள்.

i. Tinggal di rumah pangsa banyak keburukannya.

ii. Pendapatan seorang peladang hanya cukup untuk dirinya sendiri sahaja.

iii Kalau kita dalam kesusahan, kita boleh mendapat pertolongan daripada jiran-jiran kita.

iv. Di Malaysia terdapat banyak barang yang cantik dan ramai pula orang yang memakai baju yang beranika rupa.

v. Menghisap candu boleh memeningkan kepala atau menyebabkan seseorang itu mabuk seperti minum tuak.

ஆ. வாக்கியங்களை இணைத்தல்

Sambungkan ayat-ayat pendek di bawah ini supaya menjadi dua ayat berlapis atau berkait. (Julai 1976)

Pertunjukan itu kali terakhir. Ia telah dibuat dengan menarik hati. Pertunjukan itu selesai. Penuntun - penuntun memberi tepukan. Bunyinya gemuruh. Salim menduganya demikian. Orang ramai keluar dari dewan. Mereka berpusu-pusu. Ada yang himpit-meng himpit. Ada yang terjatuh. Ini menimbulkan kemarahn orang itu. Ini jelas kelihatan.

சின்னஞ்சிறு வாக்கியங்களை இணைக்கும்போது எந்த வாக்கியத்தின் பொருளும் விடுபட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தரப்பட்ட வாக்கியங்களின் பொருளும் மாறிவிடக்கூடாது. முறையான அமைப்புள்ள வாக்கியங்களாகப் புதிய வாக்கியங்கள் இருக்க வேண்டும்.

Bila pertunjukan terakhir yang dibuat dengan menarik hati itu selesai, penuntun penuntun memberi tepukan gemuruh sebagaimana yang diduga oleh Salim.

Orang ramai yang keluar dari dewan itu berpusa-pusu dan himpit - menghimpit sehingga ada yang terjatuh dan ini jelas menimbulkan kemarahan orang itu.

இ. ஒரே மாதிரி ஒலியுடைய/பொருளுடைய இரு சொற்களை வாக்கியங்களில் அமைத்தல்

Pilih lima daripada pasangan perkataan di bawah ini dan buatkan ayat bagi tiap-tiap satu perkataan supaya jelas perbezaan maknanya (1967)

i. pendapat-pendapatan

ii. satu-satunya-satu daripada

iii. lahir - zahir

iv. tarikan - tarikkan

v. mengaji - mengkaji

vi. diiringi - ditemani

vii. kenderaan - keinderaan

சற்று ஊன்றிக் கவனித்தால், தரப்படும் சொற்களுக்கு இடையேயுள்ள பொருள் வேறுபாடு உங்களுக்குத் தெளிவாகப் புரிந்துவிடும். நன்கு விளங்கும் ஐந்து இணைகளைத் தேர்ந்தெடுத்து, சொல்லுக்கு ஒன்றாகப் பத்து வாக்கியங்கள் அமைக்க வேண்டும். படிக்கும்போதே சொற்களின் பொருள் வேறுபாடு, படிப்பவர்களுக்கு விளங்குகின்றாற்போல உங்கள் வாக்கியங்கள் அமைய வேண்டும். வாக்கியங்கள் தெளிவாகவும் சற்று நீளமாகவும் இருக்க வேண்டும். எந்தச் சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைக்கிறீர்களோ அந்தச் சொல்லின்கீழ்க் கோடிட வேண்டும்.

ஈ. பல பொருள்கொண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்தல்

Perkataan - perkataan berikut ada yang mempunyai lebih daripada satu makna. Pilih yang mempunyai lebih daripada satu makna itu kemudian bagi tiap-tiap satunya

buat dua ayat yang menunjukkan perbezaan maknanya itu-(1972)

harus — hampa
ganjil — makan
geli — lalu
buku — jalan

Buat dua ayat yang berasingan untuk menunjukkan makna yang berlainan bagi tiap-tiap satu perkataan di bawah ini tanpa menggunakan imbuhan (1974)

Contoh: Pasang - i. Bila air pasang tidak mungkin kita menyeberangi kuala sungai itu.

ii. Ahmad membeli dua pasang kasut di kedai itu.

lalu
langsung
sekali
dalam
siang

இப்படிப்பட்ட கேள்விகளைப் பொதுவாக மாணவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு தவறான விடையை எழுதுவது இயல்பாகிவிட்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நீங்கள் உண்மையாக இரண்டு பொருளைக் கண்டுபிடிக்க வேண்டும்; அமைக்கும் வாக்கியங்கள் இரண்டும், உண்மையாகவே இரண்டு வெவ்வேறு பொருளைத் தரவேண்டும்.

i. Raman tidak suka makan gulai yang pedas.

ii. Makanan yang berzat perlu untuk anak-anak yang membesar.

iii. Pemburu itu termakan ubi yang beracun.

இந்த மூன்று வாக்கியங்களிலும் makan என்னும் சொல் வெவ்வேறு பொருளைத் தருவதுபோல் தோன்றினாலும், அடிப்படையில் "உணவு, உண்ணுதல்" என்னும் ஒரே பொருளைத்தான் தருகிறது. இப்படிப்பட்ட வாக்கியங்களை நீங்கள் அமைப்பீர்களானால் மதிப்பெண்களை இழந்து விடுவீர்கள். Imbuhan-களை இணைத்துச் சொற்களை மாற்றி வாக்கியங்களை அமைக்காதீர்கள்.

Makan என்னும் சொல்லைக் கொண்டு இருவேறு வாக்கியங்களைக் கீழ்வருமாறு அமைக்கலாம்

i. Raman tidak suka makan gulai yang pedas.

ii. Bas pelancung itu terlanggar tiang lampu kerana breknya tidak makan.

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

இரண்டாவது வாக்கியத்திலுள்ள makan என்னும் சொல்லுக்கும் "உணவு" என்பதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இப்படி அறவே தொடர்பில்லாத முறையில் இரு பொருள் கண்டு எழுதுங்கள்.

உ. சொற்றொடர்களை விளக்குதலும் வாக்கியங்களில் அமைத்தலும்

i. Terangkan maksud rangkaikata - rangkaikata berikut:

ii. Buat ayat bagi tiap-tiap rangkaikata itu untuk menunjukkan yang kamu faham maksudnya: (1975)

melapangkan hati
melepaskan lelahnya
secara mati - matian
bena tak bena
tidak ada tolak bandingnya

நீங்கள் புரிந்துகொண்ட அளவு, முதலில் சொற்றொடர்களை விளக்கிவிட வேண்டும். பிறகு பொருள் விளங்குமாறு அவற்றை வாக்கியங்களில் அமைக்கவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு சொற்றொடரை மட்டும் பார்ப்போம்.

Secara mati-matian—melakukan sesuatu dengan bersungguh - sungguh.

Secara mati-matian—Dalam perlawanan akhir Pestabola Merdeka, pemain - pemain kita telah bermain secara mati-matian untuk mencapai kemenangan.

ஊ. ஏறக்தாழ ஒரே மாதிரி இருக்கும் சொற்றொடர்களின் பொருள் வேறுபாட்டை விளக்குதல்

Terangkan perbezaan maksud pasangan - pasangan rangkaikata berikut. (1973)

i. Tidak semuanya datang
Semuanya tidak datang

ii. Pisau yang tajam seperti ini
Pisau tajam yang seperti ini

iii. Mereka berlatih dua hari sekali
Mereka berlatih dua kali sehari

சொற்களை நுணுகி ஆராய்ந்து அவற்றின் பொருளையும் பொருள் வேறுபாட்டையும் தெளிவாக விளக்கவேண்டும்.

1. Tidak semuanya datang-அழைக்கப்பட்டவர்களுள் ஒரு சிலர் வரவில்லை; அழைக்கப்பட்டவர்களுள் பெரும்பாலோர் வந்தனர். Daripada jumlah para jemputan, beberapa orang tidak datang; Kecuali beberapa orang, Kebanyakan yang dijemput telah datang.

Semuanya tidak datang--ஒருவரும் வரவில்லை; அனைவரும் வரவில்லை. Tidak ada seorangpun yang datang.

எ. சொற்றொடருக்கு / விளக்கத்துக்குப் பதிலாகச் சொல்லை எழுதுதல்

Pilih lima daripada penjelasan-penjelasan yang diberi di bawah ini dan beri satu perkataan sahaja untuk tiap-tiap satunya. (1967)

i. keadaan yang tidak heboh

ii. gerakgeri, tingkahlaku dan budi bahasa

iii. orang-orang yang berjalan dan kenderaan-kenderaan di jalanraya

iv. aturan-aturan yang mesti dilakukan

v. badan untuk mengelolakan sesuatu derma atau sekolah dan sebagainya

vi. badan yang mengeluarkan buku-buku atau majalah-majalah

vii. kejadian yang luar biasa dan menarik

தரப்படும் சொற்றொடருக்கு அல்லது விளக்கத்துக்குப் பொருத்தமான ஒரு சொல்லை நீங்கள் கண்டுபிடிக்கவேண்டும். கீழ்வருமாறு உங்கள் விடை அமையலாம். (ஐந்து சொற்கள் மட்டும்)

i. tenang — v. yayasan
ii. perangai — vi. penerbit
iv. undang-undang

இதுவரை நாம் கண்ட கேள்விகளைத் தவிர இரட்டைச் சொற்களை (எடுத்துக்காட்டு: gunung-ganang bukit-bukau) விளக்கி வாக்கியத்தில் அமைத்தல், பேச்சு மொழியை எழுத்து நடையில் எழுதுதல் போன்ற கேள்விகளும் மேலும் பலவகையான கேள்விகளும் தேர்வில் வரலாம். இவையெல்லாம் மூன்றாவது கேள்வியின் பகுதிகள் என்று பொதுவாகச் சொன்னாலும் சில சமயங்களில் நான்காவது கேள்வியிலும் இத்தகையவை இடம்பெறுவது உண்டு.

பாடநூல்களிலும் பயிற்சி நூல்களிலும் இவ்வாறான பயிற்சிகள் நிறையக் காணப்படும். அவற்றை முழுமையாகச் செய்து பாருங்கள். இரண்டு மூன்று பேர் சேர்ந்து, சொந்தமாகவே இப்படிப்பட்ட பயிற்சிகளை உருவாக்கி அவற்றையும் செய்து பயிற்சி பெறலாம். போதுமான பயிற்சி இருக்குமாயின் மூன்றாவது கேள்வியில் நீங்கள் எளிதாக மதிப்பெண்களைப் பெறலாம்.

தேர்வு நெருங்கிவிட்டது; இன்னும் எட்டே வாரங்கள்தாம் இடையில் உள்ளன என்பதை மறவாதீர்கள். காலத்தை வீணாகக் கழிக்காதீர்கள்.

உங்களைப் போன்ற இளம் பிள்ளைகள் மனம்வைத்து விடா முயற்சியோடு முயன்றால் எதையும் சாதிக்க முடியும். நம் சமுதாயத்தின் மூல பலமே நீங்கள்தாம்.

கனவுகள் பலகோடி



"மாங்கனி"

17. கதாநாயகி கதை சொன்னாள்

"வனிதா!"

"ம்..."

"என்ன வனிதா...?"

"ஒன்றுமில்லையே..."

"பயந்துவிட்டாயா...?"

"ஆமாம்! பயந்து விட்டேன்! பயங்கரமான அனுபவந்தான்..."

"நான் மெதுவாகத்தானே ஓட்டுகிறேன்..." கோபி வியப்போடு அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் மகிழ்ச்சியோடு திகிலும் பரவிக்கிடந்தது.

"நான் சொல்ல வந்தது வேறு..."

அவள் குரலில் இப்போதுதான் சற்றுத்தெளிவு பிறந்திருப்பதுபோல ஒலித்தது

"நீ என்ன சொல்கிறாய்...?"

"மோட்டார் சைக்கிள் ஒன்று படுவேகமாகப் போனதே! அதை நீங்கள் கவனிக்கவில்லையா...?"

"நான்தான் உன்னையே பார்த்துக் கொண்டிருந்தேனே..." அவன் குறும்புத்தனமாகச் சிரித்தான். அவள் மெல்லச் சிரித்துக்கொண்டாள்.

"அவன் என்னைப் பின் தொடர்ந்தே வந்துகொண்டிருந்தான்! நல்லவேளையாக உங்களைப் பார்த்தேன்... நீங்கள் மட்டும் வராமல் இருந்திருந்தால்..." அவள் தனது உடலைச் சிலிர்த்துக்கொண்டாள்.

"கழுத்தில் பெரிய சங்கிலி போட்டிருப்பவர்களுக்குத்தான் மோட்டார் சைக்கிளையும், ஸ்கூட்டரையும் பார்த்தால் இப்போதெல்லாம் பயமாக இருக்கிறதாம்."

"போதும் உங்கள் கேலி! நீங்கள் அவனைப் பார்க்கவில்லையா?"

"நீ யாரைப் பற்றிச் சொல்கிறாய்...?"

"அவன்தான் தாடிக்காரன்! லல்லிகூட அன்று சொன்னாளே..."

சரக்கென்று பிரேக் போட்டான் கோபி. இவ்வளவு நேரமும் அவள் ஏதோ விளையாட்டாகவல்லவா பேசிக்கொண்டிருக்கிறாள்...

"அப்படியானால் அவனுக்குப் பயந்து கொண்டுதான் இங்கே வந்தாயா? அவனை எங்கே பார்த்தாய்? ஏதாவது வம்பு செய்தானா...?"

கோபியின் முகத்தில் ஏற்பட்ட அந்தத் திடீர் மாறுதலைக்கண்டு அவள் ஒரு வினாடி திகைத்துப் போனாள்.

"நான் நடந்து வந்து கொண்டிருந்தபோது அவனைப் பார்த்தேன். தனியாக அவனிடம் மாட்டிக்கொள்ளப் போகிறேமோ என்று பயந்து போய்விட்டேன்! நல்ல வேளையாக ஒரு மினிபஸ் வந்தது! பார்க்காமல் கூட ஏறிவிட்டேன்!"

"ஓகோ! அதனால்தான் இங்கே வந்து இறங்கிக்கொண்டு திருதிருவென விழித்தாயா...? நல்ல வேடிக்கை...! ஆமாம்! அவன் இப்போது இப்படியே போனான்...?"

"இல்லாவிட்டால் உங்களோடு ஸ்கூட்டரில் வந்திருப்பேனா..." அவள் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள். அவன் சிரிப்பை அடக்கமுடியாமல் தவித்தான்.

"ஹூம்! அவன்கூட நல்லகாரியந்தான் செய்திருக்கிறான்... இல்லாவிட்டால் நாம் இப்படிச் சேர்ந்து செல்லும் வாய்ப்புக் கிடைத்திருக்குமா?" தோளில் பதிந்திருந்த மலர்க்கரத்தின்மீது தன் கையை வைத்து இலேசாக அழுத்தினான். அவள் விருட்டென உருவிக்கொண்டு நாணச் சிரிப்பைச் சிந்தினாள்.

"மினி பஸ்கூட ஆபத்தாண்டவனாக உதவியிருக்கிறது! அந்த மினி பஸ்ஸுக்கு எனது நன்றி!"

"உங்களுக்குக் கேலியாக இருக்கிறதா...? நான் பயந்தே போனேன்! எப்படியோ பின்னாலேயே தொடர்ந்து வந்திருக்கிறானே"

அவள் அந்த அனுபவத்தை நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்த வேகத்தில் தன்னை மறந்து கோபியின் முதுகில் நன்றாகச் சாய்ந்து கொண்டாள். கோபியின் உடல் புல்லரித்தது. ரோஜாப்பூ மாலை ஒன்று முதுகில் தவழ்வது போன்ற இன்ப உணர்வு அவன் இதயத்தில் பிறிட்டுக் கிளம்பியது.

இலேசாக அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்தான். அவள் தன்னை மறந்த நிலையில் ஏதோ இனிய கனவு காண்பதுபோல் வானத்தில் ஓடும் மேகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவனால் ஸ்கூட்டரை ஒழுங்காக ஓட்டமுடியவில்லை! வெளியுலக நினைவின்றிக் கற்பனைக் கனவில் சஞ்சரித்துக்கொண்டே சென்றவர்களைப் பின்னால் வந்த காரின் பயங்கர "ஹாரன்" ஒலி மீட்டுவிட்டது.

கோபி சட்டென்று ஓரமாக ஒதுக்கி ஸ்கூட்டரை நிறுத்திவிட்டான். அவர்களைக் கடந்துசென்ற காரின் சொந்தக்காரர் விழிகளை உருட்டி முறைத்துவிட்டுப் போனார்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்...?"

"இப்படியே போய்க்கொண்டிருந்தால் போலீஸ்காரன் நம்மை விரட்டிக்கொண்டு வந்துவிடுவான்!"

அவன் சிரித்துக்கொண்டே 'ஹெல்மட்டை' எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவளுக்குப் பழக்கமில்லாத காரணத்தால் கூச்சத்தோடு அதை வாங்க மறுத்தாள்.

"இனிமேல் நான் பஸ்ஸில் போய் விடுகிறேனே...! உங்களுக்கு ஏன் வீண் சிரமம்...?"

"சிரமமா... இதுவா...? அப்படியானால் ஆயுள் முழுதுமே இந்தச் சிரமத்தை நான் அனுபவித்துக் கொண்டிருக்கத் தயார்...!" அவள் நாணத்தோடு தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"யாராவது பார்க்கப் போகிறார்கள்! எனக்குக் கூச்சமாக இருக்கிறது." அவள் தயங்கியபடியே ஹெல்மெட்டை வாங்க மறுத்தாள்.

"இவ்வளவு நேரமும் யாரும் பார்க்கவில்லையா...? இதைப் போட்டுக் கொண்டாலாவது முகத்தை மறைத்துக்கொள்ளலாம்..." திடு திடுவென்று மோட்டார் சைக்கிளின் ஒலி கேட்கவே தன்னை அறியாமலே அதைப் பட்டென்று வாங்கிக்கொண்டாள். அவர்களைக் கடந்து சென்ற ஓர் இளைஞன் 'ஹாய்' என்று விசில் அடித்துவிட்டுச் சென்றான்.

கோபியால் அதற்குமேலும் தாங்கிக்கொள்ள முடியாமல் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தான்.

"அந்தச் சத்தமே உன்னை அலற வைத்து விடுகிறதே! அதுவும் நன்மைக்குத்தான்! இல்லாவிட்டால் நீ வரச் சம்மதிக்கமாட்டாயே!" அவள் கூச்சத்திலிருந்து விடுபட்டவளாகப் பின்னால் ஏறி அமர்ந்தாள்.

"வனிதா! இனிமேல் தனியாகக் கிளம்பாதே! லல்லி சொன்னது போல் அந்த முரடனால் ஏதாவது சங்கடம் ஏற்படப்போகிறது"

அவன் உண்மையான கவலையோடும் அக்கறையோடும் கூறியதைக் கேட்க அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

வீட்டு வாசலில் ஸ்கூட்டர் வந்து நின்றபோது வனிதாவுக்கு மேலும் ஒரு வியப்பு காத்திருந்தது.

"எவ்வளவு நாட்களாக இந்த ஊர்கோலம் நடக்கிறது?" இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று திகைத்து நின்றாள் வனிதா! கோபி அசடு வழியச் சிரித்துக் கொண்டு வனிதாவை ஏறிட்டுப் பார்த்தான். பிறகு!

"நீ தானே லல்லி, இந்தப் பொறுப்பை என்னிடம் கொடுத்தாய்! அதை நான் நிறைவேற்றினேன்...!" என்றான். சரினாவும், சுஜாதாவும் லல்லியை வியப்போடு நோக்கினர்.

18. 'துணையாக வந்தவன்'

லல்லி சிரித்துக்கொண்டே வனிதாவை நெருங்கினாள். "உன் அழகான முகத்தை ஏன் இப்படி மறைத்துக் கொண்டிருக்கிறாய்! அதைக் கழற்றிக் கொடுத்துவிட்டு வா !"

வனிதாவுக்கு ஏற்பட்ட வியப்பிலும் . கூச்சத்திலும் தலையில் 'ஹெல்மட்' இருப்பது கூட மறந்துவிட்டது.

லல்லி சுட்டிக்காட்டிய பிறகே உணர்வு வந்தவளாய் அதைக் கழற்றினாள். சரினாவும், சுஜாதாவும் ஒருவரையொருவர் பொருள்பொதியப் பார்த்துக் கொண்டனர்.

அந்த மௌனத்தைக் கலைக்க விரும்பினாள் லல்லி. "இனிமேல் என்னுடைய துணை அவசியமில்லை என்று நினைக்கிறேன். அப்பாடா! என் கவலை விட்டது...!"

லல்லி சொன்னதைக் கேட்டதும் சுஜாதாவும் சரினாவும் குபீர் என்று சிரித்தனர். கோபிகூட சிரித்தான். ஆனால் வனிதாவினால் சிரிக்க முடியவில்லை!

கண்களில் நிறைந்துவிட்ட நீர் முத்துக்கள் உதிர்ந்துவிடாமல் இருக்க மிகவும் பிரயாசப்பட்டன. லல்லியோ மற்றவர்களோ அதைக் கவனிக்கவில்லை.

"கோபி! உங்களைக் காவலுக்கு வைத்தேன்! காவற்காரனே திருட ஆரம்பித்துவிட்ட கதை மாதிரியாகிவிட்டதே."

லல்லி, கோபிக்கு மட்டுமே கேட்கும்படி மெல்ல இப்படிக் கூறினாள். கோபி வனிதாவை ஏறிட்டு நோக்கினான். அவள் முகம் வெய்யிலில் வாடிய ரோஜாப்பூவைப் போலத் துவண்டு கிடந்தது.

வனிதா தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்! "உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி! இனிமேல் நான் தனியாகக் கிளம்பவே மாட்டேன்...! அதற்குத்தான் லல்லியில்லாமல் நான் வெளியே போகவே விரும்புவதில்லை!" என்றாள் வனிதா.

"நீ ஏன் இனிமேல் தனியாகப் போக வேண்டும்? அதுதான் துணைக்கு கோபி இருக்கிறாரே..." சுஜாதா சரினாவை இடித்துவிட்டுச் சிரித்தாள்.

"அதுதானே! இனிமேல் லல்லி எதற்கு...?" சரினாவும் இப்படிக் கூறவே வனிதாவிற்கு அடங்கிய துயரம் மீண்டும் பீறிட்டது! கோபி வனிதாவின் நிலையைக் கண்டுகொண்டான்.

அவனுக்கு மிகவும் இக்கட்டான நிலை. இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் இவர்களின் கேலிப் பேச்சுக்கு ஒரு முடிவே இராது. வனிதாவின் நிலையும் மோசமாகிவிடும். எனவே அதை அந்த அளவில் முடிவுக்குக் கொண்டுவர விரும்பினான்.

லல்லியின் பக்கம் திரும்பியவன் அவளுக்கு வனிதாவைச் சுட்டிக் காட்டினான்.

"கேலி பேச இது நேரமில்லை! உன் தோழி நன்றாகப் பயந்து திகில் பிடித்துப் போயிருக்கிறாள். அவளைச் சமாதானப்படுத்தி நடந்த விவரத்தைக் கேள்!"

இவ்வளவு நேரமும் கேலிப்பேச்சில் திளைத்திருந்த தோழியர் மூவரும் திடுக்கிட்டு வனிதாவை நோக்கினர். லல்லி வனிதாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன நடந்தது வனிதா...?"

வனிதா எதுவும் பேசாமல் மௌனமாகவே நின்றாள். லல்லிக்கு அது மேலும் வியப்பை ஏற்படுத்தியது.

"என்ன நடந்தது கோபி...! நீங்களாவது சொல்லுங்களேன்?"

"யாரோ ஒரு மோட்டார் சைக்கிள்காரனைப் பார்த்து அரண்டு போய் வந்து நிற்கிறாள்..."

லல்லிக்கு சட்டென்று புரிந்துவிட்டது! யாரோ என்ன? அவன் நவின்தான்! அதனால் தான் வனிதா பயந்திருக்கிறாள்!

"அவன் ஏதாவது வம்புக்கு வந்தானா...?"

லல்லியின் குரலில் ஆத்திரம் வெடித்தது.

'இல்லை' என்பது போலத் தலையை அசைத்தாள் வனிதா. லல்லிக்கு அதுவே பெரும் நிம்மதியாக இருந்தது.

"அவன் வருவதைப் பார்த்துவிட்டு ஏதோ ஒரு பஸ்ஸில் வனிதா ஏறிக்கொள்ள அவனும் தொடர்ந்து வந்திருக்கிறான். நல்ல வேளையாக நடுவில் நான் வந்து சேர்ந்தேன். அவனைப் பார்த்த அதிர்ச்சியில்தான் ஸ்கூட்டரில் வந்து ஏறிக்கொண்டாள்....!"



"எனக்குத் தெரியும்! அவன் சுபாவமே அப்படித்தானே! அதனுல்தான் உங்களையும் எச்சரித்து வைத்தேன்...!"

"ஒன்றும் நடக்கவில்லை! வனிதா வினைகப் பயந்துவிட்டாள்! அவளைக் கேலி செய்து அழவைக்காமல் ஆறுதல் படுத்துங்கள்...!"

லல்லியிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்ட நிம்மதியோடு கோபி விடை பெற்றுக்கொண்டான்.

"தாங்யூ கோபி! நான் கேட்டுக்கொண்டதற்காகச் சிரமம் பாராமல் இவ்வளவு தூரம் உதவினீர்களே...! இது பெரிதல்ல...? இனிமேல் கவனித்துக் கொள்வதுதான் மிகவும் முக்கியம்!"

"அதெல்லாம் ஒன்றும் நடக்காது! நீ பேசாமல் இரு லல்லி!"

"உங்களுக்குச் சொன்னேன்! வனிதாவை நீங்கள் ஸ்கூட்டரில் அழைத்துக் கொண்டு வந்ததைப் பார்த்து விட்டான் அல்லவா? இனிமேல் உங்கள் பக்கம்தான் திரும்புவான்! எதற்கும் கவனமாக நடந்து கொள்ளுங்கள்...!"

கோபியை அனுப்பி வைத்துவிட்டுத் திரும்பிய லல்லிக்கு வனிதாவைப் பார்க்கப் பரிவு ஏற்பட்டது.

"ஒன்றுமில்லாமல் நீ ஏன் பயப்படுகிறாய்...? அவன் வெறும் முரடன்தான்! நீ நல்ல காரியம் செய்தாய்! கோபியோடு ஸ்கூட்டரில் வந்ததைப் பார்த்த பிறகு அவனுக்கு நன்றாயப் புத்தி வந்திருக்கும்!"

"அதுதான் எனக்கும் பயமாக இருக்கிறது! என்றால் கோபிக்கு ஏதாவது தொந்தரவு ஏற்படக் கூடாதே என்றுதான் அஞ்சுகிறேன்!"

"அதெல்லாம் ஒன்றும் நடக்காது! நான் கவனித்துக்கொள்கிறேன்! சரி, கதவைத் திற; எவ்வளவு நேரம் இப்படி வாசலிலேயே தவம் கிடப்பது...?"

லல்லி மிகவும் சகஜமாகப் பேசினுள். வனிதாவுக்கும் சிறிது தெம்பு பிறந்தது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். மூவரும் அவளைப் பின்தொடர்ந்தனர்.

சுஜாதாவுக்கும் சரீனுவுக்கும் அதற்குமேல் பொறுமை இருக்கவில்லை!

"என்னடி லல்லி! யாரவன்?"

"ஏன் உனக்குத்தான் தெரியுமே அவனை; பெயர் கூட நவீன் என்று சொன்னேன்!"

"அவனு...?"

சுஜாதாவும் சரீனுவும் ஏக குரலில் இப்படிக் கேட்டனர்.

"அவனேதான்! உனக்கும் அறிமுகம் செய்துவைக்கட்டுமா?"

"ஐயையோ வேண்டாம்!" சரீனு இப்படிக் கூறவே வனிதா கூடச் சிரித்துவிட்டாள்.

-வளரும்

பிடித்த ஆசிரியர்



திரு. கி. வ. ஜ. அவர்களுடன் கட்டுரையாசிரியர்

1950-ஆம் வருடம் மே மாதம். மயிலை மந்தைவெளிப்பாக்கத்தில் நார்ட்டன் தெருவில் ஒரு வீட்டினுள் நுழைந்தேன். காலை நேரம்.

முன் அறையில் மும்முரமாக எழுதிக்கொண்டிருந்தவருக்கு வணக்கம் தெரிவித்து அடக்கமாக ஒதுங்கி நின்றேன். நான் அப்போது 17 வயது இளைஞன். பிரபல பத்திரிகை ஆசிரியர் ஒருவர் முன்பு ஓர் இளைஞன் எப்படித் தைரியமாக நிற்பான்? ஆனுலும் தன்னம்பிக்கையோடு நின்றேன். "வாருங்கள்! என்ன வேண்டும்?" என்று அன்போடு அழைத்து அருகில் அமரச் சொன்னுர் ஆசிரியர்.

பெயரைச் சொல்லிவிட்டு, வந்த காரணத்தையும் சொன்னேன் நான்.

"ஓஹோ! போன மாதக் "கலைமகளில்" ஒரு கதை எழுதியிருந்தீர்களே! நீங்கள்தானு அது? அந்தக் கதையைப் படித்தபோது எழுத்துத் துறையில் முதிர்ச்சியடைந்த ஓர் எழுத்தாளர் எழுதினுற்போலிருந்தது. நீங்கள் இன்னும் மாணவப் பருவத்தினராகவே தோன்றுகிறீர்களே!" என்று வியப்புடன் கேட்டார் கலைமகள் நிர்வாக ஆசிரியரான திரு. கி. வா. ஜகந்நாதன். என்ன பதில் சொல்வது என்று புரியாமல் நின்றேன். பத்திரிகைத் துறையில் நுழைய முதற்படியில் கால் வைக்க முயலும் என்னை ஆசிர்வதித்து, உற்சாகம் ஏற்படும்படி அறிவுரைகள் கூறினுர் அன்று!

பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் கூறின அறிவுரைகள் பசுமையாக என் மனத்தில் நிலைத்துள்ளன.

கலைமகள் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் பதவியில், பத்திரிகை ஆரம்ப முதல் இருந்துவரும் திரு. கி. வா. ஜ. சகோதரப்பத்திரிகைகளையும் அன்போடு பாராட்டிப் பேசுவார்.

துணையாசிரியர் தமக்கு உதவியாளர்தானே என்ற எண்ணமின்றித் தமக்கு இணையாக அமரச் சொல்லிப் பேசும் பாங்கு, பத்திரிகைத்துறையில் பழுத்த அனுபவம் வாய்ந்த திரு கி. வா. ஜ. அவர்களின் தனிப் பண்பு. தம்மைத் தேடிவருபவருக்குத் துணை ஆசிரியர்களைத் தயக்கமின்றி அறிமுகம் செய்துவைப்பவர். கலைமகள் ஆரம்பமுதல் 44 ஆண்டுகளாக ஆசிரியர் பீடத்தில் அமர்ந்துள்ள அவர்களின் அனுபவ உரைகள் எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் புகழ் ஏணியின் படிகளில் ஏறிச் சென்று உச்சநிலை அடைய வழி காட்டுவதாக இருக்கும்.

துணை ஆசிரியரிடம் பேசும்போது சாதாரணமாகச் சொல்வார் "சார்! ஒரு பத்திரிகைக்கு எஜமானர் யார் தெரியுமோ! பணம் போட்டு நடத்தும் முதலாளியோ ஆசிரியரோ அல்ல. ஒரு பக்கம்கூடத் தவறவிடாமல் பொறுமையாக ரசித்துப் படிக்கும் வாசகர்கள்தாம் எஜமானர்கள். அதைத் தெரிந்து பத்திரிகை நடத்தவேண்டும்!" என்பார் திரு. கி. வா. ஜ.

அடுத்தபடி, "எனக்குத் தொல்காப்பியம் பிடிக்கும். அதைப்பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுத ஆவல் அதிகம்தான். அதற்காக என் கையில் பத்திரிகையிருக்கிறதே என்று என் புலமையைக் காட்ட எழுதி, வாசகர்களை அலுப்புத்தட்டச் செய்யலாமா? ஒரு பத்திரிகையில் வாசகர்கள் காலத்துக்கேற்றவாறு விரும்பிப் படிக்கும் தகவல்களை சரியாக தெரிந்து ஆசிரியர் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்" என்பார். இதை மறுக்க முடியுமா?

"பத்திரிகைக்கு எழுதுவது என்று ஆரம்பித்தால் எழுதும் விஷயத்தைத் தெளிவாக வாசகர்கள் மனத்தில் புரியும்படி எழுதத் தெரிந்துகொள்ளவேண்டும். அதுவே எழுத்தின் வெற்றிக்கு வழி" என்பார் வாகீச கலாநிதி திரு கி. வா. ஜகந்நாதன்.

பத்திரிகை வெளிவந்தபின், அடுத்த இதழ் வேலை தொடங்க இருக்கும் நான்கு நாட்கள் இடைவெளியில் சக ஊழியர்களுடன் எத்தனையோ விஷயங்கள் பற்றி ஹாஸ்யமாகப் பேசி அவர்களை உற்சாகப்படுத்தும் பண்பு திரு. கி. வா. ஜ. வின் பெருந்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"எனக்குப் பிடித்த ஆசிரியர்" என்று நான் சொல்வதில் வியப்பென்ன?

சி. இராஜப்பா


விதிகள்

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால்எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ.100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ.10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ.10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சியவெ.40 அடுத்த போட்டிக்கானபரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
8. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
9. இறுதிநாள் 10-10-1977
10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

புதிய சமுதாயம்
131, Jalan Tuanku Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.

தமிழறிவுப் போட்டி-7

முடிவு நாள் 10-10-77



பெயர்: ____________________

அடையாள அட்டை எண்: ____________________

முகவரி: ____________________

____

____
கையொப்பம்

இடமிருந்து வலம்:

2. இது அவ்வளவு எளிதாக மாறாது.
4. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று.
6. பெண்கள் தத்தம் கணவரை இப்படி அழைப்பது இப்போது குறைந்து வருகிறது.
8. பருவங்களில் ஒன்று.
10. தோட்டப் பாட்டாளிகளுக்கு இவரைத் தெரியாமல் இருக்குமா?
11. இதை விரும்பாத பெண்களும் உண்டோ?

மேலிருந்து கீழ்:

1. 'தமிழ்நாடு' என்று சென்னைக்குப் பெயர் வைத்தவர்.
2. தேர்ப்பாகனை இப்படியும் அழைக்கலாம்.
3. இமை தலைகீழாகிவிட்டது.
5. ஒழுங்குபடுத்தினால் புண்ணிய ஸ்தலம்.
6. உணவுக்கு இப்படியும் ஒரு பெயர்.
7. அண்மையில் விலை குறைந்திருப்பதாக அறிவிக்கப்பட்ட இது மாறிக்கிடக்கிறது.
9. ஆண்கள் இதை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்துவார்கள்.

முருகுவைக் கேளுங்கள்

அ. ராஜேஸ்வரி, சுங்கை ரம்பை தோட்டம், பத்தாங் பெர்ஜுந்தை

கே: கோலம் வரைந்து அனுப்பினால் வெளியிடுவீர்களா?

ப: நல்ல கோலமாக இருந்தால் வெளியிடுவோம்.

என். ஜெயபாலன், (நிர்மல்) சிரம்பான்

கே: பெண்களிடம் உள்ள தனிச் சிறப்பு என்ன?

"பொல பொல" என்று உதிரும் கண்ணீர்.

குமாரி க. குமுதா தேவி, கங்கார் பெர்லிஸ்

கே: மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அதனை அன்புஎன்று சொல்லக்கூடாது. சந்தர்ப்ப சாகசம் என்றுதான் சொல்லவேண்டும்.

ரோண்ணில் கமால், சுங்கை பொஙகோ தோட்டம், பீடோங்

கே: தாழ்வு மனப்பான்மையை எப்படிப் போக்குவது?

ப: திருக்குறளில் ஊக்கமுடைமை எனும் அதிகாரத்தைப் பலமுறை படியுங்கள். தாழ்வு மனப்பான்மை தானே பறந்துபோகும்.

எஸ். முனியன், குளோரி தோட்டம் பந்தாய் ரெமிஸ்

கே: ஒரு பெண் தன்னை விரும்பும் ஆணிடம் முதலில் எதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்?

ப: அவனுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைப் பற்றி!

கா. விஜயகந்தன், சுங்கைப்பட்டாணி

கே: மனச்சாட்சி இருந்தும் மனிதன் ஏன் தவறு செய்கிறான்?

ப: சந்தர்ப்பங்கள் செய்யும் சதிதான் இதற்குக் காரணம்.


குமாரி தி. தமிழரசி, தம்பின்

கே: மீட்டரைத் திறந்து தண்ணீர் திருடுபவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கே: இம்மாதிரி தண்ணீர், மின்சாரம் முதலியவற்றைத் திருடுபவர்கள் தேசத்துரோகிகளைக் காட்டிலும் மோசமானவர்கள்.

கொ. வனிதநாதன், சுங்கை சுமுன், தெலுக்கான்சன்

கே: இன்றைய இளம் தலைமுறையினர் பெரும்பாலோர் காதல் திருமணமே செய்து கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?



ப: இன்றைய தலைமுறையைச் சேர்ந்த இளவட்டங்களுக்கு முந்திய தலைமுறையைக் காட்டிலும் காதலிக்க நேரமும், வாய்ப்பும், சுதந்திரமும் அதிகமாக இருப்பதுதான் காரணம்.

எம் இலட்சுமணன், ஜெரம்

கே: இந்தப் பகுதியில் குறைந்தது ஐம்பது வாசகர்களுக்காவது பதில் அளித்தால் அநேகர் பங்கு கொண்டு திருப்தி அடைவார்கள் என்பது என் எண்ணம். ஆவன செய்வீர்களா?

ப: தங்கள் ஆலோசனையைக் கருத்தில் கொண்டு ஆவன செய்கிறோம்.

பா. பிரான்சிஸ், தங்காக், ஜோகூர்

கே: இந்த உலகில் பொய்யைவிடக் கசப்பானது எது?

பொய் மிகச் சாதாரணமான குற்றம். அதனைவிடப் படுமோசமான, படுகசப்பான மாபாதகங்கள் ஏராளம் ஏராளம் உண்டு.

எம். மீனாட்சி, சீரோ தோட்டம், ரவுப்

கே: ஐந்து வீடுகளைக் கொண்ட ஒரு வரிசையில் ஓடும் சாக்கடை நீரைத் தடுத்து வைக்கும் சில சாக்கடைகளைப் பற்றித் தாங்கள் கூறுவது என்ன?

ப: நீங்களே பொருத்தமாக வர்ணித்துவிட்டீர்கள். அது போதும்.

தெ. கு. ஆறுமுகம், சுங்கை கிலா, பேரா

கே: போதை ஒழிப்பில் காட்டும் தீவிரம், சம்சு ஒழிப்பிலும் காட்டப்பட்டால் பெரும்பாலும் சம்சு ஒழிந்துவிடும் ஒரு போத்தல் சம்சு வைத்திருந்தாலும் பிரம்படி தரப்படும் விதத்தில் தண்டனை முறைகளும் திருத்தப்பட்டால் நிலைமை சீர்படும். இதை அரசாங்கம் கவனிக்குமா?



ப: அண்மைக்காலமாக சம்சு ஒழிப்பு வேட்டையையும் சுங்க இலாகா அதிகாரிகள் தீவிரமாக நடத்தி வருகிறார்கள். அதனால் நல்ல பலனும் கிடைத்து வருகிறது. தாங்கள் சொல்கிறபடி சம்சுக் குற்றங்களுக்குத் தண்டனைகளை மேலும் கடுமையாக்குவது நன்மையாக இருக்கும். அரசாங்கம் இது பற்றி ஆலோசிக்கு மென்று எதிர்பார்க்கலாம்.

பி. ரீனு தாஸ், கோலாலம்பூர்

கே: அண்ணே, ஒரு பெண் ஒருவரைக் காதலித்துக் கடைசியில் அவரைத் திருமணம் செய்துகொள்ள மறுத்து விடுகிறாள். பிறகு அவர் வேறொரு பெண்ணைக் காதலிக்கிறார். சில மாதங்கள் கடந்து அந்த முதல் பெண் மறுபடியும் அவரைக் காதலிக்கிறாள். அப்படியானால் இரண்டாவதாகக் காதலித்த பெண்ணின் கதி என்ன ஆவது?

ப: இரண்டாவது பெண் சற்றுப் பொறுமையாக இருந்தால் அந்த ஆசாமி மறுபடியும் அவர் பக்கம் திரும்பக்கூடும். அப்படித் திரும்பாவிட்டாலும் ஒன்றும் குடி முழுகப் போவதில்லை. இந்தக் காலத்துக் காதல்களில் "காதல் போயிற் சாதல்" என்று சொல்லுமளவுக்குக் கவலைப்பட வேண்டிய காதல் அபூர்வமாகத்தான் இருக்கும்.

. கே. எஸ். ராஜா, சொகமானா தோட்டம,
பந்தாய் ரெமிஸ்

கே: அண்ணா, ஊமையாக இருக்கும் பெண்களைப் பற்றி தங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: நம்பவும் முடியாது; நம்பாமல் இருக்கவும் முடியாது.

ஜெய். நாகூர்கான், கோலாலம்பூர்

கே: கலைத்துறையால் சமுதாயத்தில் மலர்ச்சி ஏற்படுமா?



ப: கலைத்துறை களை மண்டாத துறையாக இருக்குமானால் சமுதாயத்தில் நிச்சயம் அதனால் மலர்ச்சி பிறக்கும்.

மு. கமலநாதன், தம்பாஹான், கோலாலம்பூர்

கே: சார், இஸ்ரேல், இலங்கை, இந்தியாவிலும் -ஏன், ம.இ.கா.விலும்கூட-பெண்கள் வந்த வேகத்தில் தடுக்கிக் கீழே விழுந்ததின் காரணமென்ன?

ப: இஸ்ரேல், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் பெண் பிரதமர்கள் நீண்டகாலம் ஆண்ட பிறகே கீழே விழுந்திருக்கிறார்கள். நீங்கள் சொல்வதுபோல் வந்த வேகத்தில் தடுக்கி விழுந்துவிடவில்லை. ம. இ. கா.வில் கூட இந்த ஆண்டு நடைபெற்ற தேசியப் பேராளர் மாநாட்டில்தான் பெண்களுக்கு முழு ஏமாற்றம் ஏற்பட்டது. இதற்குப் பெண்கள் போட்டியிட்ட பதவிகள் பொருத்தமாக அமையாததுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

ஏ. எஸ். ரவி பெருமாள், குக்கூப் தோட்டம், பொந்தியான்

கே: திருமணத்தின்போது மணமக்களுக்கு மொய்ப் பணம் கொடுப்பவர்களுக்கு (அவர்கள் வீட்டில் நல்ல காரியங்கள் நடைபெறும்போது) திரும்பக்கொடுப்பது அவசியமா?



ப: இத்தகைய பரிசுப் பரிமாற்றம் குடும்பங்களுக்குச் சுமையாக இருந்தாலும் உறவை வளர்த்துக் கொள்ள அவசியமே ஆகும். ஆனால் கண்டிப்பாகத் திருப்பிச் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை.

மு. கதிரவன், மதி, சலம், பந்தாய் ரெமிஸ், பேரா

கே. "வாழ்க்கைத்துணை நலம்" என்பதன் பொருள் என்ன?

ப: வாழ்க்கைத்துணை என்பது இல்லக்கிழத்தியைக் குறிக்கும். இல்லக்கிழத்தியின் சிறப்புக்களை எடுத்துக் கூறும் அதிகாரத்திற்கு வள்ளுவர், வாழ்க்கைத் துணை நலம் என்று பெயரிட்டிருக்கிறார்.

கே: காதலால் யாராவது வாழ்ந்ததாக வரலாறு உண்டா?

ப: காதல், வாழ்க்கைக்கு உயிர்ப்புத் தருகிற சக்தியாகும். வாழ்க்கையைக் காதலின் பயன் என்று சொல்வதும் பொருந்தும். காதல் வாழ்கிறது என்பதற்கு தாஜ்மஹால் ஒன்று போதுமே!

நளினி சந்திரன், கம்போங் சாலாக் திங்கி, சிப்பாங்

கே: தன்னால் செய்ய முடியாத காரியத்தை அடுத்தவர் செய்யும்பொழுது, அதில் குற்றம் கண்டு பிடிப்பவர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் யாது?

ப: கையாலாகாத வயிற்றெரிச்சல்காரர்கள். தாமும் செய்ய மாட்டார்கள்; மற்றவர்களையும் செய்ய விடமாட்டார்கள்.

என். முக்கேஷ், மலாக்கா

கே: முதலமைச்சராக இருந்துவரும் எம்.ஜி.ஆர்., இனி படங்களில் நடிக்கும் சாத்தியம் உண்டா?

ப: திரும்பவும் படவுலகுக்கு எம்.ஜி.ஆர். வருவாரென்று நடிகை லதா ஆருடம் கூறியிருக்கிறாரே!

கே. கோவலன், பத்துக்காஜா

கே: ஹரிராயா பெருநாளுக்கு இரண்டு நாள் பொது விடுமுறை; சீனப்புத்தாண்டுக்கு இரண்டு நாள் பொது விடுமுறை; தீபாவளிக்கு ஏன் ஒரு நாள் மட்டும் பொது விடுமுறை கொடுக்கப்படுகிறது? இதை ஏன் ம இ. கா. இதுநாள்வரை கேட்காமல் இருக்கிறது?



ப: ம. இ. கா. வும் இந்திய சமூகமும் இந்த விடுமுறைக் கோரிக்கையைப் பலதடவையும் வலியுறுத்தி வந்திருப்பதை மறுப்பதற்கில்லை. என்றாலும் அரசாங்கம் இத்தகைய முடிவுகளை எடுப்பதற்கு நீண்ட அவகாசத்தை எடுத்துக்கொள்வது இயல்பு. தொடர்ந்து வலியுறுத்தி வந்தால் இத்தகைய கோரிக்கைகள் ஏற்கப்படுவது திண்ணம்.

இ. மாரிமுத்து தஞ்சோங் மாலிம்

கே: பயணம், பணயம் இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: பயணம் என்பது பிரயாணத்தைக் குறிக்கும். பணயம் என்பது பிணை நிற்பதைக் (ஈடு வைத்தல்) குறிக்கும்.

ஏ. பி. ராம்குமார், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் தேர்தல் முடிவுகளைப்போல், நம் நாட்டுத் தேர்தலிலும் ஒரு புதிய மாற்றம் ஏற்படுமா?

ப: அப்படித் தலைகீழ் மாற்றம் ஏற்படுகின்ற அளவுக்கு, நமது ஆளும் கட்சி நிதானத்தை இழந்து மக்களின் தீராத வெறுப்பைத் தேடிக்கொண்டு விட்டதாகச் சொல்ல முடியாது.

ஜி. குணசேகரன், கம்போங் துன் ரசாக், பூசசோங்

கே: இப்போது "புதிய சமுதாய"த்தின் வளர்ச்சி எப்படி உள்ளது?



ப: வளர்பிறையாக ஓங்கி, மக்களின் நெஞ்சக் கடலை மகிழ்ச்சியால் பொங்கச் செய்து வருகிறது.

கே: திறமையை வளர்க்க என்ன செய்யவேண்டும்?

ப: பயிற்சி, போதனை, படிப்பு, உழைப்பு மூலம் தன் திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

ச. தமிழ்ச்செல்வன், தெலுக்கான்சன்-

கே: சமூக, குடும்பப் பிரச்சினைகள் நிறைந்த கதையினூடே காதலை ஆங்காங்கே உணர்ச்சிமயமாகப் படைக்கும் நாவலாசிரியர்களுள் சிறந்தவர் யார்?

ப: இவ்வாறு படைப்பதில் அகிலன் தலைசிறந்தவர். எழுதப்படும் காலத்தின் சமூக, அரசியல், குடும்பப் பிரச்சினைகளைப் பின்னணியில் அமைத்து ஓர் அழகான காதல் கதையை அவர் கூறுவதை அவருடைய நாவல்கள் அனைத்திலும் காணலாம்.

கே: இந்து சமய அடிப்படைக் கேள்விகள் அடங்கிய நூல் எது?

ப: ஆறுமுக நாவலரின் சைவ சமய வினா - விடை இந்த வகையில் உங்களுக்கு உதவும்.

என். ஜெயபாலன், (நிர்மல்) சிரம்பான்

கே: சிவபுராணத்தை இறந்தவர்கள் வீட்டிலும் ஓதுகிறார்களே, இது தவறாகுமா?

ப: தவறாகாது.

சு. கணேசன், ஜொகூர் பாரு

கே: நகைச்சுவை இலக்கியம் தமிழில் வளர்ந்துள்ளதா? சமீபத்தில் தாங்கள் படித்த ஒரு நகைச்சுவைக் கதையைக் கூறுங்கள்.

ப: தமிழில் இன்னும் நன்கு வளராத சில துறைகளில் இதுவும் ஒன்று. இயல்பாக அமைந்த நகைச்சுவை உணர்வு பெற்றோர் ஒரு சிலரே. அவர்களுள் எழுத வருவோர் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே என்பதுதான் வளராததற்கு ஒரு முக்கிய காரணம்.

"சீதாப்பாட்டியின் சபதம்" சமீபத்தில் நான் படித்து முடித்த ஒரு நகைச்சுவைக் கதை. பாலைவனச் சோலையாக இருந்தது. பொதுவாகத் தொடர் கதைகளை வாரம் வாரம் காத்திருந்து படிக்கப் பொறுமையில்லாத நான், தொடராக வெளிவரும் போதே படிப்பது அப்புசாமிக் கதைகளைத்தான்.

ஆர். லோகநாதன், ஸ்கூடாய், ஜொகூர்

கே: தமிழ் ஆறாம் வகுப்புவரை மட்டும் படித்த ஒருவர் இலக்கியத்தை நன்கு புரிந்துகொள்ள முடியுமா?

ப: இலக்கியம் என்பது கவிதை, சிறுகதை, நாவல் நாடகம், பயணக் கட்டுரை முதலிய பலவற்றையும் உள்ளடக்கியது. தற்காலத் தமிழ் இலக்கியத்தின் தலையாய பண்பே எளிமைதான். எனவே முயன்றால் புரிந்துகொள்ளத் தடை எதுவும் இல்லை.

கே: "தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"
என்னும் குறளின் கருத்தை விளக்க முடியுமா?

ப: "பிறக்கும்போதே புகழுடன் பிறக்கவேண்டும்; இல்லாவிட்டால் பிறக்காமல் இருப்பது நல்லது" என்று பொதுவாக இக்குறளுக்குப் பொருள் கூறுவார்கள். பிறக்கும் போது எப்படிப் புகழுடன் பிறக்க முடியும் என்ற கேள்வி இப்பொருளைப் பார்த்தவுடன் கேட்கத் தோன்றும். "ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும்; அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருத்தல் நல்லது" என்று டாக்டர் மு. வ. இக்குறளுக்குக் கூறும் பொருள் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

சாந்தி முத்து, பெட்டாலிங் ஜெயா

கே: தன் கணவன் பாண்டிய மன்னன் இறந்ததும், உடன் கோப்பெருந்தேவி "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் " என்று எண்ணி, கணவன் பாதம் பணிந்து உயிர் விடுகிறாள். ஆனால் கண்ணகியோ தன் கணவன் இறந்த பின்னும் பல நாட்கள் உயிர் வாழ்ந்திருக்கின்றாள். ஆகவே கற்புக்கரசி கண்ணகியைவிடக் கோப்பெருந்தேவி ஒரு படி மேலல்லவா?

ப: தான் பிழை செய்தவன் என்பதை உணர்ந்த அளவில் பாண்டியன் உயிர் விட, கோப்பெருந்தேவி கணவனைத் தொடர்கிறாள். கண்ணகியும் கோவலனை உடனே தொடர்ந்திருந்தால், கோவலன் குற்றவாளி என்ற பழியிலிருந்து மீண்டிருக்கமாட்டான். ஒரு மனைவியின் கடமை கணவனுக்கு ஏற்பட்ட பழியைத் துடைப்பதுமாகும். அவ்வகையில் தன் கடமையைச் செய்து கண்ணகி கணவனைச் சேர்கிறாள். எனவே இருவர் நிலைகளும் வேறு. இவற்றில் உயர்வு தாழ்வு இல்லை.

ஜெ. தங்கதுரை, தாப்பா

கே: புஷ்பா தங்கதுரையைப் பற்றிச் சில வரிகள்?

ப: வாசகர்களின் பலவீனம் புரிந்து எழுதுபவர். எனினும் நறுக்குத்தெறித்தாற்போன்ற நடையை இவர் படைப்புக்களில் காணலாம்.

எல். எஸ். மனோகரன், புக்கிட் செராக்கா தோட்டம், சிலாங்கூர்

கே: கண்ணதாசனின் கவிதைக்கும் பாரதிதாசன் கவிதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

ப: இயற்கை, தொழிலாளர், பெண் விடுதலை, காதல், சீர்திருத்தம், பெண் கல்வி, தமிழ் முதலிய பல்வேறு துறைகளில் பாடியவர் பாரதிதாசன். சில இடங்களில் காட்டாறாகவும், சில இடங்களில் அருவியாகவும், சில இடங்களில் நீரோடையாகவும், சில இடங்களில் கடலாகவும், சில இடங்களில் குளிர் தென்றலாகவும், சில இடங்களில் சோகத்தைப் பிழியும் உயிரோட்டமாகவும் இவர் கவிதைகள் இருக்கும். கண்ணதாசன் கவிதைகளில் இவ்வளவு பண்புகளையும் காண முடியாது. காதலும், தத்துவமும் இவருக்குக் கைவந்தவை. பாரதிதாசன் காதலைப் பாடினாலும் பொதுவாகப் பாடமாட்டார்; பல நிலைகளில் உள்ளவர்களின் காதலையும் பாடுவார். கண்ணதாசன் காதல் பொதுவானது. இருப்பினும் தற்காலத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு இருவரும் தத்தம் பங்கை ஆற்றியுள்ளனர்.

குமாரி கி. சரஸ்வதி, பீடோர்

கே: ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் படிக்கவேண்டிய தமிழ் நூல் எது?

ப. திரு வி.க வின் "பெண்ணின் பெருமை", டாக்டர் மு. வ. வின் "தங்கைக்கு" ஆகிய இரண்டையும் சிறப்பாகவும், பிற நல்ல தமிழ் நூல்களைப் பொதுவாகவும் பெண்கள் படிக்கவேண்டும்.

கே: இன்னும் அழியாப் புகழ்பெற்ற திருக்குறளின் மகிமை என்ன?

ப: காலத்திற்கு வேண்டிய நீதிகளைக் கூறாமல், மனித மனத்தை நுட்பமாக அறிந்து, எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் உண்மைகளைக் கூறுவதே!

பந்தயம்

ஆர். சண்முகம்

பஸ் ஈப்போவிலிருந்து புறப்பட்ட அதே சமயம் வேலாயுதம் சாரின் மனத்திரையிலும் ஓட ஆரம்பித்து விட்டது. 'பார் பார், தலைநகரின் பெருமை "பார்' என்ற "டெக்னிக் கலர்" படம்

ஆகா! "இபு கோத்தா"வின் பிரும்மாண்டமான அடுக்குமாடி கட்டடங்கள் என்ன... வாகன நெரிசல் என்ன... நாடாளுமன்றம் என்ன ...தேசியப் பள்ளிவாசல் என்ன... பத்துமலை என்ன... தேசிய தொல்பொருள் காட்சிசாலை என்ன இன்னும் என்ன என்ன...

ஓ! அவரும் அந்தக்காட்சிகளின் லயிப்பில் என்னமாய்த் தன்னை மறந்து போகிறார்; சிரிக்கிறார்; வியக்கிறார்; முறைக்கிறார்; நெளிகிறார்; திகைக்கிறார்; நவரசங்களையல்லவா பிழிந்துவிட்டுக் கொண்டிருக்கிறார்...

ஆனால், பஸ் கோலாலம்பூரை அதோ இதோ என்று நெருங்கி விட்ட போதோ, அதுவரை ஓடிக்கொண்டிருந்த 'டெக்னிக்கலர்' படம் மறைந்தே போய்விட்டது. அதற்குப் பதிலாக கேங்ஸ்டர், கொலை, வழிப்பறி, மிரட்டல், கத்தி, துப்பாக்கி, உதை, குத்து என்று ஐயகோ, எல்லாமே படு பயங்கரமாக மாறி, சாதா கறுப்பு வெள்ளையில் ஓடத் தொடங்கி விட்டது.

இப்போது சாரின் முகத்தில் எட்டு ரசங்களும் மாறி ஒன்பதாவது ரசமான 'பயரசம்' மட்டும் ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டது.

"கோலாலம்பூரைப் பார்க்க வேண்டும்" என்ற ஆசை போய் "ஏண்டா வந்து தொலைந்தோம்" என்று அவர் மனக்குறளி, பேயைக் கண்டதுபோல் அலறத் தொடங்கி விட்டது.

நூற்றிரண்டு மாணவர்கள், ஆறு ஆசிரியர்கள்... ஆக இத்தனை பேர்களுக்குத் தலைமையாசிரியராய் இருக்கும் பெரிய சாரைக் கொஞ்சம் கூட மரியாதை காட்டாமல் இந்தத் தலைநகரம் வதம் பண்ணத் தொடங்கிவிட்டது.

வேலாயுதம், தன் ரோத்தானுக்கு முன் நடுங்கும் ஒன்றாங்கிளாஸ் மாணவனைக மாறி பஸ்ஸில் ஒன்றிப் போய்க்கிடந்தார்.

கோலாலம்பூரில் அவர் தங்க வேண்டியது ஓர் இரவு — இன்றைய இரவு மட்டும்தான். நாளைக்காலையில் புறப்பட வேண்டியதுதான்.

ஆனல் அதற்குள் என்னென்ன, எப்படியெப்படி... அவர் மனம் படபடத்தது. உடலோ வெட வெட எனக் குளிர்சுரம் கண்டது போல் நடுங்கியது.

ஈப்போ ரோட்டிலிருக்கும் தொழிலாளர் இலாகாவில் ஒரு வேலை ஆகவேண்டும் அவருக்கு. அவ்வளவு தான்! அதற்காகத்தான் அவர் கோலாலம்பூரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன் அதாவது "மெர்டேகா" அரங்கம் கட்டப்பட்ட புதிதில் ஒருமுறை வந்திருக்கிறார்.

அதுவும் ஒரு திருமண விஷயமாகக் குடும்பத்தோடு வந்துவிட்டுப் போனர். அதற்குப் பிறகு இந்தப் பக்கம் அவர் வரவில்லை. வரவேண்டிய அவசியமும் அவருக்கு ஏற்படபடவில்லை.

பல வருடங்களுக்குப் பிறகு......

'தனியாக வந்திருக்கவே கூடாது" அவர் மனம் மீண்டும் பேதலித்தது.

பஸ் தலைநகரில் கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தது.

"ஈப்போ ரோட்டிலேயே ஓர் ஓட்டலைப் பிடித்துத் தங்க வேண்டியதுதான். அப்பத்தான் காரியத்தை முடித்துக்கிட்டு புறப்பட வசதியாக இருக்கும்."

இப்போது பஸ் நகருக்குள் ஓடவில்லை, ஊர்ந்தது. அத்தனை வாகன நெரிசல்!

முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு புதிய பஸ்டேசனிலிருந்து வேலாயுதம் வெளியேறினர்.

"பஸ்ஸிலே போனா வழி தவறி விடுவோம். இரண்டு மூணு வெள்ளி போனாப் போவுது; டாக்சியிலே போயிடுவோம்". என்று சொல்லி ஏறி உட்கார்ந்தார். டாக்சி ஓட ஆரம்பித்தது.

"நாம வந்த வழி மாதிரில்லே இருக்கு! அட ஆமா, அதுவே தான். சேச்சே! இப்படித் தெரிஞ்சிருந்தா அங்கேயே இறங்கியிருக்கலாமே "

ஆமாம், அவர் பஸ் வந்த அதே மார்க்கத்தில்தான் இப்போது டாக்சி திரும்பி ஓடிக்கொண்டிருந்தது.

கோலாலம்பூர் எடுத்த எடுப்பிலேயே அவரை ஏமாற்றிவிட்டது.

ம. இ. கா. தலைமையகத்திற்கு முன்னால் டாக்சி நின்றது. மூன்று வெள்ளியைக் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கினர் வேலாயுதம்.

யாரோ ம. இ. கா. தலைவர் போலிருக்கிறது என்றெண்ணி விட்ட டாக்சி டிரைவர் மீண்டும் ஒரு வணக்கத்தைத் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டான்.

அவர் நின்ற இடத்திற்கு நேர் எதிர்ப்புறத்திலேயே ஒரு பிரும்மாண்டமான ஓட்டல் "வாங்க சார்" என்று அழைப்பது போல் அவரைப் பார்த்துக்கொண்டு நின்றது.

அவர் கரத்தில் இருந்த ஜேம்ஸ் பாண்ட் பேக்கைப் பணிவோடு வாங்கிய ஓர் ஓட்டல் பணியாளன் அவரை உள்ளே அழைத்துச் சென்று குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அறையைக் காண்பித்தான்.

ஒருநாள் -ஓர் அறை இருபது வெள்ளி! பணத்தையும் அடையாளக் கார்டையும் கொடுத்துவிட்டு அறைக்குள் நுழைந்தார்.

அவருக்குள் சற்றுமுன் நடமாடிக்கொண்டிருந்த பயமுறுத்தல்கள் பூரணமாக வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டன இப்போது!

இங்கே எந்தப் பயலும் வர முடியாது' ஒரு முறை ஒய்யாரமாகப் படுக்கையில் சரிந்து எழுந்தார்.

அவர் தூங்கி எழுந்தபோது மணி இரவு ஏழரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

வேலாயுதம் குளித்து உடைகளை மாற்றிக்கொண்டு வெளியே புறப்பட்டார்.

"நீங்கள் விரும்பினுல் உங்கள் உணவைக் கீழே உள்ள ரெஸ்டாரெண்டிலேயே வைத்துக் கொள்ளலாம்" என்றான் அங்கிருந்த பணியாளர்களில் ஒருவன்.

அவருக்கும் அதுதான் நல்லதாகப்பட்டது. 'வெளியே போய் ஏதாவது வந்துவிட்டால்...'

அவர் உணவு விடுதிக்குள் நுழைந்தார். ஓட்டல் சீருடை அணிந்த ஓர் அழகான இளம் பணிப்பெண் - தமிழ்ப்பெண்- அவரருகில் வந்தாள்.

"உங்களுக்கு ஏதாவது..." அவளைப்போல் அவள் குரலும் கொஞ்சியது. அந்தப்பெண் ஆங்கிலத்தில் கேட்டாள்.

"எனக்கு..." கனைத்துக் குரலைச் சரி செய்து கொண்டு ஏதோ கேட்க வந்தவர் அந்தப் பெண்ணின் முகத்தைக்கண்டு துள்ளிக் குதித்தெழுந்தார்.

"நீ வேலாயி இல்லே..." -அவர் பரபரப்புடன் கேட்டார்.

அவள் அவர் மாஜி மாணவி வேலாயி போலவே தோன்றினள்.

அவரைப் போலவே அந்தப் பெண்ணும் அதிர்ந்துதான் போனுள்.

வேலாயுதம் சாரை வெளிறிய முகத்தோடு ஒருகணம் பார்த்து வைத்தாள். பிறகு முகத்தை மறு

புறம் திருப்பிக்கொண்டு 'களுக்' கென சிரித்தாள்.

"வேலாயியா! நோ, நோ! மை நேம் இஸ் வேணி! வி-இ-என்-இ-இ: வேணி!" அவள் மீண்டும் சிரித்தாள்.

"அப்படியா! மன்னிக்கவேண்டும். என் மாணவி வேலாயிபோலவே உங்க முகம் இருந்தது. அது தான். மன்னிச்சுக்குங்க..." இரண்டு மன்னிப்பைப் போட்டு, "எனக்கு..." என்று அவள் நீட்டிய உணவுப் பட்டியலில் இரண்டு ஐட்டங்களைக் குறித்தனுப்புவதற்குள் அவர் பட்டபாடு...

'சேச்சே! எவ்வளவு முட்டாள் தனம்! வேலாயின்னு நினைச்சி... சேச்சே, எவ்வளவு பெரிய தவறு செய்திட்டோம்? சீனியர் படித்த அந்த வேலாயியா இப்படிக் கீழ்த் தரமா ஓட்டல்லேவேலை செய்வாள்? என்ன முட்டாள்தனமான எண்ணம்எனக்கு'

அவருடைய தற்போதைய நிலைமை, தலைநகர் வழிப்பறிக்காரனிடம் அகப்பட்டுக்கொண்டதை விடப் படுமோசமாக இருந்தது.

"என்ன மனுசன் நான்...' ஒரு வழியாகச் சாப்பிட்டு முடித்தார்.

"ஆறு வெள்ளி நாற்பது காசு." ஒரு தட்டில் பில்லைக் கொணர்ந்து அதே அவளே தான் நீட்டினாள்.

பத்து வெள்ளி நோட்டைத் தட்டில் போட்டுவிட்டு வெளியே வந்தார்.

"மீதி...?" அவளே தான் மீண்டும் கொஞ்சினாள். "இல்லை, நீயே வைத்துக்கொள்".

"தாங்ஸ்!"
விட்டால் போதுமென்று சார் வெளியே பாய்ந்தார்.

அவர் தன் அறைக்குள் மணி பத்தாகியும் இன்னமும் தூங்காமலிருந்தார்.

"அவ ஆளுக யாராவது இருந்து என்னடா கிண்டலா பண்றேன்னு வச்சி சாத்தியிருந்தால்...? சேச்சே! இந்த வேலையை இதோட விட்டிடணும்."

அந்த ஓட்டலில் தான் பெரிதாக அவமானம் பட்டதுபோல் அவர் மனம் வேதனையால் வீங்கிப் புடைத்தது.

"எத்தனை பேரு என்னைப் பார்த்து சிரித்தானுங்களோ..."

அவர் அவமானத்தால் குன்றி நொறுங்கிப் போனார்.

மணி பதினொன்று அடித்தது. அவர் இன்னமும் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்.

புதிய இடம், ஓட்டல் அதிர்ச்சி, நகர்ப் பரபரப்பு-அவரால் தாங்க முடியவில்லை.

திடீரென்று அவ எழுந்து உட்கார்ந்தார். யாரோ அவர் அறைக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

"இந்தக் கதவுதானா...?"

"ஆமா, இதே கதவுதான்...!"

அவர் உடல் அந்தக் குளிரிலும் வியர்வையால் கசங்கியது.

"யாரது...?"

"நான்தான் சார் வேலாயி..."

"வேலாயியா...?!"

மற்றோர் அதிர்ச்சி!

துணிந்து கதவைத் திறந்தார்.

அந்த ஓட்டல் பணிப்பெண்-அவள்தான் அங்கே நின்றாள்.

"நீ...நீ..." அவர் குளறினார் மேலே பேச முடியாது.

"என்னை மன்னிச்சிக்கிங்க சார்! உங்க மாணவி வேலாயிதான் நான். இங்கே வேணின்னுதான் எல்லோருக்கும் தெரியும். வேலாயி என்கிற பேரு அசிங்கமா இருக்குன்னு நான் தான் சார் அப்படி மாத்திக்கிட்டேன்... எல்லாருக்கும் முன்னாடி நான் உங்க மாணவின்னு அதனாலே உங்களுக்கு அவமானம் ஏற்படும்னு தான் சார் அப்படி நடந்துகிட்டேன். மன்னிச்சிடுங்க சார்...நான் காலையிலே வந்து பார்க்கிறேன் சார்..."



வேலாயுதம் சார் பேயறைந்தவர் போல் மாதி மாணவியைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அவளோ ஓட்டல் அறைகளைக் கடந்து தூரத்தில் போய்க்கொண் டிருந்தாள்.

"அட கடவுளே! வேலாயி! நீயா? சீனியர் படித்தபெண்ணு இந்த ஓட்டலிலேயா..."

அவர் அறைக்கதவைப்படீரென சாத்திவிட்டு மீண்டும் படுக்கையில் வந்து விழுந்தார்.

சீனியர் தேர்ச்சிபெற்ற அந்தப் பெண்ணுக்கு ஆசிரியை வேலைக்காக அவரும்கூட எவ்வளவோ முயற்சி செய்தார்.

தேசிய மொழியில் 'கிரெடிட்' இல்லாததால் அது சாத்தியமில்லாது போய்விட்டது.

கடைசியில் ஒரு நாள் தனக்குக் கோலாலம்பூரில் 'கிளார்க்' வேலை கிடைத்திருப்பதாக அவள் பபணம் சொல்லிக்கொள்ள வந்தபோது வேலாயுதம் சார் பூரித்துப் போனார்.

"என்னிடம் படித்த மாணவி இன்னைக்கு கோலாலம்பூரிலே பெரிய கிளார்க்கா இருக்காளாக்கும்..." அவர் எத்தனை பேரிடம் சொல்லிப் பூரித்திருப்பார்.

ஆனால் அவளோ-

கோலாலம்பூரில் பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்துவிட்டு வேலை தேடிவரும் பெண்களின் அவல முடிவை அவரும் அறிந்தே இருந்தார். ஆனால் சீனியர் படித்த வேலாயி...?

அப்படின்னு கோலாலம்பூர்லே வேலை செய்றேன்னு சொல்லிகிட்டு வர்ற பெண்களெல்லாம் இப்படித் தான்...! அவர் கணத்தில் முடிவு கட்டிவிட்டார்.

அவருடைய நெஞ்சு வஜ்ரம் போல் இறுகிக்கொண்டது.

போனவாரம் வேலாயியின் தந்தை மாமுண்டி தண்டல் ஒரு சந்தர்ப்பத்தில் மீசையை முறுக்கிக் கொண்டு தன்னிடம் சவடால் பேசியதை நினைத்துக்கொண்டார்.

"எனக்கென்ன சார். எம்மவள் இன்னிக்கு கோலாலம்பூர்லே பெரிய கிளார்க்கா இருக்கா சார். மாதம் முடிஞ்சதும் சுளையா இருநூறு வெள்ளி அனுப்புறாளாக்கும் .."

'எவ்வளவு ஆணவமாய்ப் பேசினான் அந்தத்தண்டல்' ஆனால் அவளோ-

'இருக்கட்டும். இருநூறு வெள்ளி சொளையா அனுப்புற பவுசைச் சொல்லி மூஞ்சிலேயே துப்புறேன்'- கருவியபடி படுக்கையில் திரும்பிப் படுத்தார்.

என்றாலும் அவள்... வேலாயி சொன்ன அந்தக் கடைசி வார்த்-தை...

"... உங்க மாணவின்னு உங்களுக்கு அதனாலே அவமானம் ஏற்படும்னுதான் சார் அப்படி நடந்துகிட்டேன்..."

அவர் விழிகள் கலங்கின.

'என்னதான் கீழ்த்தரமா போயிட்டாலும் ஆசிரியருக்குத் தர வேண்டிய பணிவு போகலியே இன்னமும்...! வேலாயி...!'

அவர் விடியும் வரை பிறகு தூங்கவே இல்லை.

விடிந்தது.

குளித்து உடைகளை மாற்றிக் கொண்டு அறைக்கதவைத் திறந்தார்.

வேலாயி- அவள்தான் வாசலில் நின்றுகொண்டிருந்தாள்.

இப்போது அவள் வேலாயியாக தோட்டத்துக்கு வரும்போது எப்படிப் புடவையுடன் இருப்பாளோ அப்படி இருந்தாள்.

ஆனால் அதற்குள் மறைந்திருக்கும் அழகிய உடல்-அவர் அப்படித் தான் முடிவுகட்டிவிட்டார். அவர் முகத்தில் படிந்துவிட்ட அருவருப்பு- எப்பாடு பட்டும் அவரால் மாற்ற முடியவில்லை.

"என்ன வேலாயி, எங்கே இப்படி?"

"உங்களைத்தான் சார் பார்க்க வந்தேன்."

"ஏன் வேலைக்குப் போகலேயா"

"வேலை ராத்திரிதான் சார்..."

அவருக்கு அடிபட்ட நெஞ்சிலேயே மீண்டும் அடி-சுருக்கென்று வலித்தது.

"வா வேலாயி, உட்காரு!"

"பரவாயில்லே சார், இப்படியே நிற்கிறேன்" ஒருகணம் நிறுத்தியவள் மீண்டும் தொடர்ந்தாள்.

"சார் இப்படி ஒண்ணு நடக்கும்னு நான் கனவிலேகூட நினைக்கலே சார்."

"எது?" அவர் புரிந்தும் புரியாதவர்போல் கேட்டார்.

"நான் வேலை செய்கிற இந்த ஓட்டலுக்கே நீங்களும் வந்து தங்குவீங்கன்னு... நான் ராத்திரியெல்லாம் அழுதழுது தூங்கவே இல்லை சார்."

"உண்மைதான், நான் கூட தூங்கலே வேலாயி. நீ இப்படி ஒரு வேலை செய்வேன்னு..." அவர் தொடர முடியாது திணறினார்.

"... ஆனால் உங்க மேலே ஆணையா சொல்றேன் சார். இங்கே இந்த ஓட்டலிலே நான் வெறும் பணிப்பெண்ணுதான் வேலை செய்கிறேனே தவிர, நீங்க நினைக்கிற மாதிரி... அவள் குமுறியழுதாள்.

"அது... நான் அப்படியேதும்..." சாரோ மேலும் திணறினார்.

"இங்கே வேலை செய்கிற பெண்கள் பெரும்பாலும் எல்லோரும் சீனியர் படித்தவங்கதான் சார், எல்லாரும் என்னைப்போல வெளியூர்லேயிருந்து வந்தவங்கதான் சார். இந்த ஓட்டலிலோ கடைசி ஆறாவது மாடியிலேதான் கௌரவமான முறையிலே தங்கியிருக்கோம். இங்கே கெட்ட நடத்தைக்கெல்லாம் வழியில்லே சார். ஆனால் நடக்கணும்னு யாரும் தடுக்கப் போறதுமில்லே!"

ஒருகணம் நிறுத்தியவள் விழி நீரைத் துடைத்துக்கொண்டு மீண்டும் தொடர்ந்தாள்.

"நானாவது சாதாரண ஒரு தோட்டத்துத் தண்டலோட மகள். ஆனால் இங்கே டாக்டர் மகள்லேயிருந்து லாயர் மகள்வரை கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்களெல்லாம் வேலை செய்யிறாங்கசார். எல்லாரும் சுத்தமான வாழ்க்கை வாழ்றாங்க!

"எனக்குக்கூட ஓட்டல்லே வேலை செய்கிறதாய்ச் சொல்லத் தான் சார் ஆசை. இங்கே வேலை செய்கிற சீனப் பெண்களெல்லாம் அப்படித்தான் சொல்றாங்க. அதுக்காக அவுங்க வெட்கப்படுறதில்லே! அவுங்க இனமும் அதுக்காகத் தூற்றுகிறதில்லே!

"ஆனால் நம்ம ஜனங்கள் பிரமாதமாய்ப் பேசுறாங்களே தவிர அந்த அளவுக்குப் பக்குவப்படலே சார்! அதனால்தான் சார் கிளார்க் வேலை செய்கிறதாய்ச் சொன்னேன்.

"நீங்களும் தயவுசெய்து இந்த ஓட்டல் கதையைச் சொல்லாதிங்க சார்! அதோட எங்கப்பா தூக்குப் போட்டுக்கிட்டுச் செத்துப்போவாரு! என்னையும் ஓட்டல்லே விபச்சாரம் செய்றாள்னு சொல்லி இந்தச் சமுதாயம் கொன்னுப் போட்டிடும் சார்... நமக்குத் தூற்றத்தானே சார் தெரியும்..."

"வேலாயி, என்னை மன்னிச்சிடும்மா! பாவி நான் கூட உன்னைத் தவறா" வேலாயுதம் சார் தன்மனதில் அடைந்துபோன அழுக்கை ஏதேதோ சொல்லிக் கரைத்துக் கொண்டிருந்தார், அடித்தொண்டையில் அரற்றியபடி!


ஆனால் வேலாயியோ எதையும் காதில் வாங்காது அறைகளைக் கடந்து தூரத்தில் போய்க்கொண்டிருந்தாள்.



"வாசலில் ஏன் ஒரே கிழவிங்க கூட்டமா இருக்கு?"

"டைப்பிஸ்ட் வேணும்னு விளம்பரம் கொடுத்திருந்தோமே, அதிலே 18 வயதுங்கிறது 81 வயதுன்னு தப்பா அச்சாயிடுச்சு சார்!"

—ஜே. எஸ். ஏ. சிம்மாதிரி, கேமரன்மலை.



கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பானு
11
சேரன் செங்குட்டுவன் என்ற சேர நாட்டு மன்னன் மலைவளம் காண வந்தபோது குறவர்களைச் சந்திக்கிறான்
அரசே! தேவர்கள் போற்ற மேலுலகம் சென்றவள் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவள்?
சாத்தனர் கண்ணகியின் வரலாற்றைச் சுருக்கமாக சேரனிடம் கூறுகிறார்
அதைக்கேட்ட மன்னன் தன் மனைவி வேண்மாளிடம்....
வேண்மாள், கண்ணகி- கோப்பெருந்தேவி இருவரில் சிறப்பித்துச் சொல்லத் தக்கவர் யார்?
கோப்பெருந்தேவி பத்தினி. கண்ணகியோ பத்தினிகளுக்கெல்லாம் கடவுள்!
சரியாகச் சொன்னாய். இமய மலையிலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குச் சிலை வடிப்போம்!
சேரன் தன் வீரர்களிடம்.....
வீரர்களே! கண்ணகிக்குச் சிலை வடிக்க கல் கொண்டு வரத்தான் இமயமலைக்குச் செல்ல வேண்டுமென்று சற்று முன்பு வரை எண்ணியிருந்தேன்....
....ஆனால் இமயத்திலிருந்து இங்கு வந்திருக்கும் தவமுனிவர்கள், வட மன்னர்களான கனகனும் விசயனும் நமது வீரத்தைப் பழித்ததாகக் கூறக் கேட்ட பின்பு....
..அவர்களை வென்று அவர்கள் தலை மீதே கல் ஏற்றி வர திட்டமிட்டு விட்டேன்
வீரர்களே! புறப்படுங்கள்
கண்ணகிக்குச் சிலை எடுக்கக் கல் எடுக்கப் போகும் அதே வேளையில் நம்மைப் பழித்த வட நில மன்னர்களையும் அடக்குவோம்!
தொடரும்..

படிப்படியாக...

செய்யும் தொழிலில் ஆர்வமும், பிடிப்பும், விடாமுயற்சியும் இருந்தால் ஒருவர் எந்த அளவுக்கு உயரமுடியும் என்பதற்குச் சரியான எடுத்துக்காட்டாக ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் மிக எளிதாகத் திரு. எஸ்.எஸ். நரசிம்மனைக் காட்டிவிடலாம்.

1946-ஆம் ஆண்டு. சென்னையில் கல்வியை முடித்துக்கொண்ட இளைஞர் நரசிம்மன், 'பிருதிவி இன்சூரன்ஸ்' என்னும் நிறுவனத்தில் சேர்ந்தார். பெரிய அதிகாரியாக அல்ல; பயிற்சி பெறுபவராக.

அந்த இளைஞர் இன்று இளைஞராக இல்லை; 51 வயது நிறைந்தவராக இருக்கிறார். சென்னையில் அவர் இன்று இல்லை; கோலாலம்பூரில் இருக்கிறார். பிருதிவி இன்சூரன்ஸ் நிறுவனத்தில் இல்லை; ஐந்து இந்திய இன்சூரன்ஸ் நிறுவனங்களின் இணைப்பில் அண்மையில் உருவான "யுனைடெட் ஓரியண்டல் அஸ்யூரன்ஸ்" நிறுவனத்தில் பணிபுரிகிறார். சாதாரண அதிகாரியாகவும் அவர் இன்று இல்லை; இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குநராக இருக்கிறார்.



இன்சூரன்ஸ் தொழிலில் கரை கண்டவர் நரசிம்மன். தம் வாழ்நாளில் 31 ஆண்டுகளை இந்தத் தொழிலோடு இரண்டறக் கலந்துவிட்டவர்.

இவரின் தொழில்துறை முன்னேற்றம் மிகச் சீரானது; முறையானது; படிப்படியாக அமைந்தது.

பிருதிவி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் கல்கத்தா கிளையின் நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பாளராக 1948-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

1951-ஆம் ஆண்டு 'பிருதிவி'யை விட்டு விலகி "வட பிராந்திய அஸ்யூரன்ஸ்" என்னும் பிரிட்டிஷ் நிறுவனத்தின் கல்கத்தா கிளையில் சேர்ந்தார். 18 மாதகாலம் பணிபுரிந்த பின்னர், லண்டனில் உள்ள தலைமையகத்துக்கு ஓராண்டு காலப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். பயிற்சி முடிந்ததும் கல்கத்தா கிளையில் ஒரு பிரிவுக்கு நிர்வாகியானார்.

1957-ஆம் ஆண்டு, கல்கத்தா கிளையின் துணை நிர்வாகியாக நியமனம் பெற்றார். உயர்பயிற்சி பெறுவதற்காக மீண்டும் 1960-ஆம் ஆண்டு லண்டன் சென்றார். வட பிராந்திய அஸ்யூரன்ஸ் நிறுவனம் 1962-ஆம் ஆண்டில் இன்னொரு நிறுவனத்துடன் இணைந்தது. புதிய நிறுவனத்தின் கல்கத்தா கிளைக்கு இவரே நிர்வாகியானார்.

1969-ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தை விட்டு விலகி, நியூசிலாந்து இன்சூரன்ஸ் நிறுவனமான "தென் பிரிட்டிஷ் இன்சூரன்ஸ்" நிறுவனத்தின் கல்கத்தா கிளையில் நிர்வாகியாகப் பொறுப்பேற்றார்.

இன்சூரன்ஸ் நிறுவனங்களை இந்திய அரசு நாட்டுடைமையாக்கிய போது, இவர் சார்ந்திருந்த நிறுவனமும் பிற நிறுவனங்களோடு இணைக்கப்பட்டது. உருவாகிய புதிய நிறுவனத்தில் நிர்வாகியாகவும், 1975-ஆம் ஆண்டில் துணைத்தலைமை நிர்வாகியாகவும் கல்கத்தாவில் பணிபுரிந்தார்.

1976ஆம் ஆண்டு கோலாலம்பூருக்கு அனுப்பப்பட்டார். இந்திய இன்சூரன்ஸ் நிறுவனங்கள் மலேசியாவோடு கொண்டிருந்த தொழில் ஈடுபாடு முழுவதும் இவரின் மேற்பார்வையின்கீழ் வந்தது. "யுனைடெட் ஓரியண்டல் அஸ்யூரன்ஸ்" நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குநராக இப்போது பணிபுரிகிறார்.

அடிமட்டத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து, மிகவும் உயரிய பதவி வகிக்கும் நரசிம்மன், 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும், அசைவிலா ஊக்கம் உடையான் உழை" என்னும் குறட்பாவுக்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். முன்னேற்றத்தையும், வெற்றியையும் நோக்கி இவர் சென்றார் என்பதைவிட "எங்கே இந்த நரசிம்மன்?" என்று வழிகேட்டுத் தெரிந்துகொண்டு வெற்றியும் முன்னேற்றமும் இவரை நாடி வந்தன என்பதே பொருந்தும். அந்த அளவுக்கு, அசைவிலாத ஊக்கம் உடையவர் இவர்.

பொதுமக்களுக்குக் குறையில்லாத நிறைவான சேவையை வழங்குவதன்வழி, யுனைடெட் ஓரியண்டல் அஸ்யூரன்ஸ் நிறுவனத்தை மிகப்பெரிய நிறுவனமாக வளர்க்க இவர் உறுதி பூண்டிருக்கிறார்.

தற்போது ஏறத்தாழ 300 பேர் ஓரியண்டல் நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். இவர்களுள் எழுவர் மட்டும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்; ஏனையோர் அனைவரும் மலேசியர்களே. போதிய பயிற்சிபெற்ற ஊழியர்கள் பற்றாக்குறையாக இருப்பதனால் நிறுவனத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் தற்போது சற்று மெதுவாகவே நடைபெறுகின்றன என்றுகூறும் நரசிம்மன், தகுதியுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுப்பதிலும் மேல்பயிற்சிக்காக அவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதிலும் ஆர்வம் கொண்டிருக்கிறார்.

ஓரியண்டல் நிறுவனத்தின் வேலைவாய்ப்பு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளிவரும்போது, குறைந்த அளவு எல். சி. இ. கல்வித் தகுதி உடையவர்களும் விண்ணப்பிக்கலாம். இத்தகைய விளம்பரங்களைத் தமிழ்ப்பத்திரிகைகளிலும் வெளியிடவேண்டும் என்னும் ஆலோசனையை மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட நரசிம்மன் ஆவன செய்வதாக உறுதியளித்தார். அனைத்துலக நிறுவனமாக வளரவிருக்கும் ஓரியண்டல் நிறுவனத்தில் சேர்ந்து நம் இளைஞர்களும் வளரலாம்; தடையேதும் இல்லை.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற நரசிம்மன் இன்சூரன்ஸ் தொழிலுக்குவேண்டிய எப். சி. ஐ. ஐ. என்னும் சான்றிதழும் பெற்றிருக்கிறார்.

வாழ்நாள் முழுதும் இன்சூரன்ஸ் நடவடிக்கைகளிலேயே மூழ்கியிருக்கும் இப்படிப்பட்ட ஒருவருக்கு வேறு துறைகளில் ஆர்வம் இருக்கமுடியுமா? இளைஞராக இருந்த காலத்திலிருந்தே வேதாந்தக் கல்வியிலும், வேதாந்த ஆராய்ச்சிகளிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் நரசிம்மன். கல்கத்தாவில் இருந்தபோது சுவாமி ரெங்கநாதர் என்னும் மகான் வேதாந்தத்துறையில் இவருக்கு ஆசானாக இருந்தார். பின்னர் சுவாமி சின்மயானந்தா வழிகாட்டினார். வேதாந்தச் சொற்பொழிவு எங்கேனும் நடைபெறுகிறது என்று அறிந்தால் தவறாமல்சென்று உள்ளத்தைப் பண்படுத்திக் கொள்ளும் உறுதியான பழக்கம் அன்றிலிருந்து இன்றுவரை இவரிடம்இருந்து வருகிறது. சொற்பொழிவுகளைக் கேட்பதோடு வேதாந்த விசாரணை செய்வதிலும் வல்லவராக இருக்கிறார்.

வேதாந்தத்துக்கு அடுத்தபடி இவரைக் கவர்வது சங்கீதம். நம்முடைய மரபுவழியிலான, முறையான இசையில் பெரிதும் ஈடுபாடு உள்ளவர் இவர்.

இன்சூரன்ஸ் துறையில் பெரும்பாலான பதவிகளை வகித்து, இப்போது உயர்ந்த பதவியில் இருக்கும் நரசிம்மன், இன்னும் மிக உயர்ந்த பதவியை அடைய எண்ணுகிறாரோ இல்லையோ, அந்தப் பதவிகள் தாமே ஓடிவந்து இவரின் வாசற்கதவைத் தட்டிக்கொண்டு நிற்கத்தான் போகின்றன; இதுதிண்ணம்.

–கடைச்சித்தன்

முட்டுக்கட்டைகள்

இந்நாட்டில் தமிழ்க்கல்வியின் வளர்ச்சியினை இந்நாட்டிற்குக் குடியேறி வந்த இந்தியர்களின் நிலையோடும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ரப்பர்த் தோட்டங்கள் அடைந்த வளர்ச்சியோடும் தொடர்பு படுத்திப் பார்க்கவேண்டும். விரைவாகப் பெருகிய தோட்டத் தொழிலுக்குத் தேவையான மலிவான தொழிலாளர்களைப் பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவந்தனர். அவ்வாறு கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் ஆயாக்கொட்டகைகள், பள்ளிக்கூடங்கள், கோவில்கள், கள்ளுக்கடைகள் போன்ற சில தேவைகளைத் தோட்ட உரிமையாளர்கள் அமைத்துக்கொடுத்தனர். தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்க, இங்கேயே தங்க வைக்கத் தோட்ட முதலாளிகள் இவ்வாறான வசதிகளைச் செய்து கொடுத்தனர். இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்தே தொழிலாளர்கள் இந்நாட்டிற்குக் குடியேறத் தொடங்கிவிட்டாலும் 1923ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தொழிலாளர் சட்டத்தின் வழிதான் தொழிலாளரின் குழந்தைகளுக்குக் கல்வி வசதிகளைத் தோட்ட முதலாளிகள் செய்து கொடுக்கவேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் அளிக்கப்பட்ட கல்வி மிகவும் எளிமையாகவும் ஒருசில ஆண்டுகளே நீடிக்கக் கூடியதாகவும் இருந்தது. நல்ல வேலைகளைப் பெறத்தக்க- சமூகத்தில் மேம்பட்ட நிலையைப் பெறத்தகுந்த- கல்வியை அப்பள்ளிகள் அளிக்கவில்லை. தோட்டத் தொழிலுக்குத் தேவையான மலிவான தொழிலாளர்களைத் தொடர்ந்து உற்பத்தி செய்து வழங்கும் ஆலைகளாகவே அவை அமைந்திருந்தன. அன்றைய தமிழ்ப்பள்ளிகள் பிள்ளைகளைக் காலைமுதல் பிற்பகல்வரை பாதுகாத்து வைத்திருந்து பெற்றோரிடம் ஒப்படைக்கும் பணியைத்தான் செய்துவந்தன. இன்னும் பல தமிழ்ப்பள்ளிகள் அதே பணியைத்தான் செய்து வருகின்றன. காலமாறுதல் பல துறைகளில் பல மாறுதல்களை ஏற்படுத்தி உள்ளதென்றாலும் சில தமிழ்ப் பள்ளிகளைப் பொறுத்தவரை கால மாறுதல் எவ்விதமான மாற்றங்களையும் செய்யவில்லையென்பதை இங்குக் கூறியே ஆகவேண்டியிருக்கிறது.

1956ஆம் ஆண்டில் வெளியான ரசாக் அறிக்கை பல்வேறாக அமைந்திருந்த கல்வி முறைகளை ஒற்றுமையாக்கியதன் வழி எல்லா இனக் குழந்தைகளும் தேசியக் கல்வி முறையுடன் இணைய வாய்ப்பேற்படுத்திக்கொடுத்தது. இந்த முறையானது தத்தம் தாய்மொழிகளில் கல்வி கற்கும்குழந்தைகளைத்தேசிய முறையுடனும் ஒன்று சேர வாய்ப்பளிப்பதன் வழி கல்வியிலும் சமுதாயத்தில் முன்னேறவும் வாய்ப்பினை வழங்கியது. இன்று தமிழ்ப்பள்ளியில் கல்வி கற்கும் ஒரு மாணவன் பல்கலைக் கழகம் சென்று கல்வி பயில ஆசைப்படலாம். அதற்கான வாய்ப்புக்களும் உண்டு. ஆனால் எத்தனை பேர் இந்த முறையில் பல்கலைக்கழகம் வரை சென்று உயர்கல்வி பெறுகின்றனர் என்பது வேறொரு கேள்வி.

இந்நாட்டில் தமிழ்த் தொடக்க நிலைப் பள்ளிகளே இந்நாட்டுத் தமிழ்க் கல்விக்கான அடித்தளம் என்று கூறவேண்டும். பிற மொழிப் பள்ளிகளில் கல்வி கற்கும் தமிழ்க் குழந்தைகள் தமிழைக் கற்க இந்நாட்டுக் கல்விக் கொள்கை வழியமைத்துக் கொடுத்திருக்கின்றது. விரும்பினால் தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் எல். சி. இ., எம். சி. இ, எச். எஸ். சி. தேர்வுகளில் தேர்வுப் பாடங்களாக எடுத்துத் தேறவும் வாய்ப்புண்டு.

பல்கலைக்கழகத்தில், தமிழ்த் துறை தனியாக இயங்கி வருகின்றது. மாணவர்கள் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு கற்று பட்டதாரியாக வெளிவரலாம். முன்பே கூறியபடி இந்நாட்டில் தமிழ்க்கல்விக்குத் தமிழ்ப் பள்ளிகளே அடித்தளமாக இருக்கின்றபடியால் இன்றைய தமிழ்ப் பள்ளிகளின் தரம், அவற்றின் பண்புக் கூறுகள் ஆகியவற்றை நோக்குவது ஏற்ற செயலாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

2. தமிழ்ப்பள்ளிகளின் பண்புக் கூறுகள்

இந்நாட்டிலுள்ள மொத்தத் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 612, படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 80,000. இந்தத் தமிழ்ப் பள்ளிகளில் பெரும்பாலானவை தோட்டங்களில்தான் அமைந்துள்ளன.

தமிழ்ப் பள்ளிகளைப் பற்றி மூராட் அறிக்கையில் காணப்படுவனவற்றை இங்குஉங்களின்கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகின்றேன். தமிழ்ப்பள்ளிகளே அளவில் மிகச் சிறியனவாகவும் ஏழ்மை நிலையிலும் இருக்கின்றன என்று மூராட் அறிக்கைதிட்டவட்டமாகக்கூறுகின்றது. மொத்தப் பள்ளிகளில் சுமார் 88 விழுக்காடு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 200க்கும் குறைவாகவே இருப்பதாக அந்த அறிக்கை கூறியுள்ளது. ஆங்கிலப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் இந்த விகிதம் 21 விழுக்காடு தான். மேலும் சுமார் 70 விழுக்காடு பள்ளிகளில் ஓர் ஆசிரியர் பல வகுப்புக்களை கவனித்துக்கொள்ளும் நிலை உள்ளது.

பள்ளியை விட்டு இடையில் விலகுவோரில் அதிக எண்ணிக்கையினர் தமிழ் இளைஞர்களாகத்தான் இருக்கின்றனர். அவர்களிடம் முன்னேற வேண்டுமென்ற உந்துதல் குறைவாக இருக்கின்றது அவர்களின் சமுதாயப் பின்னணியும் மிகவும் ஏழ்மையானதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக தமிழ்ப் பள்ளிகளில் கற்கும் மாணவர்களில் சுமார் 51 விழுக்காடு மாணவர்களின் குடும்ப வருவாய் மாதமொன்றிற்கு சுமார் 100 வெள்ளியாகத்தான் இருக்கின்றது.

நிதி வளத்தைப் பார்த்தாலும் இதர மொழிப் பள்ளிகளைக் காட்டிலும் தமிழ்மொழிப் பள்ளிகள் வளம் குன்றியே காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஆசிரியர்களுக்கான ஊதியம் தவிர்த்த இதர செலவுகளை ஒரு மாணவருக்கு இவ்வளவு எனப் பார்க்கும்போது இதர மொழித் தொடக்கப் பள்ளிகளைவிட மிகக்குறைவாக இருக்கக் காண முடிகின்றது. (தமிழ்ப் பள்ளிகளில் ஆகும் செலவின் விகிதம் 4.2 விழுக்காடு. ஆங்கிலப் பள்ளிகளின் விகிதமோ 16.1 விழுக்காடு).



டாக்டர் த. மாரிமுத்து

தமிழ்ப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் இட மாற்றலுக்கு மனுச்செய்து மாறியும் சென்றுள்ளனர். இவ்வாறு அதிக எண்ணிக்கையில் இட மாற்றலுக்கு உட்படும் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களிடையே அதிருப்தியும் மன நிறைவின்மையும் காணப்படுகின்றன என்று சொன்னால் மிகையாகாது. மேலும் பெற்றோர்களைப் பற்றித் தலைமையாசிரியர்கள் கூறியுள்ள கருத்தும் இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கது. பெற்றோர்களில் 50 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் தமது குழந்தைகளின் கல்வியில் அக்கறைகாட்டுவதே கிடையாது என்று தலைமையாசிரியர்கள் கூறியுள்ளனர். பள்ளிக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் பெரும்பாலான குழந்தைகள் சிரமப்படுகின்றனர் என்றும் தலைமை ஆசிரியர்கள் கருத்துரைத்துள்ளனர்.

இத்தகைய புள்ளி விவரங்கள், ஒன்றை மிகத் தெளிவாக உணர்த்துகின்றன. அதாவது கடந்த பலஆண்டுகளாகவே தமிழ்ப் பள்ளிகளின் தரம் உயரவில்லையென்பதே. தமிழ்ப் பள்ளிகள் தொடர்ந்து சிறியனவாகவும், ஏழ்மையான வையாகவும் விளங்குகின்றன. மலேசியச் சமுதாயத்தின் மிகவும் ஏழ்மையான குழந்தைகளே இப்பள்ளிகளில் படித்து வருகின்றனர். தமிழ்ப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் சமுதாயத்தில் கீழ் நிலைகளிலுள்ள வருவாய் குறைந்த வேலைகளைச் செய்வதற்காகவே பிறந்துள்ளனர் என்று தோன்றத்தக்க அளவில் இன்றைய சூழ்நிலை அமைந்துள்ளது.

3. ஆசிரியர்கள்

இவ்வாறு வசதிகள் குறைந்த பள்ளிச் சூழலிலும் பல ஆசிரியர்கள் பாராட்டத்தக்க அளவில் பயனுள்ள பணிகளை ஆற்றி வருகின்றனர் என்பதை நான் இங்கு மன நிறைவுடன் கூற விரும்புகின்றேன். கடப்பாட்டு உணர்வுடன் சமுதாயத்திற்குத் தாங்கள் ஆற்றவேண்டிய பொறுப்பையும் உணர்ந்து அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். பல்வேறு குறைபாடுகளுக்கிடையிலும் தங்களிடம் கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவித்து வாழ்க்கையில் உயர்வதற்கான வகையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை நாம் அவசியம் போற்றியே ஆகவேண்டும். வெகுகுறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே பல்கலைக்கழக வாசலைத் தொடுகின்றனர். இங்கு நான் ஒரு கேள்வியை மட்டும் ஆசிரியர்களிடம் கேட்க விரும்புகிறேன். தற்போதுள்ள நிலையைவிட அவர்களால் சிறப்பாகச் செய்ய முடியுமா? என்பதே என் கேள்வி.

முடியுமென்றே நான் நினைக்கிறேன். நானும் ஓர் ஆசிரியன் என்ற நிலையிலிருந்தே தொடர்ந்துவரும் கருத்துக்களைச் சொல்கிறேன். மாணவர்கள் தேர்வில் அடையும் தோல்விக்குப் பெரும்பாலான வேளைகளில் நம்மைத் தவிர்த்து மற்ற அனைவரையும் நாம் குறைகூறி வருகிறோம். பெற்றோரைக் குறைகூறுகிறோம், மாணவர்களைக் குறை கூறுகிறோம், நாம் வாழும் சமுதாய அமைப்பைக் குறைகூறுகிறோம். இதை விடுத்து நம்மை நாமே சற்று அழுத்தமாக உற்று நோக்கி நம்முடைய மனப்போக்கு எவ்வாறு அமைந்துள்ளது, நாம் கைக்கொண்டு வரும் போதனை முறை எவ்வாறு அமைந்துள்ளது, நம்முடைய பாதுகாப்பிலுள்ள குழந்தைகளுக்கு நம்மால் இயன்ற முறையில் சிறப்பாகச் சேவை செய்தோமா என்பதை அலசிப் பார்க்க நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

ஆசிரியர்கள் மேலும் அழுத்தமான முறையில் தங்கள் பணியில் ஈடுபடவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வசதி குறைந்த சமுதாயத்தில் இருந்து வரும் குழந்தைகளின் எதிர்காலம் ஆசிரியர்களின் கைகளில் இருப்பதால் அவர்கள் அதிக ஈடுபாட்டுணர்வுடன் பணியாற்றவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழாசிரியர்களின் அதிகரித்த அரசியல் ஈடுபாடானது அவர்கள் பணியாற்றும் பள்ளிகளுக்கும், பள்ளிகளில் அவர்கள் ஆற்ற வேண்டிய சேவைக்கும் இடையூறாக அமைந்து, அதனால் கல்வியின் தரம் பாதிப்படைவதாக நான் அறிகிறேன். சமுதாயத்தின் கல்வியறிவு பெற்ற அங்கத்தினர்கள் என்ற அளவில் ஆசிரியர்கள் தாங்கள் சார்ந்துள்ள சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய சமுதாயக் கடன்கள் பல உண்டு. இந்நாட்டின் குடிமக்கள் என்ற அளவில் அரசியலில் ஈடுபடவும் அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனாலும் அவர்களின் முழு முதற் கடமை அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுளள குழந்தைகளுக்குக் கல்வி புகட்டவேண்டும் என்பதே. அவர்களின் இந்த அதிகாரப்பூர்வ பணிக்கு அரசியல் ஈடுபாடு இடைஞ்சலாக இருக்கின்றதென்று பட்டால் அரசியல் பங்கு கொள்வதை முழுக்க விட்டுவிட வேண்டும். சில வேளைகளில் ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதால் அவர்கள் பணியாற்றும் பள்ளிகளுக்கு நேரடியாக சில பயன்கள் ஏற்படக்கூடும். அவர்கள் வாழும் சமுதாயமும் அவர்களால் பயன் பெற முடியும். ஆனாலும் சமுதாயத்தின் கல்வியறிவு பெற்ற குழுவினராக இருக்கும் ஆசிரியர்கள் வழங்கக் கூடிய தலைமைத்துவம் தமிழ்ப் பள்ளிகளின் நிலையை உயர்த்த மிக மிக அவசரத் தேவையாக இருக்கின்றதென்று நான் நம்புகிறேன். தமிழ்ப்பள்ளிகள் இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகள் பலப் பல. ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தைத் தமிழ்ப்பள்ளிகளின் நிலையை உயர்த்தவும், தமிழ் கற்கும் குழந்தைகளின் வாழ்வை உயர்த்தவும் பயன்படுத்தினால் ஏற்புடைய நன்மைகள் விளையும் என்பது என் நம்பிக்கை.

இந்நாட்டிலுள்ள இடைநிலை-உயர்நிலைக் கல்விக்கூடங்களுக்குத் தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தமிழ்ப்பள்ளிகள் தயார் செய்து அனுப்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. அவ்வாறு செய்யத் தவறினால் உயர்கல்விக் கூடங்கள் நமக்கெனக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடங்கள் ஒதுக்கும் நிலை வந்தாலும் அந்தக் கோட்டாவை நம்மால் நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். தறபோது உயர்நிலைக் கல்விக்கூடங்களுக்குச் செல்லத் தகுந்த மாணவர்கள் பற்றாக்குறை மிகவும் கடுமையான நிலையை எட்டியுள்ளது. ஆகையால் தமிழ்ப்பள்ளிகள் தமிழ் மாணவர்களைத் தயார்செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

4. பள்ளியில் சேர்த்தல்

என் உரையின் தொடக்கத்திலே-யே தமிழ்ப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 80 ஆயிரம் என்று கூறினேன். எல்லா வகையான தொடக்கப்பள்ளிகளிலும் படிக்கும் இந்திய வம்சாவளிக் குழந்தைகளில் இது 53 விழுக்காடுதான் பிற இனக் குழந்தைகளோடு ஒப்பிட்டால் இந்த விகிதம் ஆகக் குறைவானதாக இருக்கின்றது. சீனத் தொடக்கப்பள்ளிகளில் சேரும் பிள்ளைகளின் விகிதம் 86 விழுக்காடாக இருக்கின்றது. எஞ்சிய சீனக் குழந்தைகள் ஆங்கில மொழிப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். மலாய்க்காரக் குழந்தைகளை எடுத்துக்கொண்டால் 73 விழுக்காடு குழந்தைகள் மலாய்த் தொடக்கப் பள்ளிக்கும் எஞ்சியோர் ஆங்கில மொழித் தொடக்கப்பள்ளிக்கும் செல்கின்றனர்.

இனவாரியாகத் தொடக்கப் பள்ளிகளில் பிள்ளைகள் சேர்க்கப்படும் இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு சில முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும். இந்தியப் பெற்றோர்களின் சுமார் 47 விழுக்காட்டினர் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்புவது இல்லை. இப்பெற்றோர்களில் சுமார் 40 விழுக்காட்டினர் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். 6 விழுக்காட்டினர் மலாய்ப் பள்ளிகளுக்கும், ஒரு விழுக்காட்டினர் சீனப் பள்ளிகளுக்கும் தங்கள் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

தர்மம் செய்யுங்கள்

“ஒவ்வொரு முஸ்லிம் மீதும் தர்மம் செய்வது கடமையாகும்” என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"தர்மம் செய்ய அவசிடம் ஒன்றும் இல்லையானால் என் செய்வது?" என்று வினவப்பட்டதற்கு "தன்கையைக்கொண்டு பொருளீட்டித் தானும் நலமாய் வாழ்ந்து மற்றவருக்கும் தர்மம் செய்யவும்" என்று பதிலிறுத்தார்கள் அவர்கள்.

"வேலை செய்யத்தெம்பு இல்லையாயின் யாது செய்வது?" என்று வினவப்பட்டதற்கு "அநியாயத்திற்கு ஆளானவரின் தேவைக்கு உதவுவது" என்றனர் அவர்கள்.

"இதுவும் செய்ய இயலாவிட்டால் என்செய்வது?" என்று வினவபபட்டதற்கு "நற்செயல்களை ஆற்ற ஏவவேண்டும்" என்று விடையிறுத்தார்கள் அவர்கள்.

"இதுவும் செய்ய இயலாவிட்டால் என்செய்வது?" என்று வினவப்பட்டதற்கு "தீமை புரியாதிருப்பதாகும். ஏனெனில் இதுவும் ஒரு தர்மமேயாகும்" என்று மறுமொழி பகர்ந்தார்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்கள்.

–அல்ஹதீஸ்

இந்த நிலைமையானது தமிழ்ப் பள்ளிகளைப் பொறுத்தவரை பெற்றோர்கள் கொண்டிருக்கும் மனப்போக்கினை உணர்த்துகின்றது. ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தோரும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக இருப்பின் தங்கள் குழந்தைகளைத் தமிழ்ப்பள்ளிகளை விடுத்து இதர மொழிப்பள்ளிகளுக்கே அனுப்பும் நிலையை இன்று நாம் காணுகின்றோம். இதற்கான காரணம் தமிழ்ப்பள்ளிகளின் தரம் குறைந்த நிலையே.

நகர்ப்புறங்களில் வாழும் பெரும்பாலான தமிழர்களும், வசதி படைத்த தமிழர்களும், தமிழரல்லாதவரும் எப்போதுமே ஆங்கிலக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளனர். தங்கள் குழந்தைகளுக்கு ஆங்கிலக்கல்வி நல்ல வேலை வாய்ப்புக்களை வழங்குமென்று நம்பினர். எனவே சமூகத்தில் தாழ்ந்த நிலையிலிருக்கும் பகுதியினரின் தேவைகளைப் பூர்த்திசெய்யவே தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. இந்த நிலைமை தமிழ்ப்பள்ளிகளின் தரத்தை மேலும் குறைக்கக் காரணமாக இருந்து வந்தது; இருந்து வருகிறது.

5. பாடத்திட்டமும் பாட நூல்களும்

இதுவரை தமிழ் ஆரம்பப் பள்ளிகளுக்கென முறையான பாடத்திட்டம் இருந்ததில்லை. ஆசிரியர்கள் தற்போதுள்ள தமிழ் வாசக நூல்களின் அடிப்படையிலேயே தமிழ்மொழியைக் கற்பித்து வந்தனர். முறையான பாட நூல்கள் இல்லாமை ஆசிரியர்களைச் சிரத்தில் ஆழ்த்தி விட்டது. உள்ள வாசிப்பு நூல்கள், தேவையான நோக்கங்களை நிறைவு செய்யத் தக்கனவாக அமைந்திருக்கவில்லை. பாடநூல்களைப் பற்றிய இக்குறைகளைக் களைய, கல்வியமைச்சு இப்போது கவனம் செலுத்தி வருகின்றது. கல்வியமைச்சினால் அமைக்கப்பட்டுள்ள குழுவொன்று முதல் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் பாரம் வரையிலுள்ள தமிழ்ப்பாடத்திட்டம் பற்றி விரிவாக ஆராய்ந்து வருகின்றது. குழுவின் முயற்சியினால் தமிழ்ப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் கல்வியின் தரம் மேம்படும் என்பதில் ஐயமில்லை.

6. பள்ளிப் பிள்ளைகளின் சொந்தமொழி.

இந்நாட்டில் தமிழ்மொழிக் கல்வியைப் பொறுத்தமட்டில் மேலும் ஒரு பிரச்சினை தமிழ் மொழிக் கல்விக்குத் தடைக்கல்லாக இருக்கின்றது. 15 பெற்றோர்கள் ஒன்றுசேர்ந்து பள்ளித் தலைமை ஆசிரியரிடம் விண்ணப்பித்தால் பிள்ளைகளின் சொந்தமொழி, தமிழல்லாத பிற மொழித் தொடக்க, இடைநிலைப் பள்ளிகளில் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்படுமென இந்நாட்டின் கல்விக் கொள்கை கூறுகின்றது. எனினும் நடைமுறையில் உள்ளவற்றைப் பார்க்கப்போனால் இந்த வகுப்புக்கள் காலம் தாழ்த்தியே தொடங்கப்படுகின்றன. ஆண்டு முடிவதற்கு முன்பே இந்த வகுப்புக்கள் முடித்துவைக்கப்பட்டு விடுகின்றன. வகுப்புக்கள் பெரும்பாலும் வார ஓய்வு நாட்களில் நடத்தப்படுவதால் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

இவ்வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் தகுதி நிறைவளிப்பதாக இல்லை. எனவே இவர்களிடம் படிக்கும் மாணவர்கள் எல். சி. இ. தேர்வில் பெறும் மதிப்பெண்கள் தரம் குறைந்து காணப்படுவது வியப்பைத் தரவில்லை. இவ்வகுப்புக்களில் கலந்து பயிலும் மாணவர்களின் மனப்போக்கும் அவர்கள் பெறும் தரங்குறைந்த மதிப்பெண்களுக்குக் காரணம் என்று நான் அறிய வருகிறேன். மாணவர்கள் தமிழ்க்கல்வி பற்றி அதிக அக்கறை காட்டுவதில்லை. தமிழ்தானே, எளிதாகத் தேர்வில் எழுதிவிடலாம் என்ற மெத்தனமான போக்கைக் கொண்டிருக்கின்றனர்.

7. தமிழ்ப் பள்ளிகளின் சாதனைகள்

ஐந்தாம் வகுப்புத் தேர்வு முடிவுகளை அலசி ஆராய்ந்து பார்க்கும் பொழுது சுமார் 40 முதல் 60 விழுக்காடு மாணவர்கள்தாம் தமிழ்மொழியில் தேர்ச்சி பெறுகின்றனர் என்பதை அறிய முடிகின்றது. ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் மிகவும் சிறப்பாகச் செய்வது இந்தப் பாடத்தில் மட்டுமே. ஆகக் குறைவாக அதாவது பூஜ்யம் முதல் 10 விழுக்காடு மாணவர்கள் தேர்ச்சியடையும் பாடமாக அமைவது தேசியமொழிப் பாடம். ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டால் நம் மாணவர்கள் மலாய்ப்பள்ளி, சீனமொழிப் பள்ளி மாணவர்களை விடச் சிறப்பாகச் செய்துள்ளனர். ஆனால் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இதர மொழிப் பள்ளி மாணவர்களை விடத் தமிழ்மொழிப் பள்ளி மாணவர்களின் தரம் மிகக்குறைந்து காணப்படுகின்றது. பொதுவாக நோக்கும்போது மாணவர்கள் தமிழ்மொழிப் பாடத்தில் ஓரளவுக்குச் சிறப்பாகச் செய்திருந்தாலும் மிகப் பிரமாதமான சாதனையெனக் கொள்ள முடியாது. அத்துடன் முக்கியப் பாடங்களான தேசிய மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றில் நம் மாணவர்களின் தரம் மிகவும் தாழ்ந்து காணப்படுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

8. முடிவுகள்

இந்நாட்டில் தமிழ்க்கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறிப்பாகத் தமிழ்ப் பள்ளிகளின் தரங்குறைந்த நிலையை அதனால் ஏற்படும் விளைவுகளை இதுவரை பரிசீலித்தோம்.

அடுத்து நாம் தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்காக என்னென்ன பரிகாரங்கள் காணலாம் என்பதைப் பற்றியும் முக்கியமாகத் தமிழ்க்



"மீன்களுக்குத் தீனி போட்டுட்டியா ராமு!"

குழந்தைகளுக்கு வாழ்வில் நல்ல வாய்ப்புக்களை எவ்வாறு ஏற்படுத்தித் தரமுடியும் என்பதையும் சற்று பார்ப்போம்.

அ. அரசியல் நடவடிக்கைகள்

தமிழ்ப்பள்ளிகள் மட்டுமே இந் நாட்டில் தமிழ்மொழி வளரவும் தமிழ்க் கலாச்சாரம் செழித்தோங்கவும் பாடுபட முடியுமென்று யாரும் எதிர்பார்க்கமுடியாது. இதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று தமிழ்ப் பள்ளிகளில் சேர்ந்து பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் குறைய வாய்ப்புண்டு. இதனால் எதிர்காலத்தில் தமிழ் படிப்போரின் எண்ணிக்கை குறைந்துவிடும். இரண்டாவதாக தமிழ்ப்பள்ளிகளில் சேர்ந்து பயிலும் மாணவர்களில் சுமார் 35 விழுக்காடு மாணவர்கள் ஒன்று முதல் ஆறு வகுப்புக்களைக் கடக்கும் முன்பே பள்ளியை விட்டு விலகிவிடுகின்றனர். மேலும் 25 விழுக்காடு மாணவர்கள் மூன்றாம் பாரம் வரை எட்டுவதில்லை. இவ்வாறு இடையிலேயே பள்ளியை விட்டு விலகும் மாணவர்களின் கல்வித் தகுதி குறைவாக இருப்பதால் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவர்கள் அதிக அளவில் உதவுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

நான் முன்பு சொன்ன இரு நிலைகளும் தமிழ்ப் பள்ளிகளின் ஏழ்மை நிலை, தரம் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்பு உடையன. இதர மொழிப் பள்ளிகளுக்கொப்ப தரத்தை உயர்த்தினால் தமிழ்ப்பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு இடையில் பள்ளியை விட்டு விலகிச் செல்வோரின் எண்ணிக்கையும் குறையும்.

தமிழ்ப்பள்ளிகளின் தரத்தை எவ்வாறு அதிகரிக்கலாம்? அரசியல் நடவடிக்கைகள் மூலம்தான் தரம் உயர நல்ல வாய்ப்புண்டு. அரசியல் நடவடிக்கையென்று கூறும்போது அரசியல் கட்சிகள் மட்டுமே பரிகாரங்களைத் தேடியலைய வேண்டுமென்று கூற நான் வரவில்லை. இ

நாட்டிலுள்ள எல்லா சமுதாய, அரசியல் அமைப்புக்கள், உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு பரிகாரம் காண முயலவேண்டும். முனைப்பான நடவடிக்கைக்குக் காலம் கனிந்து விட்டது என்று நான் நம்புகிறேன். பேசிப் பேசியே காலத்தைக் கடத்தி விட்டோம். தமிழ்ப் பள்ளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நிறைய உள்ளன. அரசாங்க இயந்திரங்கள் ஒன்றிணைந்து ஆக்ககரமாகச் செயல் பட்டால் மட்டுமே தமிழ்க் கல்வி மேம்பாடடைய வாய்ப்புண்டு.

ஆ. கூட்டுப் பள்ளிகள்

அரசாங்க முயற்சிகளுக்குத் துணை செய்யும் வகையில் சமூகம் சொந்தமாகச் சில நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். சத்துணவு வழங்கும் திட்டம் போன்று பள்ளிகளுக்கு நேரடியாகப் பயன்தரும் பல நடவடிக்கைகளில் சமூகம் ஈடுபடலாம்.

கூட்டுப்பள்ளிகள் ஏற்படுத்துவதனால் ஏற்படும் நல்விளைவுகளை உணர்ந்திருந்தும் சிறிய பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும் கூட்டுப்பள்ளிகள் அமைப்பை எதிர்ப்பதாக நான் அறிய வருகிறேன். இது உண்மையாக இருப்பின் தமிழ்க்கல்விக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்களில் இவர்கள் முதன்மையானவர்கள் என்று நான் அழுத்திக் கூற விரும்புகின்றேன். கூட்டுப்பள்ளிகள் அமைப்பினால் தோற்றுவிக்கப் படும் பெரிய பள்ளிகள் தரும் நன்மைகளை உணர்ந்து சமூகம் கூட்டுப் பள்ளி அமைப்பு முறைக்குப் போதிய ஆதரவு தரவேண்டும்.

இ. பெற்றோர்களின் மனப்போக்கு

தமிழ்ப்பள்ளிகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தமிழைக் கற்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்க வேண்டும். பள்ளிகளில் நடத்தப்படும் தமிழ் வகுப்புக்களில் கலந்து கொள்ள பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும். தமிழ்மொழியைப் பற்றியும் தமிழ் இலக்கியம் பற்றியும் பெற்றோர்கள் சாதகமான எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும். மத்தியதரத் தமிழ்க்குடும்பங்கள் தமிழின்பால் அதிக அக்கறை காட்டவில்லை. தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் ஆகியவற்றை அவர்கள் வாங்குவது இல்லை. தமிழ்ப் படங்களுக்கு அவர்கள் செல்லுவது இல்லை. தமிழிசையின்மீதும் அவர்களுக்குப் பற்றில்லை. தமிழ்க் கலாச்சாரத்தின் இக்கூறுகளின்பால் பற்றில்லாக் காரணத்தால் தமிழ்ப் பெற்றோர்கள் தமிழ் தொடர்பான எவ்வித நடவடிக்கைகளிலும் ஆர்வம் கொள்வதில்லை.

ஈ. சொந்த மொழியின் நிலை

இந்தியர்களுக்கு மத்தியில் இந்நாட்டில் ஏராளமான சமுகாய, அரசியல் அமைப்புக்கள் இருக்கின்றன. இதரமொழிப் பள்ளிகளில் தமிழ்க்கல்வி கற்பிக்கப்படும் தன்மையினை இந்த அமைப்புக்கள் மேற்பார்வையிட்டு வரவேண்டும். தேவைப்படும் 15 பெற்றோர்களிடமிருந்து கையெழுத்து வாங்கித் தமிழ் வகுப்புக்களைத் தொடங்க ஏற்பாடு செய்யலாம். இவ்வகுப்புக்களைத் தொடக்குவது தொடர்பான இதரபிரச்சனைகளைச்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைக்க உதவலாம்.

உ. தேசிய மொழி, தமிழ்மொழியின் மேம்பாடு

தமிழ்ப்பள்ளிகளில் தமிழ் மொழியின் தரம் ஓரளவுக்கு உயர்வாக இருக்கின்றது என்று முன்பு குறிப்பிட்டேன். இதர பாடங்களோடு ஒப்பிடுகையில் தமிழ் மொழிப் பாடம் உயர்வாக இருந்தாலும் இதர பாடங்களிலும் நம் மாணவர்கள் உயரிய தரத்தினைப் பெற முயல வேண்டும். தமிழ் மொழிப் பாடத்திட்டத்தினை மேம்படுத்தும் முயற்சிகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன. இதன் விளைவாகப் பொதுவான தரம் உயருமென்று எதிர்பார்ப்போம்.

தமிழ்ப்பள்ளிகளில் மாணவர்கள் தேசியமொழியில் பெறும் தரத்தைக் காணும்போது நிலைமை மனநிறைவைத் தரத்தக்கதாக இல்லை. போதிய திறன் படைத்த ஆசிரியர்கள் தேசியமொழி கற்பிக்கத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுவதில்லை என்பது காரணமாக இருக்கலாம். தமிழ்மொழி, தமிழ்ப்பள்ளிகள் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டுள்ள உங்கள் இயக்கமும் இதர அமைப்புக்களும் கல்வியமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து பரிகாரம் காண முயற்சி செய்யலாம்.

தமிழ்ப்பள்ளிகளில் தேசிய மொழிப் பாடத்திற்கென ஒதுக்கப்படும் நேரத்தின் அளவைக் கூட்டுவதும் அவசியமாக இருக்கின்றது. தமிழ்ப்பள்ளிகளில் தற்போதுள்ள தேசியமொழியின் தரம் குறைவாக இருக்கும் காரணத்தினாலும், இடைநிலைப்பள்ளிகளில் போதனா மொழியாகத் தேசியமொழி இருப்பதாலும் தேசியமொழித் திறனை தமிழ்ப் பள்ளிகளில் அதிகரிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தித்தான் புரிய வைக்க வேண்டுமென்பதில்லை

நம் குழந்தைகள் சிறந்த கல்வியைக்கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற எண்ணம் நமக்கிருந்தால் உள்ள பிரச்சனைகளுக்கு நாம் நிச்சயம் பரிகாரங்கள் கண்டே ஆகவேண்டும்.

ஊ. பத்திரிகைகளின் பங்கு

இந்நாட்டில் தமிழ்மொழி வளரவும், தமிழ்க் கலாச்சாரம் நிலைக்கவும் தமிழ் நேசன், தமிழ் மலர், தமிழ் முரசு, இதர சஞ்சிகைகள் ஆற்றியுள்ள பங்கு பற்றி அதிகம் கூறவேண்டுமென்பதில்லை. என்னைப் பொறுத்தவரை தமிழ் இந்நாட்டில் என்றும்போல் தொடர்ந்து இனிமையாகத்தான் இருந்து வருகிறது. தொடர்ந்து செழித்தோங்கி வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

மலாயாப் பல்கலைக்கழக இந்தியப்பகுதி, வானொலி தொலைக்காட்சி, எழுத்தாளர்கள் உங்கள் அமைப்பையொத்த இதர இலக்கிய அமைப்புக்கள் தமிழின் செழிப்புக்குத் தொடர்ந்து முனைப்பாகச் செயலாற்றி வருவர் என்று எதிர்பார்க்கலாம்.

முடிவுரை

இந்நாட்டில் தமிழ்க்கல்வியின் வளர்ச்சியைத் தேசியக்கல்வி வளர்ச்சிப் போக்குடனே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்க் கல்வி, தமிழ்க்கலாச்சாரம் ஆகியவை தொட்டு, சட்டபூர்வமாக நமக்குள் அடிப்படை உரிமைகளின் துணை கொண்டு கேட்டுப் பெறவேண்டும். பல்வின சமுதாயம் கொண்ட நாட்டின் தேசிய அபிலாசைகளைக் 'கருத்தில் கொண்டே நமது மொழி வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சி நடவடிக்கைகள் அமையவேண்டும்.

தமிழ்மொழியின் மீது எனக்கு அக்கறை உண்டு. அதனினும் மேலாகத் தமிழ் கற்கும் தமிழ்க் குழந்தைகள்பால் எனக்கு அதிகமான அக்கறை உண்டு.

நம் சமுதாயத்தில் காணக்கிடக்கும் எல்லா வளங்களையும் ஒன்று திரட்டி மேலும் சிறப்பாக அமையும் பள்ளிகளைத் தோற்றுவிக்கக் காலம் கனிந்துவிட்டது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். நம் குழந்தைகளுக்கு நாம் நல்ல எதிர்காலத்தை வகுத்துக் கொடுக்க வேண்டிய மாபெரும்/பொறுப்பு நமக்கு இருக்கிறது. இந்த நல்ல நோக்கத்தை அடைய இந்த மாநாடு நல்ல பல செயல் திட்டங்களை வகுக்கும் என்று நம்புகிறேன்.

[தமிழ் இலக்கியக் கழகம், ஜூலை 23, 24இல் கிள்ளானில் நடத்திய 2வது தமிழ்க் கல்வி வளர்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை]

பகை

ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.

தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை.

தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்.

யோவான் 2: 9–11

செப்டம்பர் 11 முதல்
செப்டம்பர் 25 வரை

15 நாள் பலன்

(15 நாள் பலன், பிறந்த தேதியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. ஆகவே, அவரவர் பிறந்த தேதிக்குள் அடங்கிய ராசியில் கண்டுள்ள பலனைத் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம். எடுத்துக்காட்டாக, ஜனவரி 20ஆம் தேதி முதல் பிப்ரவரி 18ஆம் தேதிக்குள் பிறந்தவர்களுக்குக் கும்பம் (ஜன. 20-பிப். 18) என்பதன் கீழுள்ள பலன் பொருந்தும்)

கும்பம் (ஜன 20 — பிப் 18)

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர இதர விஷயங்கள் யாவும் உங்களுக்குச் சாதகமாக அமையும். வரவு செலவுகளை அறிந்து சிக்கனமாக இருக்க முயல்வீர்கள். தொலைதூரப் பயணங்களை ஒத்திப் போடுங்கள். ஏற்கனவே நீங்கள் தொடர்பு வைத்துக் கொண்டிருந்த பெரியவர்களின் ஆதரவு இப்போது கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 13, 19
எச்சரிக்கை நாள்: 21

மீனம் (பிப் 19- மார்ச் 20)

உங்களுக்கு அதிகமாக மகிழ்ச்சியைத் தரும் காலம் இது. வருமானத்திற்குரிய முயற்சிகள் வெற்றியளிக்கும்போது மகிழ்ச்சி தோன்றுதா என்ன? 'அறுத்த கைக்குச் சுண்ணாம்பு கொடுக்கமாட்டாதவனைப்' போல நீங்கள் நண்பர்களுக்குப் பணம் கொடுக்கும் விஷயத்தில் இருந்தாக வேண்டும். மேலதிகாரிகளின் பாராட்டுக்குப் பஞ்சமில்லை.

நல்ல நாட்கள்: 19, 24
எச்சரிக்கை நாட்கள்: 18, 21

மேஷம் (மார்ச் 21 - ஏப். 20)

உறவினர்களுக்காகவோ, நண்பர்களுக்காகவோ நீங்கள் உங்களது நேரத்தை அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும். உங்களின் திறமையை வெளிப்படுத்த இது தகுந்த சமயமல்ல! பணம் சம்பாதிக்கும் அதிகப்படியான முயற்சிகளை ஒத்திப்போடுவது நல்லது. குடும்பத்தில் விண்வாக்குவாதம் ஏற்பட்டு உங்கள் நிம்மதி குலையலாம்.

நல்ல நாட்கள்: 16, 19, 24
எச்சரிக்கை நாட்கள்: 15, 22

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

உல்லாசப் பயணங்கள் மேற்கொள்ளவும், உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று வரவும் வாய்ப்பு ஏற்படும். பண விஷயம் உங்களைப் பொறுத்தவரையில் தற்போது குழப்பமாக இருப்பதால் புதிய தொழில் முயற்சிகளைத் துவக்குவது நல்லதல்ல! குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை நண்பர்களின் ஆலோசனைகள் தீர்த்துவைக்கும்.

நல்ல நாட்கள்: 16, 19
எச்சரிக்கை நாள்: 18

மிதுனம் (மே 21-ஜூன் 20)

சொந்த விஷயங்களைவிட ஊரார் விஷயங்களைக் கவனிக்கும் ஆர்வம் உங்களுக்கு அதிகமாகும். செய்தொழிலில் கடுமையாக நீங்கள் உழைக்கவேண்டிவரும். உங்களின் நுண்ணறிவுக்கும் கற்பனைக்கும் நல்ல மதிப்பு கிடைக்கும். ஆனால் நீங்கள் ஓர் எழுத்தாளராகவோ தொழில்நுட்ப ஊழியராகவோ இருக்கவேண்டும். சொந்தக்காரர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும்.

நல்ல நாட்கள்: 19, 24
எச்சரிக்கை நாட்கள்: 18, 21

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

உறவினர்களிடமிருந்து நல்ல சேதி வரும். சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படும் சாத்தியம் உண்டு. வழக்குகளிற்கும் அதிகமாக பொறுமையுடன் நீங்கள் இருக்கவேண்டிய நேரம் இது. குடும்பத்தில் எவ்வளவு விரைவாக பிரச்சனைகள் உருவாகுமோ அவ்வளவு விரைவாக அவை சுமுகமாகிவிடும்.

நல்ல நாட்கள்: 16, 19
எச்சரிக்கை நாட்கள்: 17, 21

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

குறிப்பாக 23, 24ஆம் தேதிகளில் உங்களுக்குச் சில வகைகளில் ஏமாற்றமோ இழப்போ ஏற்படலாம். எச்சரிக்கையாக இருங்கள். அத்துடன் 23, 27-ஆம் நாட்களில் வாகனமோட்டிகள் கொஞ்சம் கவனமாக இருந்தால் நல்லது. பொருளாதாரத்தில் மேன்மை உண்டாகும். அதற்கேற்ப நண்பர்கள், உறவினர்கள், பெரியோர் முதலியவர்களின் உதவி கிட்டும்.

நல்ல நாட்கள்: 13, 19
எச்சரிக்கை நாட்கள்: 18, 21

கன்னி (ஆக 22-செப் 22)

நண்பர்களின் பொருளாதார ஆலோசனைகள் அத்துணை நன்மை தராது. உங்களின் முயற்சிகளுக்கு உடலாரோக்கியம் தடங்கலாக அமையலாம். அவசரப்பட்டு எந்தவொரு முடிவையும் எடுக்காதீர்கள். குடும்பத்தினர் உங்களோடு விண்வாக்குவாதம் செய்ய நேரும்; கூடுமானவரை தவிர்க்க முயலுங்கள். வாகனப் போக்குவரத்து நன்மை தரும்.

நல்ல நாட்கள்: 16, 19, 24
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

துலாம் (செப் 23-அக். 22)

நீங்கள் கூட்டுவியாபாரம் செய்பவர்களாக இருந்தால் பாகஸ்தர்களுடன் கருத்து வேற்றுமை தோன்ற இடமுண்டு. என்றாலும் பொருளாதாரத்தில் உங்களின் அத்தனை முயற்சிகளும் வெற்றிப் பாதையை நோக்கியே நடைபோடும். திடீர் பணக்காரராக வேண்டுமென்ற ஆசையில் எதையும் செய்ய முயலாதீர்கள். குடும்பம் சம்பந்தப்பட்ட வகையில் நல்ல சேதி வரும்.

நல்ல நாட்கள்: 16, 19
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

இந்த நேரம், குறிப்பாகப் பொருளாதார முயற்சிகளுக்கு நல்ல நேரம். எழுத்தாளர்களாக இருப்பவர்களுக்கு அவர்களின் படைப்புக்கள் மூலம் கூடுதலான வருமானம் வரும். பெரியோர்களின் ஒத்துழைப்பு திருப்திகரமாகக் கிடைக்காது. பொதுவாகக் குடும்பத்தில் அமைதி நிலவும். பொதுச் சேவைகளில் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 13, 15, 16
எச்சரிக்கை நாட்கள்: 14, 24

தனுசு (நவ 23 - டிச. 20)

பணத்தைக் கையில் வைத்திருக்கவோ, எதிலும் முதலீடு செய்யவோ இது ஏற்ற சமயம் அல்ல; வங்கியிலோ, அஞ்சலகத்திலோ போட்டு விட்டுக் 'கப்சிப்' பென்று இருங்கள். வாய்ப்பு வரும்போது பயன்படுத்தலாம். நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகலாம். என்றாலும் பொதுவாக எல்லாரும் உங்களுக்கு அனுசரணையாகவே நடப்பார்கள்.

நல்ல நாட்கள்: 15, 19
எச்சரிக்கை நாட்கள்: 14, 18

மகரம் (டிச 21- ஜன. 19)

பொது நிகழ்ச்சிகள் இன்பத்தைத் தரும். ஏதாவது தலையை உடைக்கும் விவகாரங்கள் இருந்தால் நண்பர்களின் ஆலோசனையை நாடுங்கள்; பலனளிக்கும். கடிதப் போக்குவரத்தினால் எதிர்பாராத நல்ல சேதிகள் வரலாம். உணர்ச்சிவசப்படும் சம்பவங்கள் வர வாய்ப்புண்டு.

நல்ல நாட்கள்: 13, 15
எச்சரிக்கை நாள்: 18

-தஞ்சை நகுலன்

போதனை-சாதனை

"புதிய சமுதாயத்"திற்காக நடிகர் ரஜனிகாந்த்தைப் பேட்டி காணவேண்டுமென்று அவர் நடித்துக்கொண்டிருந்த ஸ்டுடியோவுக்குப் போயிருந்தேன். பேட்டி ஆரம்பமாகும்போது வெண்ணிற ஆடை மூர்த்தி அங்குவந்து சேர்ந்தார்.

"சார்! உங்கள் பத்திரிகைக்காக நான் பேட்டி எடுக்கலாமா?" என்று கேட்டார் மூர்த்தி.

"சரி" என்று நானும் ஒப்புக்கொண்டேன்.

"உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்கின்றேன். ஆனால் அதே சமயத்தில் நீங்களும் அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். அப்போதுதான் பேட்டி புதுமையாக இருக்கும்" என்றார் ரஜனி.

"ஓ எஸ்! தாராளமாகக் கூறுகின்றேன்" என்றார் மூர்த்தி.



மூர்த்தியின் கேள்வி: அடுத்த ஜென்மம்னு ஒன்று இருந்தால் நீங்க என்னவா பிறக்க ஆசைப்படறீங்க?

ரஜனியின் பதில்: டைரக்டர் பாலசந்தர் மாதிரி ஒரு சிறந்த டைரக்டராகப் பிறக்க ஆசைப்படறேன்!

மூர்த்தியின் பதில்: நான் ஒரு நாயாகப் பிறக்கணும்னு ஆசைப்படுறேன்! ஏன்என்றால் அது ஒரு நன்றியுள்ள பிராணி!

மூர்த்தி: நடிகர், நாட்டுப்பணியில் ஈடுபடலாமா?

ரஜனி: ஈடுபடலாம்!

மூர்த்தி: முதலில் வீட்டுப் பணியில் ஈடுபடணும். அதற்கப்புறம் தான் நாட்டுப்பணி!

மூர்த்தி: நீங்கள் புகழுக்கு ஆசைப்படுகிறீர்களா, பணத்துக்கு ஆசைப்படுகிறீர்களா?

ரஜனி: இரண்டுக்கும்!

மூர்த்தி: நான் பணத்துக்குத்தான் ஆசைப்படறேன்! எனக்குப் புகழ் இரண்டாந்தரம்! புகழினால் உபத்திரவம் அதிகம். பணத்தினால் உபத்திரவங்களை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ளலாம்!

மூர்த்தி: காதல் திருமணம் செய்துகொள்ள விருப்பமுண்டா? உங்களுக்கு வரப்போகும் மனைவி எப்படி இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

ரஜனி: விருப்பம் உண்டு! குடும்பப் பாங்கான ஒரு பெண்ணாக அமையவேண்டுமென்று விரும்புகின்றேன்.

மூர்த்தி: எனக்குக் காதல் திருமணம் தேவையா என்ற பிரச்சனைக்கே இடமில்லை! நான் ஏற்கனவே காதல் திருமணம் செய்துகொண்டவன்! இதற்குமேல் நான் ஏதாவது விமர்சனம் செய்தால் என் உடம்புக்கு அது பாதுகாப்பாக இருக்காது!

மூர்த்தி: கடவுளாலேயும் செய்ய முடியாதது எது?

ரஜனி: செத்தவனுக்கு உயிர் கொடுப்பது!

மூர்த்தி: ஒரே ஒரு பக்கமுள்ள காகிதத்தைத் தயார் செய்வது!

மூர்த்தி: உங்களுக்கு ஏதாவது மூடநம்பிக்கை உண்டா?

ரஜனி: கடவுள்மேல் நம்பிக்கை உண்டு! மூட நம்பிக்கை எதுவும் கிடையாது!

மூர்த்தி: எனக்குப் பலமான ஒரு மூடநம்பிக்கை உண்டு. கூடிய சீக்கிரம் நானும் பெரிய நடிகனாகி விடுவேன் என்ற மூடநம்பிக்கை.

மூர்த்தி: நீங்கள் செய்ய நினைத்துச் செய்யமுடியாமற் போனது எது? செய்யமுடியாது என்று நினைத்துச் செய்து காட்டியது எது? செய்தும் பலன் இல்லாமற்போனது எது? பலனற்ற காரியம் என்று நினைத்து பலன் உள்ளதாக மாறியது எது?

ரஜனி: நான் எதைச் செய்யணும்னு நினைக்கிறேனோ அதை மனப்பூர்வமாகச் செய்கிறேன். பலனை எதிர்பார்க்காமல் செய்கிறேன். முயற்சி என்னுடையது. முடிவைப் பார்க்கிறது இல்லை! மேற்கண்ட அந்தக் கேள்விகளுக்கு இது தான் என்னுடைய ஒரே பதிலாகும்.

மூர்த்தி: நான் டாக்டருக்குப் படித்து ஒரு சர்ஜன் ஆகணும்னு ஆசைப்பட்டேன்! ஆகமுடியல்லே! உடலை அறுப்பதற்குப் பதிலா இப்போ நகைச்சுவையை அறுத்துக் கொண்டிருக்கிறேன். செய்யமுடியாது என்று நினைத்துச் செய்துகாட்டியது நான் ஒரு நடிகனானதுதான்! நான் ஒரு நடிகன் ஆவேன் என்ற நினைப்பே கிடையாது! திடீர் என்று ஒரு நாள் நடிகனாகிவிட்டேன்! வக்கீலுக்குப் படிச்சேன், ஆனால் கோர்ட்டில் வக்கீல் ஆகல்லே. எப்போதாவது சினிமாவிலே வக்கீல் வேஷம் போடறேன்!



மூர்த்தி: வாழ்க்கையில் ஒரு மறக்கமுடியாத போதனையை எப்பொழுது எந்தச் சூழ்நிலையில் யாரிடமிருந்து கற்றுக்கொண்டீர்கள்?

ரஜனி: இதுவரையில் எனக்கு அம்மாதிரியான ஓர் அனுபவம் ஏற்பட்டதில்லை. இருந்தாலும் நண்பர் ஒருவர் எனக்குக் கூறிய வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. "நன்மை செய், முடியாவிட்டால் சும்மாயிரு" என்பதுதான் அந்த வார்த்தைகள்.

மூர்த்தி: சாகிறதுக்கு முன்னாலே எங்க அப்பா எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் எழுதியிருந்த சில வரிகள்:

"பணம் மட்டும் ஒருவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்காது. ஆனால் பணமின்மை நிச்சயம் துன்பத்தைக் கொடுக்கும்". இதிலிருந்து நான் புரிந்துகொள்வது என்னவென்றால் குறைவாகப் பணம் இருந்தால் கஷ்டம். அதிகமாகப் பணம் இருந்தாலும் ஆபத்து.

மூர்த்தி: நீங்கள் இதுவரையில் சாதித்தது என்ன?

ரஜனி: புது நடிகனாகி இருக்கிறேன்.

மூர்த்தி: ஒரு குழந்தைக்குத் தந்தையானது.

மூர்த்தி: உங்களிடம் இருப்பதாக நீங்களே எண்ணும் கெட்ட பழக்கம் என்ன?

ரஜனி: சிகரெட் அதிகம் குடிக்கிறேன்.

மூர்த்தி: நடித்துவிட்டுப் பணம் கேட்கக் கூச்சப்படுவது!

— 'செல்வம்